வாரப்பதிப்பு விலை சதம்

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்




மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்


சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

புத்தகம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 1991 பங்குனி திங்கள் 21-ம் நாள் (3—4—1960) ஞாயிற்றுக்கிழமை ஷவ்வால் 6 | இதழ் 39



யாழ்ப்பாணம் தாதிமார் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறுவதற்கு அணிமையில் மாணவிகள் தெரிவு செய்யப்பட்டனர். நேர்முகப் பரீட்சைக்குத் தோன்றுவதற்காக வந்திருந்தவர்களில் சிலரை மேலேயுள்ள படத்திலும் நேர்முகப்பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் கீழேயுள்ள படத்திலும் காணலாம்.

# கலைக்க வேண்டாம் பாராளுமன்றத்தை

## யு. என். பிக்குள்ளேயே பலமான எதிர்ப்புக் குரல்

## டட்லி, ஜெயவர்த்தன கோஷ்டிகளுக்கிடையே மோதல்

(சுதந்திரன் நிருபர்)

"பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி கவர்னர் ஜெனரலுக்கு டட்லி சிபார்சு செய்யக் கூடாது. அவரால் அரசாங்கத்தை நடத்த முடியாவிட்டால் முடிந்தவர்களிடம் கையளித்து விட்டு நடையைக் கட்ட வேண்டும்" என்று யு என். பிக் கட்சியைச் சேர்ந்த ஒரு சாரார் பலமாக எதிர்ப்பு குரல் எழுப்பத் தொடங்கியிருக்கிறார்கள். இதனால் அக் கட்சிக்குள் உள்ளூரப் பலத்த மோதல்கள் ஏற்பட்டு வருகின்றன. எந்த நேரத்திலும் கட்சி தெறிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கத்தைக் கொண்டு இழுக்கக் கூடிய வாக்குப் பலம் இல்லாத பட்சத்தில் தாம் ராஜினாமாச் செய்வதோடு தமது மந்திரி சபையின் ராஜினாமாவையும் கவர்னர் ஜெனரலிடம் சமர்ப்பித்து விடுவேன் என்று பிரதமர் டட்லி யு. என். பி பாராளுமன்றக் குழுவினருக்கு கடந்த வாரம் அறிவித்தார். அப்போது பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி சிபார்சு செய்யத் தாம் எண்ணியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த இரண்டாவது கருத்தை யு. என். பியிலுள்ள பெரும்பாலானோர் இப்போது ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை. அவர்கள் ஒரு கோஷ்டியாகத் திரண்டு எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். எதிர்ப்பு கோஷ்டிக்கு அமைச்சர் திரு. ஜெயவர்த்தன தலைமை தாங்குவதாக அறிய வருகிறது.

பாராளுமன்றத்தைக் கலைத்து மறுபடியும் தேர்தல் நடத்துவதானால் யு. என். பியிலுள்ள பலர் தாம் திரும்பவும் தெரிவு செய்யப் படலாம் என்ற நம்பிக்கை அறவே இல்லாதவர்களாக இருக்கிறார்கள். திரு. ஜெயவர்த்தன கூடக் களனி

(8-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்த் தரகர்கள் தரும் தொல்லை

## வெள்ளைக் காகிதத்தில் ஒப்பமிடச் சொல்கிறார்களே!

## தமிழரசுப் பிரமுகர் சலிப்பு

(சுதந்திரன் நிருபர்)

"தமிழ் பேசும் இனத்தின் தலைவிதியைப்பற்றிச் சிந்தித்துப் போராடுவதைவிட, இடையே குறுக்கிட்டு சமரஸம் என்ற பெயரால் தமிழினத்தை அடிமை இனமாக்கிவிட முயலும் தமிழ்த் தரகர்களுடைய தொல்லை பெரும் தொல்லையாக இருக்கிறது" என்று தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த உயர் வட்டாரப் பிரமுகர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் கூறினார்.

மேலும் அவர் தொடர்ந்து கூறியதாவது:

"தமிழரசுக் கட்சியை எப்படியாவது இழுத்துக் கொண்டுபோய் யு. என். பி. கட்சியுடன் சங்கமமாக்கிவிடும் 'புனித' நோக்கத்துடன் கொழும்பு வாழ் தமிழ் பிரமுகர்கள் பலர் தமிழரசுக் கட்சியை நாடித் தரகர்களாக வருகிறார்கள்.

"அப்படி வருபவர்கள் ஒவ்வொருவரும் தாம் டட்லியின் நண்பர் என்றும், தமிழ் இனத்தின் நல்வாழ்வில் அக்கறைகொண்டவர் என்றும் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

### புத்தி போதம்

"வந்து 'நீங்கள் அனைவரும் யு. என். பி. யுடன் ஒத்துழையுங்கள். டட்லி நல்லவர். அவர் அப்பா மிக நல்லவர். அவர் பாட்டன் மிக மிக நல்லவர். யு. என். பி. கட்சியொன்றுதான் ஆட்சியை நடத்தக்கூடிய கட்சி' என்றெல்லாம் புத்தி சொல்லுகிறார்கள்.

(9-ம் பக்கம் பார்க்க)

தொய்வு (ASTHMA) சங்காரி

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(RICHELET'S PECTORAL)



★ இடைவிடாத இருமல்
★ இளைப்பு
★ மூச்சுத் திணறல்
★ கிர்ர் புர்ர் சத்தம்
★ நெஞ்சுவலி
★ தொண்டை வலி




இவைகளை ஒழித்துக் கட்டுவதில் இணையற்றது. ஈளை நோயினால் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்கக் கூடிய இவ்வற்புத சஞ்சீவி.

எங்கும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன் : 2885)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சிறுகதை இலக்கியம் மேனாட்டு இறக்குமதிச் சரக்கா?

## கதை எழுதுவது எப்படி? எந்த எந்த அம்சங்களை அது கொண்டிருக்க வேண்டும்?

### எழுதத் தொடங்கு முன் அவசியம் அறிந்திருக்கவேண்டிய விவரங்கள்

மொழிக்கு இன்றியமையாதன இரண்டு. ஒன்று இலக்கியம்; மற்றொன்று இலக்கணம். இலக்கியம் முன்னையது; இலக்கணம் பின்னையது. எள்முதற் பொருள்; எண்ணெய் அதனுட் பொருள். எள்ளினின்றும் எடுபடு பொருள் எண்ணெய். அதுபோல் இலக்கியத்தினின்றும் எடுபடு பொருள் இலக்கணம்.

இலக்கியம் இரு கூறுடைத்து ஒன்று செய்யுள்; மற்றொன்று உரைநடை.

செய்யுள் புலவனின் படைப்பு அஃது கற்பனை (Imagination) யில் தோன்றுவது; கற்பனைக் களஞ்சியமாக இலங்குவது; பயில்வார் உள்ளத்தில் உணர்ச்சியை (Emotional)த் தூண்டுவது; செஞ்சொற் சதங்கை; இழுமென சொல்லமைப்பு முறையைத் தழுவி நிற்பது (The best words in the best order); விழுப்பொருளைப்பயப்பது; அடி வரை யறையினையுடையது; எதுகைமோனையால்தனி திகழ்வது; அணி கொண்டு மிளிர்வது; சொல்லாழமும் பொருளாழம் உடையது; எளிமை, இனிமை, தெளிவு முதலியன அதன் உட்கிடக்கை.

#### உரைநடை நூல்கள்

உரைநடை அடிவரையறை இல்லாதது. அதற்கு அணிநலம் வேண்டியதின்று. கருத்தை எளியமுறையில் பிறர்க்குப் புலப்படுத்துவதே அதன் முதல் நோக்கம். அதற்குரியார் இவர் அவர் என்பதில்லை. அஃது யார் மாட்டும் தோன்றுவது; எவர் மாட்டும் காணப்படுவது. இத்துணை எளிய உரைநடை இன்று தமிழகத்தில் பெருகிக் காணப்படுகின்றது. சங்க காலத்தில் செய்யுள் புகழுடன் குன்று நிலைமையைப் பெற்றிருந்தது. கடைச் சங்கச் செய்யுட்கள் நமக்கு இன்று கிடைத்துள்ளன. ஆனால் கடைச் சங்க உரைநடை நூல்கள் இன்று கிடைக்கப் பெறுவதில்லை. உரைநடை நூல்கள் அன்றும் செய்யுட்கள் போல சங்க காலத்தில் நின்றுலவி இருந்திருத்தல் வேண்டுமென்பதற்கு ஒரு சிறிதும் ஐயமில்லை. தொல்காப்பியர் செய்யுளில் 171-ஆவது நூற்பாவில்—

> பாட்டிடை வைத்த குறிப்பி
> னானும்
> பாவினின்று எழுந்த கிளவி
> யானும்
> பொருளொடு புணராப்
> பொய்ம்மொழி யானும்
> பொருளொடு புணர்ந்த
> நகைமொழி யானும் என்று
> உரைவகை நடையே
> நான்கென மொழிப''

என்று நால்வகை உரைநடையைக் குறிப்பிட்டுள்ளார்.

#### இழந்த செல்வங்கள்

எனவே தொல்காப்பியர் காலத்தில் உரைநடை நூல்கள் இருந்தன என்பது அங்கை நெல்லிக்கனியாம். சங்க காலத்திலும் அவ்வுரைநடை வகைகளைத் தழுவி எழுத்தாளர்கள் உரைநடை நூல்களை எழுதியிருத்தல் மெய்யாதல் பெற்றும். ஆனால் தமிழர் செய்த தவக்குறைவால் அவைகளை நாம் இன்று பெற்றோமில்லை கடலில் மூழ்கின பல; ஊற்றுப் பெருக்கால் உவந்தூட்டும் ஆற்றுப் பெருக்கில் அடித்துச் சென்றன சில. தமிழர் இழந்த கலைச் செல்வங்களில் உரைநடை நூல்களும் ஒன்றுதல் வேண்டும்.

#### இறக்குமதிச் சரக்கல்ல

புதினங்கள் (Novels) பொய்புனை கதைகள் (Fictions), சிறு கதைகள் (Short-stories), கட்டுரைகள் (Essays) என்பன உரைநடை நூல்கள். இவைகளைப் பண்டைத் தமிழர்கள் அறியார்கள் என்பது அறியாமையினால் எழுந்த கூற்றே. ஆனால் அவைகளை இன்று கிடைக்கப் பெற்றிலோம் என்பதே உண்மை கதை சொல்வதும் கேட்பதும் தமிழர்க்கே உரிய பழைய முறையாம். இன்றும் நம்மில்லங்களில் இளஞ் சிறார்களுக்குச் சிறுகதைகளை நரைமுதாட்டியர் சொல்வது வழக்கமாக இருந்து வருகிறது. காலப்போக்கில் சிறுகதை எழுதும் வழக்கத்தைத் தமிழன் மறந்தான். எனவே சிறுகதையை இப்பொழுது வெளிநாட்டு இறக்குமதிப் பொருளாகக் கோடல் தமிழனுக்கு இன்றியமையாததாயிற்று.

#### சிறுகதைகள்

எனினும் 'கழிந்தவை தாவிரங்கான்' என்ற முறையில் பழம் பெருமையை மறந்து தமிழன் சிறுகதை எழுதுவதில் முனைந்து அவ் வழக்கத்தை இன்று சிகெனப் பிடித்துக்கொண்டான். திங்கள் தாள்களும் (Monthlies), வாரத்தாள்களும் (Weeklies), நாள்தாள்களும் (Dailies) புற்றீசல்போல் எழுந்தன. அவை துணை புரிந்தன சிறுகதை எழுத்தாளர்கள் பல சிறு கதைகளைத் தமிழகத்தில் வெளியிட்டனர். இன்றும் வெளியிட்டு வருகின்றனர் சில செய்தித் தாள்கள் அவைகளை வெளிப்படுத்திய வண்ணம் இருந்து வருகின்றன. இக்கால மக்களும் சிறு கதைகளில் பேரார்வம் காட்டி வருகின்றனர். செய்தித்தாள்களும், வாரத்தாள்களும் சிறுகதைகளை விரும்பும் மக்கட்கு அவைகளைக் கொடுத்து பொருளீட்ட அவாவுகின்றன. எனவே சிறுகதை எழுத்தாளர்களும் நினைத்த மாத்திரத்திலே சிறு கதைகளைப் புனைந்து வெளிப்படுத்துகின்றனர்.

**ச. கணபதி முதலியார்**
**எம். ஏ.; எல். டி**

#### மேல்நாட்டுச்சிறுகதைகள்

சிறுகதை வாணிகச் சரக்காயிற்று அஃது கலை ஆர்வத்தில் பிறந்ததன்று; கலை நோக்கும் இன்று அதற்கில்லை; தற்கால இலக்கியச் சந்தையிலே சிறுகதை என்ற பொருளுக்குத்தான் நல்லவிலை; அதிக மதிப்பு தற்காலத்தில் சிறுகதை ஓர் மேல் நாட்டுச் சரக்குத்தான். மேல் நாட்டுச் சரக்கைக் கீழ் நாட்டில் தோற்றுவிக்க எண்ணுங்கால் அவ்வயல்நாட்டுச் சரக்கு எப்பொருளைக்கொண்டு எவ்வனம் செய்யப்பட்டது என்பதைச் செய்யப் புகுவார் ஆராய்தல் அவர்களின் முதற்கடமையாகும் அங்ஙனம் ஆராய்தலின்றிக் கீழ் நாட்டுப பண்பிற்கேற்ப,மன நிலைக்கேற்ப அப்பண்டத்தை ஆக்க முற்படுகிறோம் என்று போலி உரை கூறிச் செய்யப் புகுந்தால் செய்யப்போகும் அப்பண்டம் தரத்தில் குறைந்தே காணப்படும் என்பது வியப்பன்று. இவ்வுண்மை நம் தமிழகத்தில் இன்று எழுந்துள்ள சிறு கதைக்குச் சாலவும் பொருந்துவதாகும் மேல் நாட்டுச் சிறுகதை இலக்கணங்களைத் தழுவி நம் தமிழகத்திற்கேற்ப சீர்திருத்தி அமைத்து எழுதின் அஃது பொன்மலர் நாற்றமுடைத்து. இனி மேலை நாட்டு சிறுகதை இலக்கணங்களை ஒருவாறு சந்திப்போம்.

#### குறள்போன்றது

சிறுகதை குறுகத்தறித்த குறள் போன்றது அடியளவில் சிறியதுகுறள்வெண்பா. அஃது எல்லார்க்கும் இயல்வதொன்றன்று. வள்ளுவர் போன்ற கருவில் திருவுடைய, மனமில் ஞானமுடைய முழுதும் கற்றுணர்ந்த பெருந்தகையாளர்க்கே முடிவது சிறுகதை உரைநடையில் ஆக்கப்பெறுவது. அளவில் மிகவும் சுருங்கியது. குறள் போன்று ஒரு சிலர்க்கே அஃது இயல்வது புதினம் அகன்று செல்லும் பான்மையது. சிறுகதை குறுகிய அல்லது சுருங்கிய புதினமேயாம் என்று வேற்றுமை பிரித்தறிய பாட்டா இலக்கிய அறிவில்லா ஏழைகள் கருதுவர். ஆனால் அஃதன்று சிறுகதை இயல்பில் கதை அளவில் நாட்டுப் பாடல் என்ற தெம்மாங்

(10-ம் பக்கம் பார்க்க)

## விஞ்ஞான முன்னேற்றத்தால் கலை உணர்வு குறைகிறதா?

### கிடையாது என்கிறார் தத்துவக் கலைஞர்

### பண்பாட்டுத்துறை வளர்கிறதாம்

விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் இக்காலத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பண்பாட்டைப் பாழாக்குகின்றன என்று சிலர் கருதுகின்றனர். அவை இலக்கியம், வரலாறு, தத்துவம் முதலியவற்றை மக்கள் புறக்கணிக்கச் செய்கின்றன என்றும் அவர்கள் அஞ்சுகின்றனர். இவ்வாறு கருதுவது சரியா? பண்பாட்டையும் பண்பாட்டுக் கலைகளையும் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் அழிக்கின்றன என்று கூறுவது பொருந்துமா?

#### நல்ல வளர்ச்சி

இவ்வாறு கூறுவது உண்மைக்குச் சிறிதும் பொருந்தாது என்று கூறுகிறார் பேராசிரியர் ஜார்ஜ் போவாஸ். அவர் புகழ் பெற்ற கலை விமர்சகர். சிறந்த தத்துவக் கலைஞர். "நமது சமுதாயத்தின் தொழில் நுட்ப அமைப்பு சமுதாயத்தின் பண்பாட்டு ஆர்வத்தைச் சிறிதும் பாதிக்கவில்லை" என்று தத்துவம் முதலிய பண்பாட்டுக் கலைகள் பற்றிய சர்வதேசக் கவுன்ஸிலில் அவர் அண்மையில் கூறினார். 1920-ம் ஆண்டு [illegible] 40 ஆண்டுகளாக விஞ்ஞானமும், கட்டிடக்கலையும், இலக்கியமும் அடைந்துள்ள வளர்ச்சி இதற்கு முன் எக்காலத்திலும் காணப்பட்டதில்லை என்று டாக்டர் போவாய் குறிப்பிட்டார்.

#### கலை உணர்வு குறையவில்லை

நாடு தொழில் மயமாகி வருகிறதெனினும் மக்களின் கலை உணர்வு குறையவில்லை; விஞ்ஞானத்தில் பொது மக்களுக்கு ஆர்வம் மிகுந்து வருகிறதெனினும் இலக்கியம், விரிவுரைகள், கண்காட்சி ஆகியவற்றிலும் விருப்பம் அதிகமாகி வருகிறது என்று கூறி டாக்டர் போவாஸ் அவற்றிற்குச் சான்றுகள் காட்டினார்.

ரேடியோ வந்தவுடன் பண்பாடே அழிந்து விடும் என்று பலர் கருதினர். கிராமபோன் கம்பெனிகள் ஒலித்தட்டுகள் விலையாக மாட்டா என்று அஞ்சின. இசைக் கருவிகள் செய்வோர் தம் தொழிலுக்கு ஆபத்து வந்தது என்று எண்ணினர். இன்று அவ்வித ஐயங்களெல்லாம், அகன்று விட்டன, சிறந்த இன்னிசை இன்று ஒலிபரப்பப்படுகிறது.

பழங்காலத்து இசையையும் பல்லாயிரக் கணக்கானவர்கள் கேட்கின்றனர். இளைஞர் எதிர்காலத்தில் இன்னிசை நிபுணராக விளங்கி, ரேடியோ இசை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் பொருட்டு இசைக் கருவிகள் வாங்குகின்றனர்; இசை பயில்கின்றனர். இளம் எழுத்தாளர் ரேடியோ நாடகங்கள் எழுதுகின்றனர். ரேடியோ பொது மக்களுக்கு பண்பாட்டு ஆர்வம் ஊட்டியுள்ளது.

#### பண்பாட்டுத்துறை பாதிக்கப்படவில்லை

எந்த நாட்டிலும் அமெரிக்காவில் உள்ளவை போன்ற இசைக் குழுக்கள் இல்லை. விரிவுரைகள் அமெரிக்காவில் அதிகமாக நடைபெறுகின்றன; ஆராய்ச்சி அரங்குகளும் நடைபெறுகின்றன.

டெலிவிஷன் வந்ததும் ஒருவகை அச்சம் ஏற்பட்டது. புத்தகம் படிப்போர் தொகை குறைந்து விடும் என்று சிலர் கருதினர்.

ஆனால் உண்மையில் புத்தகங்கள் ஏராளமாக வெளியிடப்படுகின்றன. நூலகங்களில புத்தகங்கள் இரவலாகப் பெற்றுப் படிப்பவர் தொகையும் கூடியிருக்கிறது.

தொழில் நுட்பம், விஞ்ஞானம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பண்பாட்டுத் துறை முன்னேற்றத்தைச் சிறிதும் குறைக்கவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இவ்வாறு டாக்டர் போவாஸ் கூறினார்.

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே




ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக் கூடிய வெகுமதி
மாதத் தவணைக் கட்டணங்களில் பெறக் கொள்ளலாம்;
இலங்கை பூராவும் விற்பனையாகிறது.
உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்சிலால் நடாத்தப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்

குயுக்தி



சு. சிதம்பரம், தலவாக்கொல்லை

கே: மனிதனுக்கு வால் உண்டா?

ப: மனிதனுக்கு வால் உண்டு. ஆனால் வெளியில் தெரிவதில்லை. முதுகு எலும்புத் தொடர் உள்ளேவாலைப் போல் சிறிது நீண்டுதான் இருக்கிறது. இதிலிருந்து ஆதிகாலத்தில் மனிதனும் ஒரு வாலுள்ள பிராணியாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் கணிக்கின்றனர். இதற்கு ஆராய்ச்சி எதற்கு? சில மனிதர்களுடைய நடத்தையைப் பார்த்தால் அவர்களுக்கு வால் இருப்பது நன்ருகத் தெரிகிறதே.

ஃ

தமிழ்ச் செல்வி, சிலாபம்

கே: பெண்கள்தான் நாட்டின் கண்கள் என்ருல் ஆண்கள்?

ப: நாட்டின் கைகள்.

கே: உண்மையான அழகு எதில் உள்ளது?

ப: உண்மையான அழகு உள்ளத்தில் உள்ளது.

ஃ

க. இரத்தினசிங்கம், கிளிநொச்சி

கே: தேர்தல் சம்பந்தமாகச் சபதம் செய்பவர்கள் பெரும்பாலும் மொட்டையடிப்பதாகத்தானே சபதம் செய்கிருர்கள் ஏன்?

ப: நோ இல்லாமல் வெட்டியெறியக்கூடியதும், வெட்டியெறிந்தாலும் பின்னர் முளைக்கக்கூடியதும் மயிரும் நகமும்தான். இதில் மயிரைத் தேர்ந்தெடுக்கிருர்கள். இவ்வளவுதான் அவர்களுடைய தியாகம்.

ஃ

க. சபாரத்தினம், சிறுப்பிட்டி

கே: திரு டட்லி சேனநாயகா 60 பிரதிநிதிகள்தன் கட்சியில் வந்தாலும் அரசாங்கத்தை அமைக்கமாட்டேன் என்று வீருப்புப் பேசினுரே இப்போது எப்படி 50 உடன் ஆலாய்ப் பறந்து பதவியை ஏற்றுக்கொண்டார்?

ப: டட்லி என்ருற்போல் என்ன? பெரிய அரிச்சந்திரனு? அவரும் ஒரு அரசியல்வாதிதானே!

ப குபேரராசா, யாழ்ப்பாணம்

கே: அகில இலங்கை தமிழ் காங்கிரஸார் தமது காரியாலயத்தை ஆனைப்பந்தியிலிருந்து வேறு இடத்துக்கு மாற்றப்போகிருர்களாமே, ஏன்?

ப: அகில இலங்கை ஆனைப்பந்திக் காங்கிரஸ் என்று அந்த ஸ்தாபனம் அழைக்கப்படக்கூடாது என்று அவர்கள் விரும்புகிருர்கள். நல்ல நோக்கம், அப்படியே செய்யட்டும். ஆனால் ஒன்று: ஆனை இறவுக்கப்பாலும் கொஞ்சம் கழுத்தை நீட்டட்டும். அப்போதுதானே "அகில இலங்கை" என்ற பெயரும் பொருத்தமாயிருக்கும்.

ஃ

செல்வி புவனம் பரமநாதன், யாழ்ப்பாணம்

கே: நான் இந்தியா செல்லவிருக்கிறேன். சினிமா நடிக நடிகையரைச் சந்திக்க விருப்பம். தங்களிடம் வந்தால் அறிமுகக் கடிதம் தருவீர்களா?

ப: என் கடிதத்தைவிட என் நண்பர் திரு மயில்வாகனத்தின் கடிதம் தங்களுக்கு அதிகம் பயன்படும். இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பைச் சேர்ந்த திரு மயில்வாகனத்தைத் தெரியாத தமிழ் சினிமா நடிகர் நடிகையர் இருக்க முடியாது.

ஃ

மணிராஜன், குருந்துவத்தை

கே: குயுக்தியாரே என் நண்பர் ஒருவர் அடிக்கடி 'காலம் மாறுப்போச்சு, காலம் மாறிப்போச்சு' என்று சொல்கிருரே இது உண்மையா?

ப: என்றும் அளித்துக் கொட்டிய நெல்லிக்காய் மூடைபோல் சின்னபின்னப்பட்டுக் கிடந்த தமிழ் மக்கள் இன்று ஒன்றுபட்டு, ஒரு முகப்பட்டுத் தங்கள் உரிமைக்காகப் போராடத் தலைப்பட்டுவிட்டார்கள் அல்லவா? காலம் மாறிப்போச்சு என்றுதான் சொல்லவேண்டும்! இல்லாவிட்டால், சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றிய பாராளுமன்றத்தில், சிங்களம் மட்டுமே அங்கு பேசப்பட வேண்டும்

> திருவாளர் குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்.
> த. பெட்டி 1183.
> கொழும்பு-12.

என்று தேமிஸ்போன்ருர் ஊளையிட்ட பாராளுமன்றத்தில், இனிமேல் தலைவராக இருக்கக்கூடியவருக்குத் தமிழுந் தெரிந்திருக்கவேண்டும் என்று தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் நிபந்தனை தெரிவிக்க, சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவந்த அதே சிறீலங்கா சுதந்திரக் கட்சியானது "ஆமா சாமி" போட்டு ஆதரிக்கிறதே, இது எதைக் காட்டுகிறது? காலம் மாறிப்போச்சு என்பதைத் தானே காட்டுகிறது? தமிழ் மக்கள் ஒரு கட்சியில் ஒன்றுபட்டு நின்ருல் காலம் மாறிக்கொண்டே வந்து கடைசியில் பரிபூரண நல்ல காலம் பிறக்கும் என்பது இப்போது நிதர்சனமாகிவிட்டதே.

ஃ

புரட்சி வேலன் கல்முனை

கே: இருபது வயது இளைஞன், அறுபது வயது தாண்டிய கிழவன் இருவருடைய மனோநிலையும் எப்படிப்பட்டது?

ப: ஒருவருக்கு வரப்போகும் மணக்கோலக் காட்சிகள் மனதில் ஊசலாடி மகிழ்வூட்டும். மற்றவருக்கு வரப்போகும் பிணக்கோலக் காட்சிகள் கனவில் தோன்றி கிலியூட்டும்.

ஃ

ச. சிவப்பிரகாசம், மன்டூர்

கே: குயுக்தியாரே தாங்கள் ஒரு குரங்காகப் பிறந்திருந்தால் யாது செய்திருப்பீர்?

ப: எமது இனத்தவர்களை ரொக்கட்டில் வைத்துச் சந்திரமண்டலத்துக்கு அனுப்பும் அநியாயத்தை எதிர்த்து ஒரு ஆகஸ்ட் போராட்டம் நடத்தியிருப்பேன்.

ஃ

க இ தர்மலிங்கம், கோப்பாய்

கே: பாராளுமன்றம் கலைக்கப்படுவதைப்பற்றிச் சந்தோஷப்படுபவர்கள் யாராவது இருப்பார்களா?

ப: ஏன் இருக்கமாட்டார்கள்? இருவர் நிச்சயமாகச் சந்தோஷப்படுவார்கள் ஒருவர் கல்முனையில் போட்டியிட்ட மஷூர் மௌலானு, மற்றவர் காலியில் போட்டியிட்ட தஹநாயகா. இன்னெரு தேர்தல் வந்தால் இவ்விருவரும் பாராளுமன்றத்துள் நிச்சயம் நுழைந்து கொள்வார்களே!

ஃ

க நாகராசா, கம்பளை

கே: கொம்யுனிஸ்டு கந்தையா இப்போது என்ன செய்கிருர்?

ப: பாவம், நல்ல மனிதர். அரசாங்கத்தின் 'பட்ஜட்'டை விமர்சனம் செய்வதில் ஒரு நிபுணர். தோற்றுப் போனுர். தோற்றதிலிருந்து ரொம்பவும் கவலையுற்றுவிட்டார். கொழும்பு இரத்தினம் ஆஸ்பத்திரியில் அவரை வைத்திருக்கிருர்கள். நண்பர் சிவசிதம்பரம் அவரைப் போய்ப் பார்த்து ஆறுதல் கூற வேண்டியது அவசியம்.

ஃ

என். எம். ஜுனைத், கொள்ளுப்பிட்டி

கே: சேர் ராஸிக் பரீத்தின் தோல்வி எதைக் காட்டுகிறது?

ப: கட்சிவிட்டுக் கட்சியும், கொள்கைவிட்டுக் கொள்கையும் மாறும் குத்துக்கரண வீரர்களை முஸ்லிம்கள் கூட வெறுத்து ஒதுக்கத் தயங்க மாட்டார்கள் என்பதைக் காட்டுகிறது.

ஃ

க. இராசேந்திரா, மூதூர்

கே: உலகத்தில் உள்ள மிக அழகான பெண் யார்?

ப: ஒருவனுடைய வாலிப வயதில் கண்களை இறுக மூடிக்கொண்டதும் எந்தப் பெண்ணுடைய உருவம் உள்ளே புகுந்து அரிக்கிறதோ அவளே உலக அழகிகளில் முதன்மையானவள் என்று அந்த வாலிபன் எண்ணுவான்.

ஃ

செல்வி மு. அன்னபூரணி, மல்லாகம்

கே: சினிமாவில் வேண்டும்போதெல்லாம் விக்கி விக்கி அழுகிருர்களே, கண்ணீர் எப்படி வருகிறது?

ப: கண்ணீராவது வருவதாவது? கணவன் செத்தால் கூட நடிகைகளுக்கு கண்ணீர் வராதே. வருவதெல்லாம், வழிவதெல்லாம் 'கிளிசரின்' அம்மா.

# நித்திராதேவி

—பரமஹம்ஸதாசன்—

நஞ்சினை நெஞ்சில் வைத்து,
நாவினில் தேனை வைத்துக்
கஞ்சிக்குக் கதற வைக்கும்
கயவருக் குழைத்த லுத்துப்
பஞ்சுடல் சோர்ந்து, பாயில்
படுத்திடும் எளியோர்க் கெல்லாம்,
அஞ்சலென் றன்பு காட்டி
அணைப்பவர் உன்போல் உண்டோ?

பணக்காரன்-ஏழை, கற்ருேன்-
பாமரன், உயர்ந்தோன்-தாழ்ந்தோன்,
குணக்காரன்-கேடன், ஆண்-பெண்
குழந்தையர்-கிழவர் என்ற
இனப்போரில் கலங்கி வாடும்
இச்சக உயிரை யெல்லாம்,
மனப்பேத மற்றுன் என்பால்
துயிலூட்டி வளர்க்கும் மாதே!

ஆருயிர் அனைத்தும் தூய
ஆண்டவன் முன்பொன் றென்றே
கூறிடும் உண்மை காட்டக்
கோதிலான் விடுத்த தூதே!
ஓரறி வுயிர்கள் தொட்டு
உயர் பகுத் தறிஞர் மட்டும்,
சிருடன் பேத மற்றுச்
செழித்திட வளர்க்கும் நங்காய்!

உன்னருங் கலைஞ ரேனும்,
உயர்தவ ஞானி யேனும்,
திண்ணிய மன்ன ரேனும்,
திகழ்மணிச் செல்வ ரேனும்,
கன்னலும் பாகும் வென்ற
கனிமொழி மாத ரேனும்
நின்னருள் பெற்றி லாரேல்,
நிலத்தில்வாழ்ந் திடுவ தேது?

பொருள், புகழ், மனைவி, மக்கள்,
போகம்பல் கோடி கோடி
மருவிடப் பெற்ரு ரேனும்
மங்கைநீ மனமி ரங்கி
ஒருபொழு தருகணைத்துள்
ளுயிர்க்கின்பம் ஊட்டி லாயேல்,
இருநிலத் தமைதி யேது?
எய்திய தெல்லாம் வீணே!

உண்ணவோ கஞ்சி யின்றி,
உடுத்திடக் கந்தை யின்றி,
அன்னை, நல் அப்ப னின்றி,
ஆதர வெவரு மின்றித்
திண்ணையும் சொந்த மின்றித்
திரிந்தலைந் திடுவ ரேனும்,
மண்ணகத் தாழ்ந்து நங்கி
மகிழ்பவ ரன்றோ வாழ்வார்?

நித்திரைக் கன்னி, உன்பால்
நெஞ்சகம் கலந்த பின்போர்
சக்தியும் புதிய வீறும்
தழைத்திடும் பான்மை யைப்போல்,
தித்திக்கும் மழலை, தேன், பால்,
தெங்கனி மற்றின் பங்கள்
எத்தனை யுண்ட போதும்
எய்தன்றில் லாத தேனோ?

அன்புற்ற நின்கரத்தின்
அரவணைப் பொருநாள் இன்றேல்,
துன்புற்றென் உடலும் நெஞ்சும்
சோர்ந்திடும் நிலைநீ காண்பாய்!
இன்பப்பூந் துயில் அணங்கே!
இரவில்வந் தெனைக் கலந்து
[illegible]
[illegible]

"முஸ்லிம் லங்கா"
(மாதமிருமுறை)
விலை சதம் 10
வருட சந்தா 3-50
ஏஜெண்டு கமிஷன் 25%
எங்கும் கிடைக்கும்
B-1-F21 மெசன்ஜர்வீதி,
(பிளட்ஸ்)
கொழும்பு-12.

அன்பர்களே

நீங்கள் எவ்வளவு நல்ல உணவுகள் சாப்பிட்டாலும் உடல் மெலிந்துகொண்டே போகிறதா? பசியின்மை பல் ஈறு கரைதல், கை கால் நோவு, சோம்பல், சிறுநீருடன் சக்தி போகுதல் என்பன போன்ற வியாதிகளால் கஷ்டப்படுகிறீர்களா? அப்படியானுல் மூன்று விதமான சிகிச்சைகள் தேவை.

உள் சுத்தி, புறச் சுத்தி, இரண சிகிச்சைகள் இச் சிகிச்சைகளுக்கு ஒரே வார்த்தையில் பதில்

ஸ்பேமடோன் கொம்பவுண்ட்
( Spermatone Compound )

ஒரு பிரபல ஜெர்மன் டாக்டரின் மருந்து சீட்டிலிருந்து தயார் செய்த ஒரு அற்புத சக்திவாய்ந்த மருந்தாகும்.

8 அவுன்ஸ் பாட்டில் மருந்தின் விலை ரூ. 3/25
வி. பி. பி. தனி
விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,
டாக்டர்

'மோடர்ன் கிலினிக்'
(MODERN CLINIC)
255, காலி ரோட், கொழும்பு-4.
பம்பலபிட்டிய கன்வன்ட் எதிரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப் பொருளாதாரம்:

# உழவும் தொழிலும் இல்லாமல் கிராமங்கள் செழித்தோங்க வழி இல்லை

## விவசாயிகள் முழுநேர வேளாண்மை தொழிலோடு துணைத் தொழிலும் செய்ய வேண்டும்

## ஆடு வளர்ப்பு ஏற்றதொன்று—எவரும் செய்யக் கூடியது; வாத்து வளர்ப்பு சுலபமானது—நிறைய இலாபந் தருவது

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாட்டிசைத்தார் பாரதியார். ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு, அதிலும் பொருளாதார வளங்குன்றிய நாடொன்று சுயதேவைப் பூர்த்தியடைவதற்கு அடிப்படைச் சாதனங்களாகவிருப்பவை உழவும் தொழிலுமாகும். குறிப்பாக, தொன்மைப் புகழ் இழந்து கிடக்கும் நூற்றுக்கணக்கான கிராமங்கள் மின்னல் வேகத்தில் ஏறுநடைபோட்டு பொருள் வளத்தைப் பெருக்க வேண்டுமெனில் அக்கிராமங்கள் உழவையும் தொழிலையும் ஒருங்கே பெருக்க வேண்டுவது அவசியம்.

கிராமப் பகுதி வாழ் மக்கள் விவசாயப் பொருள் உற்பத்தியுடன் தம் குடும்பத்துக்கு ஏற்ற ஒருசில துணைத் தொழில்களைத் துணை வருவாயைத் தருவதற்காகவும் அமைத்துக்கொள்ள வேண்டும். சிலவேளை குடியானவரிடமிருக்கும் நிலம் பயிர்த் தொழிலுக்கு ஒவ்வாததாகவோ ஒய்ந்துபோனதாகவோ இருக்கலாம்; அவ்வேளைகளில் அவர்கள் துணைத் தொழிலாகக் கைக்கொண்டவற்றை முழுநேரத் தொழிலாகவும் மாற்றியமைத்துக்கொள்ளலாம்.

### துணைத் தொழில்

உதாரணமாக, நம் நாட்டில் பயிர்கள்மூலம் வரும் ஊதியம் பருவ நிலையைப் பொறுத்தது பருவ மழை பொய்க்காது நோய் நொடிகளின்றி பயிர்கள் தப்பினால் விளைச்சல் இருக்கும். அதுவும் அதிலிருந்து வரும் வருவாய் பல மாதங்களின் பின்னரே கைக்கு எட்டும். அதுவரை கிராமக் குடியானவன் வீட்டிலுள்ளவரைப் பட்டினி போட முடியாது. அன்றாடச் செலவுகளுக்குப் பணம்வேண்டும். செலவைச் சரிக்கட்டுவதற்கு கால்நடை வளர்ப்பு; கோழி வளர்ப்பு போன்றவற்றைக் கமஞ் செய்யும் அக்கிராமவாசி துணைத் தொழிலாகக்கொண்டிருப்பான். ஆனால் துர்ப்பாக்கியவசமாக பருவ மழை பெய்யாது பயிர்கள் பட்டுப் போனால், இதுகாறும் துணைத் தொழிலாகக் கொண்டிருந்தவற்றை அவன் முழு நேரத் தொழிலாக மேற்கொண்டு காலங்கடத்த வேண்டியது வரும்.

### தமிழகத்து எடுத்துக்காட்டு

கிராமக் குடும்பம் ஒன்றினால் பயிர்த் தொழிலுடன் பிற தொழில்களையும் கவனித்துச் செய்வது சாத்தியமா? குடியானவனின் கவனம் பல தொழில்களிலும் சிதறிப்போய்விடுமல்லவா? என்ற கேள்வி எழக்கூடும். நம் நாட்டுக் கிராமங்களில் சிறு சிறு துண்டுகளில் வேளாண்மை செய்வோருக்கும் வீட்டுக் கொல்லையில் தோட்டம் அமைத்து வாழ்வோருக்கும் நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானம் குடும்ப சீவனத்துக்குப் பற்றாக்குறையாயிருப்பதால், அவர்களே இரண்டொரு துணைத் தொழில்களைக் கைக்கொண்டு அல்லது சிறு சிறு பண்ணை வளர்ப்பில் ஈடுபட்டுத் தம் வாழ்க்கையை வளம்படுத்துவது அவசியமாகும் மேலும் குடும்பத் தலைவனுக்கு உதவியாக, குடும்பத்தினரனைவருமே இவ்வேலைகளில் உற்சாகமாக உழைப்பதால் குடும்ப வருவாய் பெருகும் பாரத நாட்டிலே உழைப்புமிக்க தமிழ்க் குடியானவர் சிலர் தம் சிறு வேளாண்மையுடன் பல சிறு துணைத் தொழில்களையும் நிறுவி அவற்றின் வாயிலாக ஓரளவு பொருளாதார சுதந்திரம் அநுபவித்து வருவது நமக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

### பிராணி வளர்ப்பு

துண்டு நிலங்களைக் கொண்டு துவண்ட வாழ்வைக் கழிக்கும் கிராமக் குடிமக்களுக்கு பயிர் வளர்ப்பும் பிராணி வளர்ப்பும் போற்றுவதற்கரிய இரு கண்களாகும். இவையிரண்டும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புள்ளவை. ஒன்றில்லாமல் மற்றொன்றின்றேல் கிராம வாழ்க்கையில் பொருள் வருவாய் இராது. கிராமப் பொருளாதாரப் பெருக்கத்திற்கு கைகொடுத்துதவக்கூடிய இருவகையான பிராணி வளர்ப்புப் பற்றி இங்கே காண்போம்.

### ஆடு வளர்ப்பு

முதலாவதாக ஆடு வளர்ப்பைப்பற்றி ஆராய்வோம். உலகெங்கும் விஞ்ஞானரீதியில் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதனையொட்டி ஆட்டுப் பண்ணையையும் நாம் இக்கால முறைக்கேற்ப அமைக்க வேண்டும். ஆடுகளை இறைச்சிக்காகவோ, பாலுக்காகவோ அன்றி கப்பளத்திற்காகவோ நாம் வளர்ப்பதாயிருந்தாலும் அவற்றின் தரத்தை உயர்த்துவதில் நாம் அக்கறை கொள்ள வேண்டும். அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய வெளிநாடுகளிலிருந்து கிடாய்களைக் கொண்டு வந்து நம் நாட்டு மட்டமான ஆடுகளின் தரத்தை உயர்த்த வேண்டும். புதிய முறைகளைப் பின்பற்றி

அ. விஜயன்
விக்டோரியா

தென்னகத்திலே மைசூர் பிரதேசத்திலே ஆடு வளர்ப்பை உயர்த்துவதில் அப்பிரதேச அரசாங்கம் வெற்றிபெற்றுள்ளது. ஈழ நாட்டில் ஆட்டின் இனத்தையும் தரத்தையும் உயர்த்த விரும்பும் கிராம மக்கள் மைசூர் கைவரப் பெற்ற அநுபவத்தை மேற்கொள்வது பயனுடையதாகும். சிறந்த முறையில் ஆடுகளை வளர்த்தால் அவை உருத்தோற்றத்திலும் இறைச்சியின் எடையிலும் பாலின் அளவிலும் சிறந்து விளங்கும்.

### ஆட்டுப் பாலும் ஆட்டிறைச்சியும்

ஆட்டுப் பால் குழந்தைகளுக்கும் நோயினால் மெலிந்து நலிந்து போனவர்களுக்கும் சிறந்த ஆகாரமாகும் ஆட்டுப் பால் இறக்குமதிக்காக நாம் பல்லாயிரக்கணக்கான ரூபாவைச் செலவழிக்கிறோம் பச்சிளங் குழந்தைகளுக்கான புட்டிப் பாலை பிற நாடுகளிலிருந்து தருவிக்கிறோம். இதற்கு மாறாய் நம் நாட்டிலே வெள்ளாடுகளின் தரத்தை உயர்த்தும் முகமாக வட இந்தியாவிலிருந்து சிறந்த வெள்ளாட்டுக் கிடாய்களைத் தருவித்து உள்நாட்டு ஆடுகளின் இனத்தைப் பெருக்கலாம். இன்னும் இறைச்சிக்காக பல்லாயிரக்கணக்கான குலும்பை ஆடுகள் வெளியிடங்களிலிருந்து இங்கு கொண்டுவரப்படுகின்றன. அவற்றின் பொருட்டு இலட்சக்கணக்கான பணத்தை வருடந்தோறும் செலவிடுகிறோம். பாலுக்கான வெள்ளாடுகளையும் இறைச்சிக்கான ஆடுகளையும் கிராமப் பகுதிகளில் மேய்ச்சல் வசதியுடையவர்கள் பெருமளவில் விருத்தியாக்கலாம். கிராமங்களின் பொருளாதாரம் ஓங்குவதற்கு இது ஒரு சிறந்தமார்க்கமாகும்.

### வளர்ப்புக்கு ஏற்ற இடம்

ஆடு வளர்ப்புக்கு ஏற்ற இயற்கை வசதிகளமைந்த இடம் மழை குறைவான மேட்டுப் பிரதேசங்களும் மலை சார்ந்த இடங்களுமா[illegible]கின். இலங்கையிலே ஆடு வளர்ப்புக்கு மலைநாட்டுத் தோட்டப் பகுதிகளே சிறந்த இடமாக இருக்கலாம். நம் நாட்டில் ஆடுகளுக்கான மேய்ச்சல் வசதிகளுக்கு குறைவில்லையென்றே சொல்லவேண்டும் அதிலும் தோட்டப் பகுதியில் மேய்ச்சல் வசதி நிரம்ப உண்டு. ஆடுகள் இப்பகுதியில் நன்றாக செழித்து வளர முடியும்; ஏனெனில் ஆடுகளின் தரத்தை உயர்த்துவதற்கு முக்கிய ஏதுக்களாகிய இருப்பிட வசதியும் உணவு வசதியும் மலைநாட்டில் நல்லபடியாக அமைந்துள்ளன எவ்வாறெனில் ஆடுகளுக்கு ஆகாரமாகிய பசுஞ் செடிகொடிகளும் பச்சைப் புல்லும் ஏராளமாக அங்குண்டு. அவற்றை உண்டு ஆடுகள் கொழுக்கின்றன; நிறைய இறைச்சியையும் பாலையும் தருகின்றன எனவே மலைநாட்டுக் கிராமங்களில் வசிப்போர் ஆட்டு வளர்ப்பில் அதிக அக்கறை காட்டி தம் ஆதாயத்தைப் பெருக்கிக் கொள்வது சிறப்பு, சுலபமுங் கூட.

### விருத்திக்கு வழி

நம் நாட்டில் ஆடுகளின் இனப் பெருக்கத்தை உயர்த்துவதற்கும், அதன் வழியாய் ஆடு வளர்ப்பை ஊதியம் தரும் தொழிலாக்கி பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்வதற்கும் கிராமத்தவர் மனதிற் பதித்துக் கொள்ள வேண்டியகுறிப்புகள் சில உள. முதலாவதாக, நம் நாட்டு ஆடுகளைப் பிற நாட்டிலிருந்து தருவிக்கப்படும் உயர்ந்த ரக கிடாய்களுடன் சோடி சேர்த்துவிடுவது. இதனால் உயர்ந்த இனப் பெருக்கம் சாத்தியமாகும். அடுத்ததாக ஆடுகளுக்குப் பச்சைத் தீவனம் கொடுப்பதுடன், பிண்ணாக்கு, தவிடு, எலும்பு மா முதலிய சத்தான உணவு வகைகளையும் சேர்ப்பது. இறுதியாக ஆடுகள் மழை, பனி, குளிர் ஆகியவற்றின் கொடுமைக்குள்ளாகாது, கொட்டில்களில் காற்றோட்டமின்றி நெருக்கமாகக் கட்டப்பட்டு கஷ்டப்படாது இருப்பதற்காக இவைகளுக்கு நல்ல இடவசதி அமைத்துத் தருவது. இச்சிறு குறிப்புகளைக் கருத்திற்கொண்டு கிராம மக்களில் ஆடு வளர்ப்போர் கருமமாற்றினால், அது அவர்களுக்கு சிறந்ததொரு துணைத் தொழிலாகவோ முழு நேரத் தொழிலாகவோ அமைந்து, அவர்களின் ஆதாயத்தை அதிகரித்து, அம்மக்களின் வாழ்க்கை வளத்தை உயர்த்துமென்பது நிச்சயம்.

### வாத்துப் பண்ணை

இராமங்களில் தம் பொருளாதாரத்தை உயர்த்தத் துடிக்கும் மக்கள் மேற்கொள்ளத் தக்க மற்றவோர் உபதொழில் வாத்துப் பண்ணையாகும். வாத்துப் பண்ணை வைப்பது மிகச் சுலபம். கோழி வளர்ப்பைவிட

(12-ம் பக்கம் பார்க்க)

# 'மூதூரில் தமிழரசு தோற்றால் கூந்தல் களைந்தெறிவேன்'

## 70 வயது மூதாட்டி கண்ணம்மா சபதம்

பாஞ்சாலி சபதம் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். 'விரித்த குழல் முடியேன்' என்று வஞ்சினங் கூறிக் குருக்ஷேத்திரத்தில் துரியோதனன் கூட்டத்தாரைத் திரௌபதி கூண்டோடு அழித்த கதை. பழங் கதை அது.

புதுக் கதை ஒன்று கடந்த தேர்தலின் போது நடைபெற்றிருக்கிறது. தமிழகத்தில் சத்தியவாணி முத்துக்கள் இருப்பது போல ஈழத்திலும் எண்ணற்ற வீரத் தமிழ்க் குலப் பெண்கள் வாழ்கிறார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டு அந்தக் கதை.

### மூதூரில் போட்டி

மூதூர் தொகுதியில் தமிழரசுக் கட்சி அபேட்சகர் திரு. டி. ஏகாம்பரத்தை எதிர்த்து போட்டியிட்ட சுயேச்சை அபேட்சகர்களில் ஒருவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவராவர் அவர் மட்டக்களப்பிலிருந்து மூதூர்த் தொகுதி சென்று குடியேறியவர்கள் தாம் 'ஊரான்' என்ற வகையில் தமக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பலர் அந்த மாய வலையில் முதலில் விழுந்தார்கள்.

### மூதாட்டி முரண்டினார்

கல்லாற்றைச் சேர்ந்த கண்ணம்மா என்ற 70 வயது மூதாட்டி முரண்டிக் கொண்டு நின்றார். தமிழரசுக் கட்சிக்கே தமது ஆதரவு என்றார். 'தமிழன் எங்கு தான் வாழ்ந்தாலும் அவன் தமிழன் தான்-வேறுபாடு இல்லை' என்று கட்சி இலட்சிய முழக்கத்தை துணைக்கழைத்து தம நிலையிலேயே நின்றார். இதனால் குடும்பத்தில் சிற்சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டன.

### கூந்தல் களைந்தெறிவேன்

தள்ளாத வயது மூதாட்டியின் உணர்ச்சி குமுறும் அளவுக்கு மனக் கசப்பு குடும்பத்தில் வளரவே அவர் ஒரு சபதம் செய்தார். "எது நேரினும் சரி. என் கொள்கை விடேன். தமிழரசுக் கட்சிக்காகவே உழைப்பேன். மூதூர் தொகுதியில் தமிழரசுக் கட்சி தோற்றால் என் கூந்தலைக் களைந்தெறிவேன். தலையை முழுமையாக மொட்டை அடித்து விடுவேன்" என்று பகிரங்கமாகப் பிரமாணம் செய்து கொண்டார்.

### சபதம் நிறைவேறியது

மூதாட்டியின் எண்ணம் நேர்மையானது; உள்ளம் தூய்மையானது; சேவை கள்ளமற்றது. நின்ற கட்சியும் மக்கள் நம்பிக்கைக்கு உரியது. அதனால் வெற்றி தமிழரசுக் கட்சிக்கே கிடைத்தது. சபதம் நிறைவேறியது. இது தம்பலகாமத்தில் நடந்தது.

—க. வேலாயுதம்.

உங்கள் நீடித்த எழிலுக்கு
'எலைட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
என்னும் அழகின் அணிகலனை
அணியுங்கள்.
பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நுனிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.
இன்னும் அழுக்குப் பிடியாமல், கருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது
'எலைட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.
குண்டன்மால்ஸ்,
லிமிட்டெட்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உங்கள் தொல்லைகள் துடைக்கும் தொண்டன் நான்"

## மூதூர் முதல் எம். பி.ஏகாம்பரம்

மூதூர்த் தொகுதியின் முதலாவது பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்ட தமிழரசுக் கட்சி அபேட்சகர் திரு டி. ஏகாம்பரம் தம் தொகுதி மக்களுக்கு உருக்கமாக நன்றி தெரிவித்து வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்றில் சில முக்கிய தகவல்களை வெளியிட்டிருக்கிருர்.

அவர் அதில் கூறியிருப்பதாவது:—

### நன்றி

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் மூதூர்த் தொகுதியில் போட்டியிட்ட என்னை உங்கள் முதல் அங்கத்தவராக தேர்ந்தெடுத்து எனக்கும், எனது கட்சிக்கும், இலங்கைவாழ் தமிழினத்தின் உரிமைக்கும் பெருமை தேடித் தந்து விட்டீர்கள். "கந்த மூலமே புசிக்க நேரினும் கடமை தவறவே மாட்டான் தமிழன்" என்ற கற்கண்டுத் தத்துவத்தை சொற்கொண்டு புகுத்தாமல் செயலிலே காட்டி தமிழன் "என்ருேர் இன முண்டு தனியே அவர்க்கோர் குண முண்டு' என்ற உயர்ந்த கருத்தை இந்த அவனிக்கெல்லாம் எடுத்து உணர்த்திய உங்களுக்கு எனது உள்ளம் நிறைந்த நன்றியை உரிமையாக்குகிறேன்.



திரு டி. ஏகாம்பரம்

டன், தாளாத நிலையிலும் தள்ளாடித் தள்ளாடித், தடியூன்றி வந்து எனக்கு வாக்களித்து தமிழரின் எதிர்காலத்திற்கு ஏற்றம் வகுத்துத் தந்திட்ட தாத்தாக்களே! தாய் மார்களே! உங்களுக்கு என் நன்றி.

### தொண்டன்

விடுதலைக் கிளர்ச்சிக்கு வித்திட்ட இத் தினத்திலிருந்து என்னையும், எனது சேவையையும் சொந்தமாக்கிவிட்டீர்கள் என்பது உறுதி "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற பொன்மொழியைக் கருத்தில் கொண்டு உங்கள் மத்தியில் நான் பாராளுமன்ற அங்கத்தவராக அல்ல; பணி புரியும் வேலைக்காரனுக, தொல்லைகள் துடைக்கும் தொண்டனுக உலவி வருவேன் என்பது திண்ணம். வெற்றி பெற்ற மறுகணமே உங்கள் மத்தியில் தோன்ற வேண்டும்; உங்கள் மகிழ்ச்சியில் பங்கு கொள்ள வேண்டுமென்று துடிக்கிறேன், எனினும் கடமை என்னைத் தடுக்கிறது இன்று அரசியலில் தோன்றியிருக்கும் நெருக்கடியின் காரணமாக. தமிழரசுத் தந்தையின் கட்டளையை எதிர் நோக்கி வெற்றி பெற்ற நாம் நிற்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எந்த நிமிடத்திலும் கட்டளை பிறக்கலாமென எதிர் பார்க்கிறோம். உத்தரவு பிறந்ததும் உடனே புறப்படத் தயாராக வேண்டிய கடமை எம்மைக் காத்துக்கிடக்கிறது. ஆகவே உங்கள் மத்தியில் வர முடியவில்லை என்பதற்காக உங்கள் அனைவரினதும் மன்னிப்பைக் கோருகிறேன்.

### செயல் வீரர்களுக்கு

"அடைந்தால் தமிழரசு இன்றேல் பிண முரசு" என்று கொள்கை முழங்கி, அடுக்கடுக்காக அவலல்கள்வரினும் அன்புடன் அதை ஏற்போம்; அன்னையின் நாட்டுக்கு ஊன் உடல் கேட்பினும் உவப்புடன் நாம் சேர்ப்போம் என்று உரிமைக்குரல் எழுப்பி உள்ளத்தால், உடலால், அரும்பணி புரிந்து, வெற்றி தேடித் தந்த பெக்யோர்களே! செயலாற்றிய செம்மல்களே! உங்களுக்குரிய என் நன்றி.

### பெண்மணிகளுக்கு

முத்துச்சரப்பவி பட்டுப் புடவை வேண்டாம்; மூக்கும் காதும் நகை சுமக்கவும் வேண்டாம்; பத்துக் காணி நிலம் வேண்டாம் என்று சத்தான தமிழ்ப் பண் பாடி, அணி அணியாகத் திரண்டு வந்து எனக்கு வாக்களித்து முத்தமிழ் அன்னையின் கழுத்திலே வெற்றி முத்தாரத்தைச் சூட்டி விட்ட கன்னித் தமிழ்ப் பெண்மணிகளே! உங்களுக்கு என் நன்றி.

### லட்சியம்

வரவேற்பு வைபவங்களுக்குச் செலவிடும் நேரத்தை தமிழரின் எதிர்கால விடுதலைக்காகச் செலவிடவேண்டுமென்ற லட்சியத்தைக் கொண்டவன் நான். என்று என்னையும் எனது கட்சியையும் உங்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்தீர்களோ, அன்றே நானும் எனது கட்சியும் உங்களுக்கு உரியவர்களாக மாறி விட்டோம். வெகு விரைவில் உங்கள் மத்தியில் தோன்றி கோபுரம் போல் கொள்கை வளர்த்த உங்களுக்கு என் நன்றியையும் அன்பையும் உரிமையாக்குவேன் என்பது திண்ணம்.

### பெரியோருக்கு

எது போயினும் சரி எங்கள் இன்பத் தமிழ் ஒன்றே போதும் என்ற எண்ணத்து

# பரீட்சை காரியாலயத்தினர் செய்த விஷமச் செயல்

## நாள் தப்பி சிங்கள விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பினர்

## தமிழரசார் தலையிட்டால் நிலைமை சீராகியது--தேதி ஒத்திவைப்பு

பரீட்சைக் கமிஷனர் காரியாலயத்தின் விஷமச் செயல் ஒன்று தமிழ் மாணவர்களிடத்தில் பெரும் ஆத்திரத்தையும் கொந்தளிப்பையும் உண்டாக்கி யிருக்கிறது. தமிழ் ஆசிரியகலாசாலைப் பிரவேசப் பரீட்சைக்கான மனுப் பத்திரங்களை அனுப்புவதில் தாம் கையாண்ட முறை தவறுதான் என்று மாணவர்களும் தமிழரசு எம்பிக்களும் காட்டிய எதிர்ப்புக் காரணமாகக் காரியாலயம் இப்போது ஒப்புக்கொண்டிருக்கிறது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 28-3-60 ஆகும். பத்திரம் தேவையானோர் தம் முகவரியும் முத்திரையும் உள்ள கடித உறைகளை அனுப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது பரீட்சைக் கமிஷனரின் பொதுவான விதியாக இருந்து வருகிறது. ஆனல் 28-3-60 அன்று கூட பெரும்பாலான மாணவர்களுக்கு மனுப்பத்திரங்கள் வந்து சேர வில்லை. பத்திரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களில் சிலருக்கு கடைசி நாளில் சிங்களத்தில் அச்சிட்ட பத்திரங்களே வந்து கிடைத்தன. தமிழில் முகவரி எழுதிய கடித உறைகளிற் கூட சிங்களப் பத்திரங்கள் வந்து சேர்ந்தன.

### தமிழரசுக் கட்சி நடவடிக்கை

இருவழிகளிலும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் முறையீடு தமிழரசுக் கட்சிக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்ததால் கட்சி ரீதியாகவும் எம்பிக்கள் தனித்தனியாகவும் நடவடிக்கையில் ஈடுபட்டனர் விண்ணப்பப்பத்திரம் இது வரை கிடைக்காததால் விண்ணப்பத் தேதியைப் பின் போட வேண்டுமெனத் தமிழரசு வாலிப முன்னணி தந்தி மூலம் வற்புறுத்தியது. திருவாளர்கள் பாலசுந்தரம் எம். பி துரைரத்தினம் எம். பி. அமிர்தலிங்கம் எம். பி. ஆகியோரும் பரீட்சைக் கமிஷனரிடம் தமிழ் மாணவர்களுக்கு அவரது காரியாலயம் செய்த தவறைத் தந்தி மூலம் எடுத்துக் காட்டினுர்கள்.

எதிர்ப்புக் கண்டு அஞ்சிய பரீட்சைக் கமிஷனர் இப்போது மேற்படி விண்ணப்பத்துக்கான கடைசி நாளை ஒரு வார காலம் தள்ளி வைத்திருப்பதாக அறியப்படுகிறது.

கடைசி நேரத்தில் தானும் அந்தப் பத்திரங்களை அனுப்பாமலிருந்தது பற்றியும் தமிழ் மாணவர்களுக்கு சிங்களப் பத்திரங்கள் அனுப்பியது குறித்தும் விசாரணை நடத்தப் படுமா என்ற கேள்வி இப்போது எழுந்திருக்கிறது.

### அடுத்த வாரம் புதிய அம்சம்

பல்தொழில் செய்து நாட்டின் பொருள் வளம் பெருக்கும் பெருந்தகையாளர்கள் பலர் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலே வாழ்கிருர்கள். அவர்கள் செய்யும் தொண்டு அளப்பரியது. ஆயினும் அவர்களைப் பற்றி. அவர்களுடைய வாழ்க்கை முறைபற்றி நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?

நம்மவர்களை நாம் அறிய வேண்டும். நல்ல தொண்டு செய்பவர்களைப் போற்ற வேண்டும்; அவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும்.

எனவே அடுத்த வாரம் முதல் சுதந்திரனில் பல்தொழில் செய்து நாட்டின் பொருள் வளம் பெருக்கும் பெருந்தகையாளர்கள் அறிமுகப் படுத்தப்படுவார்கள் ஒவ்வொரு தொழிலிலும் ஈடுபட்டு குறிப்பிடத்தக்க அளவு சேவை செய்து வருபவர்கள்பற்றிய விவரங்களும் அவர்கள் மேற்கொண்டுள்ள தொழில்கள்பற்றிய குறிப்புகளும் புகைப் படங்கள் சகிதம் பிரசுரிக்கப்படும்.

—ஆசிரியர்

கடிதம்

# நாகநாதன் துரையே நாகாக்க வேண்டுகின்ருேம்

நடந்தேறிய பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி ஈடில்லா வெற்றி பெற்றுள்ளது. தமிழரசுக் கட்சி இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் மனச்சாட்சி என்று உலகறிய நிரூபிக்கப் பட்டுள்ளது. தமிழ் பேசும் மக்களுக்காக உரிமையுடன் சிந்திக்க —குரல் எழுப்ப— செயலாற்ற தமிழ் பேசும் பெருமக்கள் தமிழரசுக் கட்சிக்கு அனுமதி வழங்கி விட்டனர். ஆம்! தமிழரசுக் கொடியின் கீழ் தமிழ் பேசும் மக்கள் ஒற்றுமை கண்டு தலை நிமிர்ந்து நிற்கின்றனர்.

எனவே முன் எக்காலத்திலும் இருந்ததை விட தமிழரசுக் கட்சித் தலைவர்களின் பொறுப்பு இப்போது பன்மடங்கு உயர்ந்துள்ளது. பன்முறை சிந்தித்துப் பழுதற்ற வகையில் செயலாற்றும் கடமை அவர்கள் மேல் சுமத்தப் பட்டுள்ளது. கட்சிக் கட்டுப்பாட்டின் கீழ் துறவிகளுக்குச் சமமான தன் அடக்கத்துடன் ஒன்றுபட்டு உழைத்துத் தமிழினத்தின் வருங்கால வாழ்வுக்கும் புகழுக்கும் உழைக்க வேண்டியது நமது பிரதிநிதிகளின் நீங்காக் கடமையாகி விட்டது.

எங்கள் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் நல்லூர் பிரதிநிதியுமான டாக்டர் ஈ. எம் வி. நாகநாதன் இருக்கிருரே, அவர் தமிழரசுக் கட்சியின் சிருட்டிகர்த்தாக்களுள் ஒருவர். நல்ல அறிவு படைத்தவர். எந்த போராட்டத்திலும் முன்னணியில் நிற்கும் உறுதியுள்ள வீரர். ஆனல் இடையிடையே அவர் கட்சியின் கட்டுப்பாட்டை கவனத்தில் கொள்ளாமல் அறிக்கைகள் வெளியிடுவதில் முந்தி விடுகிருர் எனத் தமிழ் பேசும் மக்கள் வருந்த வேண்டி யிருக்கிறது. ஏனோ இந்தத் தான்தோன்றித்தனம் இவருக்கு?

ஏனைய கட்சிகளைப் போலவே இந்தத் தமிழரசுக் கட்சியும் தலையிருக்க வாலாடும் கட்சியா என்று பிறர் எண்ண இடமளித்துவிடுகிருரே இவர் என்று கவலையுண்டாகிறது.

எந்தெந்தத் தருணங்களில் இவர் இவ்விதம் 'நாடி பார்த்து' அறிக்கைகள் வெளியிட்டிருக்கிருர் என்று எடுத்துச் சொல்வது அவசியமில்லை. பொது மக்கள் அறிந்த விடயமிது. எனவே, தமிழரசுக் கட்சியினதும் தமிழ் பேசும் மக்களினதும் மாசற்ற புகழைக் காக்கு முகமாக வருங்காலத்திலாவது நாகநாதன் துரையே நாகாக்க வேண்டுகின்ருேம்.

த. வடிவனுதன்.
20 ஏ அம்மன் ரோட்,
யாழ்ப்பாணம்.

பணம்! சேமியுங்கள்!! பணம்!!

இன்றே நாஷனல் பாட்டரிகளைப்



பாவிக்க ஆரம்பித்து
அதிக லாபம் பெற்று
ஆனந்தியுங்கள்.
நீடியகாலம் பாவிக்கிறது



விலையோ
மிகக் குறைவு

இறக்குமதியாளர்கள்
எஸ். யூ. முகம்மது ஹாஜியார்,
71, டாம் வீதி, கொழும்பு. ... 7653 ★ 14, மெயின் வீதி, காலி. போன் 525

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சொந்த மொழியில் சொல் இருக்க பிறமொழி வார்த்தை உபயோகிப்பது காட்டுமிராண்டித்தனம்'

## மொழித்துறை வல்லுநர் ஆஸ்டின் பெல்ஸ் கூறுகிறர்

## பாம்பன் சுவாமிகளின் தனித்தமிழ்பணி நனி சிறந்தது - பின்பற்றப்பட வேண்டியது

'ஆங்கில நடை' என்னும் நூலில், ஆஸ்டின் பெல்ஸ் என்ற மொழித்துறை வல்லுநர் ஒரு சிறப்பான கருத்தைத் தெரிவித்திருக்கிறர். அக்கருத்து, மொழித் தூய்மையைக் கெடுக்கும் முயற்சிகளைக் கண்டிப்பதாயிருக்கிறது. இத்தகைய முயற்சிகளைக் குறிப்பிடுவதற்கு அவர் பயன் படுத்தியுள்ள சொல், மிகவும் கடுமையானதாகும். 'காட்டு மிராண்டித்தனம்' என்ற அவருடைய சொல், பல கருத்துக்களை உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. எண்ணத்தை வெளியிடுவதற்குத் தக்க ஆங்கிலச் சொல் இருக்கும்போது, அயல் மொழியிலிருந்து வேருெரு சொல்லை வலிந்து கொள்வதை அவர் கடிந்துரைத்திருக்கிறர். அப்பகுதி இங்குக் குறிப்பிடத் தக்கது. அவர் கூறியிருப்பதாவது:—

"We commit a barbarism if we import a foreign word, when an English word will express our thought as well."

### ஆபத்து

இக் கருத்தைத் தான், தமிழின் இயல்பை மெய்யாக அறிந்த தமிழ் மக்கள் வற்புறுத்தி வருகிறர்கள். எளிய, இனிய, தூய தமிழ்ச் சொற்கள் இருக்கும்போது, இத்தன்மைக்கு மாறுபாடான பிறமொழிச் சொற்களைத் தமிழில் புகுத்துவது, ஒழுங்கான தல்ல என்று அவர்கள் கூறுகிறர்கள். தொல் பழங்கால மொழிகளுள் தொன்மையானதும், தற்கால முன்னேற்ற மொழிகளுள் தொன்மையானதும், தற்கால மொழிகளுள் புதுமை மணம் செறிந்துள்ளதுமான தமிழ் மொழி, இத்தகைய தேவையற்ற குழப்பத்தினுல் வளர்ச்சி யுறுவதற்கு மாருக, தூய்மையற்று சீர்கேடுறு மென்பது அவர்களுடைய எச்சரிக்கையான துணிபு.

இதனுல், பிறமொழிச் சொற்கள் எல்லாவற்றையும் அறவே விலக்க வேண்டும் என்று கூறுவதாகப் பொருள் கொள்வது தவறு. விஞ்ஞானத் துறையில் ஏராளமான சொற்கள் தமிழ் மொழி வரம்பிற்குப் புறம்பானவையா யிருக்கின்றன. அவற்றுள் பலவற்றிற்கு உடன்பாடான தமிழ்ச் சொற்கள் இருக்கலாம்; அல்லது புதிதாக உருவாக்குவதற்கு வாய்ப்புகள் ஏற்படலாம் இவையிரண்டும் இல்லாவிட்டால், அச் சொற்களையே தமிழில் கையாளலாம். இக் காரியத்தைத் தூய தமிழ்ப் பாதுகாப்பாளர்கள் புறக்கணிக்கவேயில்லை. அதற்கு மாருக, இல்லாத சொற்களை ஏற்றுக் கொள்வதற்கு அவர்கள் ஆயத்தமா யிருக்கிருர்கள். அவர்களுடைய நூல்களில், 'புதியன புகுதல்' என்ற முறைக்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன.

டி. ஏ. வி. நாதன்

### பாம்பன் சுவாமிகள்

தமிழ் மொழித் தூய்மையாளர்கள் வற்புறுத்துவதெல்லாம் ஒரே கருத்துத்தான். உள்ள சொற்கள் பயன்படுத்தப்படாமல், உலகவழக்கிழந்து, சிதைந்து மறைந்து விடாமல் பாதுகாக்க வேண்டும் என்ற இக் கருத்திற்கு நேரடியான எதிர்ப்பு இருப்பதற்கு இடமில்லை. இத்தூய்மைச் சீர்திருத்தத்தில் தீவிரப் பங்கு கொண்ட பெரியார்கள் பலர். அவர்களில் ஒருவரை இத்துறை வாயில் குறிப்பிடலாம்.

முப்பது ஆண்டுகளுக்கு முன் மறைந்த இப்பெரியாரின் நினைவு நாள் அணிமையில் சென்னைக்கு அடுத்த திருவான்மியூரில் கொண்டாடப்பட்டது. பாம்பன் சுவாமிகள் என்ற இத் தமிழ்ப் பேரறிஞர், வட சொற்களே யிலாத ஓர் அருந்தமிழ்ச் செய்யுள் நூலை இயற்றியுள்ளார். அமைதியைம்பது என்னும் "சேந்தன் செந்தமிழ்" இந்நூலாகும். இதனேடு சார்ந்துள்ள மற்ருெரு நூல் "புலன் வனப்பு" எனப்படுவது. வட மொழிச் சொற்களில்லாமல் தமிழ் நூல்கள் இயற்றுவது

(11-ம் பக்கம் பார்க்க)


## ஆங்கிலம்
## சிங்களம்

ஆங்கிலம் சிங்களம் தெரியாது என்ற கவலையை ஒழியுங்கள். இன்றேஅற்லஸ் ஹோலில் ஆங்கிலம் சிங்களம் தபால்மூலம் கற்று வாழ்வில் உயர்வடையுங்கள். இன்றே இலவச விபரங்கட்கு எழுதுங்கள்.



## ஆசிரிய கலாசாலைப்
## பிரவேசப்பரீட்சை 1960

இப்போட்டிப் பரீட்சைக்கு இன்றே படிக்கத் தொடங்குங்கள்.

- பொது விஞ்ஞானம்
- தூய கணிதம்
- தமிழ்ப் பாஷை
- சரித்திரம் / பூமிசாஸ்தி
- பொது விவேகம்
- எண் கணிதம்



## ஜீ. சி. ஈ.

ஆகஸ்ட்/டிசம்பர் மாதங்களில் நடக்கும் கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி பெறுவது நிச்சயம் பாடத் திட்டம் / பரீட்சை விதிகள் உள்ளடங்கிய விபரங்கள் இலவசமாக அனுப்பப்படும்.

விபரங்கட்கு



## அற்லஸ் ஹோல்

723, மருதானை ரோட், கொழும்பு.


வரிசை: 2 கலைஞர்: 12

அறிமுகப்படுத்துகிறோம்



பகவதி கமலா

# இசைச் சகோதரிகள்
# கமலா ஹரிஹரன்
# பகவதிரங்கராஜன்

( காந்தன் )

"பழைய சங்கீத வித்துவான்கள் கலை வளர்ப்பதை இலட்சியமாகக் கொண்டு அதில் ஈடுபட்டார்கள். ஆனுல், இப்போது அத்துறையில இறங்குபவர்களில் அநேகர் பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் தான் அதைப் பயில்கிருர்கள்." — இப்படிச் சங்கீதத் துறை பற்றித் துணிகரமாகக் கருத்துத் தெரிவிப்பவர்கள் வேறு யாருமல்லர்; இசைத்துறையில் ஞானமும், கலை வளர்க்கும் இலட்சியத்தில் தூய்மையும் கொண்ட திருமதி கமலா ஹரிஹரன்— திருமதி பகவதி ரங்கராஜன் சகோதரிகள் தாம்.

சகோதரிகள் இருவரும் பாரதம் தந்த புதல்விகள். கடந்த 15 ஆண்டுகளாக ஈழத்தை வாழும் இடமாகக் கொண்டு இங்கு அக்கறையுடன் கலைப்பணி புரிந்து வருகிருர்கள். கொல்லத்தைச் சேர்ந்த ஹரிஹர ஐயர் —கமலாம்பாள் தம்பதிகள் தான் இவர்களது பெற்ருேர். பகவதி மூத்தவர்; கமலா இளையவர். இளவயதிலேயே இசை, வயலின் ஆகிய வற்றில் நன்கு பயிற்சி பெற்றுள்ளார் பகவதி. ஆனுல் இலங்கை வந்தபின் கணவர் காட்டிய அக்கறைதான் கமலாவை இசையுடன் இணைத்து வைத்துள்ளது கொழும்பிலுள்ள பிரபல வழக்கறிஞர் திரு ஹரிஹர ஐயரது மனைவி தான் கமலா. திருமதி பகவதி இப்போது இந்தியன் ஹைகமிஷன் காரியாலயத்தில் பணியாற்றுகிருர். அவரின் கணவர் பல ஆண்டுகளுக்கு முன்னர் காலமாகி விட்டார்.

"இசைத்துறையில் எமது ஈடுபாடு இலங்கை வந்தபின்னர்தான் பலம் பெற்றது. நமது கலைவளர்ச்சிக்கு ஆரம்பத்தில் [illegible] மகாராஜன், கே. கனகரத்தினம், தேவராசன் ஆகியோரை மறந்துவிட முடியாது" எனச் சகோதரிகள் உள்ளம் திறந்து நன்றி பொங்கக் கூறுகிருர்கள்.

இவர்களின் முதல் சங்கீத அரங்கேற்றம் வெள்ளவத்தை ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனில் தான் நடைபெற்றது. தொடர்ந்து ஆடிவேல் விழாவின் போதும் விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்ற இசையரங்குகளிலும், பல கச்சேரிகளைச் செய்துள்ளனர். கண்டியிலும் இவர்களது இசைக் கச்சேரிகள் நடைபெற்றுள்ளன. இன்று கொழும்பில் ஏற்பாடு செய்யப்படும் நடன நிகழ்ச்சிகள், நாட்டிய அரங்கேற்றங்கள் ஆகியவற்றிற்கு இவர்கள் பதம் பாடினுல்தான் அவை சோபிக்க முடியும் என்ற அபிப்பிராயம் கலாரசிகர்கள் மத்தியில் நிலவும் அளவுக்கு இவர்கள் பிரபல்யமடைந்திருக்கிருர்கள். கம்பீரமான கோகிலத் தொனியில் கமலா ராகத்தை எடுக்க, பகவதியின் குழைவான குரல் அதைத் தழுவிச் செல்ல, கேட்பவர்கள் அதில் லயித்துப் போய் விடுகிருர்கள்!

இசையில் மட்டுமல்ல; இலக்கியம், சமூக சேவை முதலிய துறைகளிலும் இவர்களுக்கு மிக ஈடுபாடுண்டு. பத்திரிகைகளுக்கு மாதர் சம்பந்தமான கட்டுரைகள் பலவற்றை எழுதியும், வானெலி நாடகங்களில் நடித்துமிருக்கிருர்கள் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவையில் தாதிகளாகவும் இவர்கள் கடமை புரிவதுண்டு.

"பெண்ணுக்கு வீட்டில் கணவருக்கும் குழந்தைகளுக்கும் செய்ய வேண்டிய கடமைகள் தாம் முதலில்; பிறகு நேரமிருந்தால் மட்டுமே வெளிச் சேவைகள்" என குடும்பப் பெண்ணுக்கு இலக்கணம் கூறி, அதற்கமைய வாழ்க்கை நடத்தும் கமலா, தமக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தை, வாரா வாரம் இலங்கை வானெலி மாதர் பகுதியில் கலந்து கொள்வதிலும் 'வீரகேசரி' பெண் குரல் பகுதியைச் சிறப்பாக நடத்துவதிலும் பயன் படுத்துகின்ருர்.

திருமதி பகவதிக்கு இரண்டு பெண்கள். திருமதி கமலாவுக்கு 2 பெண்களும் ஒரு ஆணுமாக 3 குழந்தைகள்.

"கலைத்துறையில் இலங்கைத் தமிழர்கள்—இந்தியத் தமிழர்கள் என்ற வேற்றுமை கூடாது கலைவளரப் போட்டி இருக்கலாம்; பொருமை கூடாது. ஆக்கபூர்வமான விமர்சனம் தேவை. 'சுதந்திரனி'ன் துணிச்சலான விமர்சனம் வரவேற்கப்பட வேண்டியதே" என அபிப்பிராயப்படும் சகோதரிகள் ஜி. என். பாலசுப்பிரமணியம, சடகோபன், என். வி வசந்த கோகிலம், எம். எஸ். சுப்புலட்சுமி, என். சண்முகரத்தினம், மணக்கால் ரங்கராஜன் ஆகியோரது இசையை மிகவும் விரும்பி ரஸிக்கிருர்கள்.

பகவதிக்குப் பிடித்தவை: சண்முகப் பிரியா, ரஞ்சனி ராகங்கள், கமலா லட்சுமணன் நடனம், பின்னல் வேலை, மல்லிகைப் பூ, ஆனந்த விகடன், ரீடர்ஸ் டைஜஸ்ட்.

பிடிக்காதது: தற்புழ்ச்சி.

கமலாவுக்குப் பிடித்தவை: சங்கராபரணம், கல்யாணி ராகங்கள்; கிழைத்தேய, மேலைநாட்டு நடனங்கள், சுசீலா, சீர்காழி கோவிந்தராஜன் பாடல்கள், இ. வா. ஜ; கலைமகள்; கலை.

பிடிக்காதவை: அரட்டை, பொய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல்:

# மனைவி நடத்தை தவறியவள்—குழந்தை தம்முடையதல்ல என்று தந்தை வழக்கு தாக்கல் செய்தால்....?

## இரத்தப் பரிசோதனை தேவைப்படும் அப்புறந்தான் தீர்ப்பு வழங்கப்படும்

—o—

## குருதி பற்றிய ரஸமான செய்திகள்

இரத்தக் குழாய்கள் வழியாக நம் உடலில் ஓடும் குருதி சிவப்பு நிறமுள்ள ஒரு திரவம்; இதயம் சுருங்கி விரிவதால் இரத்த ஓட்டம் ஏற்படுகிறது; இளம் மஞ்சள் நிறமான பிளாஸ்மாவும், அதில் மிதக்கின்ற வெள்ளை, சிகப்பு நிற அணுக்களும் இரத்தத்தின் பகுதிப் பொருட்கள் என்பன போன்ற பல விஷயங்கள், அறிவியல் பயிலும் உயர் நிலைப் பள்ளி மாணவனுக்குக் கூடத் தெரியும். இவற்றைத் தவிர இரத்தத்தைப் பல விஷயங்கள் நம்மில் பலருக்கே தெரியாது என்பதிலே கருத்து வேறுபாடு இருக்க முடியாது

### இரத்த தானம்

உதாரணமாக, இரத்த தானம் என்பதைப்பற்றி அடிக்கடி கேள்விப்படுகிருேம் இதைப்பற்றி நமக்கு எவ்வளவு தெரியும்? நம் உடலில் போதுமான அளவு இரத்தம் இருக்க வேண்டும். பெரிய 'ஆபரேஷன்கள்' செய்யும் போதும், பலத்த காயங்களாலும் உடலிலிருந்து பெருமளவில் இரத்தம் வெளியேறி விடலாம். இத்தகைய சேதம் சில சமயங்களில் நோயாளியின் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கலாம். அப்போது, வேறு ஒருவரின் இரத்தத்தை எடுத்து நோயாளியின் உடலுக்குள் செலுத்துகிருர்கள், இதை நாம் "இரத்தம் பாய்ச்சுதல்" (Blood Transfusion) என்றும் கூறலாம். யாருடைய இரத்தத்தை வேண்டுமானுலும் நோயாளிக்குக் கொடுத்துவிட இயலாது. இரத்தம் பாய்ச்சுமுன், நோயாளியின் (Recipient) இரத்தத்தையும் யாரிடமிருந்து இரத்தம் எடுக்கப்படுகிறதோ அவரது (Donor) இரத்தத்தையும் சரியாகச் சோதனை செய்த பிறகுதான் இரத்தம் பாய்ச்சுவதைப் பற்றி முடிவு செய்கிருர்கள். இத்தகைய சோதனைகள் ஏன் செய்ய வேண்டும்? அதுவே ஒரு பெரிய கதை!

### பழைய முறை

சென்ற நூற்றுண்டில் மருத்துவர்கள் எல்லோருடைய உடலிலும் ஒரே வகையான இரத்தம் தான் ஓடுகிறது என்று கருதினர். எனவே, ஒருவனுக்கு இரத்தம் தேவைப்பட்டபோது, வேறு யாரிடமிருந்து வேண்டுமானுலும் இரத்தத்தை எடுத்து நோயாளியின் இரத்தக் குழாய்களில் பாய்ச்சினர். இவ்வகையான சிகிச்சையால் சில நோயாளிகள் பிழைத்தனர்; பலருக்கு இந்தச் சிகிச்சையே ஆபத்தாக முடிந்தது. ஒரே சிகிச்சையால் எதிர்மாருன இரண்டு வகையான பலன்கள் ஏற்படுவதுடன் காரணத்தை அவர்களால் அறிந்து கொள்ள இயலவில்லை, அது புதிராகவே இருந்தது.

### புதிய கண்டுபிடிப்பு

காரில் லாண்ட்ஸ்டீனர் (Karl Landstesner) என்பவர் வியன்னுவைச் சேர்ந்த ஆஸ்திரிய விஞ்ஞானி. சென்ற நூற்றுண்டின் இறுதியில், செய்த இடையருத ஆராய்ச்சியின் பயனுக அவர் புரியாத புதிருக்கு விடை கண்டு, 1900-ல் வெளியிட்டார். இரத்தத்தை உறைந்து போகாமல் நீண்ட காலத்துக்கு சேமித்துவைக்கும் முறையைக் கண்டு பிடித்ததும் அவர்தான். இரத்தம் பாய்ச்சுதலில் ஏற்பட்ட சிக்கலை விலக்கிய அவருடைய கண்டு பிடிப்பிற்காக 1930-ல் அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

### இரத்தப் பிரிவுகள்

இரத்தத்தை அடிப்படையாக வைத்து மனிதர்களை நான்கு வகையாக லாண்ட்ஸ்டீனர் பிரித்தார். A, B, AB, O என்ற நான்கு வகையான இரத்தப் பிரிவுகள் (Blood Groups) உள்ளன. A என்ற பிரிவைச் சேர்ந்தவரது உடலுக்குள் A பிரிவு இரத்தம் பாய்ச்சலாம்; B பிரிவு இரத்தத்தைப் பாய்ச்சினுல் A யும் Bயும் கலப்பதால் இரத்தம் உறைந்து போய் நோயாளி இறக்க நேரிடும். ஆனுல் O பிரிவு இரத்தத்தை எல்லா வகையான மனிதர்களுக்கும் பாய்ச்சலாம். A B பிரிவைச் சேர்ந்தவருக்கு எப் பிரிவையும் சேர்ந்த இரத்தத்தைப் பாய்ச்சலாம். இதைப்போல, குறிப்பிட்ட இரத்தப் பிரிவைச் சேர்ந்தவருக்கு இன்ன பிரிவு இரத்தம்தான் கொடுக்கப்படவேண்டும் என்கின்ற நியதி இருக்கிறது. மருத்துவர்கள் அதன்படிதான் இரத்தம் பாய்ச்சுகிருர்கள்.

### வழக்கில் அறிவியல்

இரத்தம் பாய்ச்சுவதற்கு மட்டுந்தான் இரத்தப்பிரிவு பற்றிய விவரங்கள் உதவுகின்றன என எண்ணவேண்டாது மேலை நாட்டில் குழந்தைகளின் பிறப்பில் ஐயப்படுகின்ற சில வழக்குகள் நீதிமன்றத்துக்கு வருவது இயல்பாகிவிட்டது. குறிப்பிட்ட குழந்தை தனக்குப் பிறக்கவில்லை என்று வழக்காடுபவர் ஒருவர்; தன் மனைவி நடத்தை தவறியவள் என்பது அவருடைய கட்சி இது ஒரு சிக்கலான வழக்கு. நீதிபதி சட்டத்தைத் துணைக்கழைப்பதில் பயனேதும் இல்லை; அதற்கு மாருக அவர் அறிவியலின் துணையை நாடுகிருர். அதன் மூலம் உண்மையை அறிந்து தீர்ப்பளிக்கிருர்.

### குழந்தையின் பெற்றேரை அறிய வழி

சம்பந்தப்பட்ட தந்தை, தாய், குழந்தை மூவரின் இரத்தப் பிரிவுகளையும்கண்டு பிடிக்கிருர்கள். தாய் A பிரிவைச் சேர்ந்தவள் என்று வைத்துக் கொள்வோம். தந்தை O பிரிவைச் சேர்ந்தவனுல், குழந்தை A அல்லது O பிரிவாகத்தான் இருக்க வேண்டும். குழந்தையின் இரத்தம் B பிரிவைச் சேர்ந்ததாக இருந்தால் O பிரிவைச் சேர்ந்தவர் உண்மையான தந்தை அல்லர் குழந்தை வேறு ஒருவருக்குத்தான் பிறந்திருக்கிறது மேற்கண்ட முடிவின் படி கணவனின் கட்சி வென்றுவிடும். மனைவி நடத்தை தவறியவள் ஆவாள். இவ்விதமாக இரத்தப் பிரி

(15-ம் பக்கம் பார்க்க)

### பாட்டியின் பிடிவாதம்




தள்ளாத வயதிலும் தாம் வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று தமது உரிமையை நிலைநாட்டப் பிடிவாதம் செய்த தமிழ் மூதாட்டியைத் தமிழரசுத் தொண்டர்கள் நாற்காலியில் இருத்தித் தூக்கிச் செல்கிருர்கள் "உயிர் போகும்வரை வீட்டுக்கு ஓட்டளிக்கும் என் உரிமையை விட்டுக் கொடேன்" என்று பொக்கை வாயால் முழங்கிய இம் மூதாட்டி தமிழரசுத் தந்தையின் காங்கேசன்துறைத் தொகுதியைச் சேர்ந்தவராவர்.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, படர்தாமரை, சொறி, தேமல், நெஞ்சு எரிவு, நீரேகம் சாந்தம், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். தினசரி சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை;

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனுமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


# புதையுண்ட பழம் பெரும் நகரம் கண்டுபிடிக்கப்பட்டது

## மொகஞ்சதாரோ, ஹாரப்பா நாகரிகச் சாயல் தெரிகிறதாம்

ஆமதாபாத்திற்கு அருகே 48 மைலில் லோத்தல் என்னும் இடத்தில் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினர் மேற்கொண்டிருந்த பழம் பொருள் கண்டு பிடிப்பு வேலைகள் பூர்த்தியாகிவிட்டன.

கடந்த 28 ஆண்டுகளில் இத்துறையினர் மேற்கொண்ட வேலையில் இதுவே மிகப்பெரியதாகும்.

### புதையுண்ட நகரம்

மொகஞ்சதாரோ, ஹாரப்பா ஆகிய புதைந்த நகரங்களைப் போன்று இவ்விடத்திலும் மிகப் பெரிய புதையுண்ட நகரம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதுவும் ஹாரப்பா நாகரிகத்தையே காட்டுகிறது.

இந்திய சரித்திரத்தின் இருண்ட பகுதிகளை விளக்கும் எண்ணற்ற தொல் பொருள்கள் இங்கு கிடைத்[illegible] சுமார் 17,000 பண்டைப் பொருள்கள் பற்றி குழுத் தலைவர் திரு. எஸ். ஆர். ராவ் அறிக்கை தயார் செய்கிருர்.

### நாகரிகத்தின் சாயல்

கிறிஸ்து பிறப்பதற்கு 1500 ஆண்டுகளுக்கு முன்பே முடிவுற்றதாகக் கருதப்பட்ட ஹாரப்பா, மொகஞ்சதாரோ நாகரிகம் மேலும் 500 ஆண்டுகள் செழிப்புற்றிருந்ததாக இவ்விடத்தில் புதையுண்ட நகரம் தெரிவிக்கிறது.

நகர அமைப்பு ஆச்சரியப்படும்படியான ஒழுங்குடன் காணப்படுகிறது. வீதியின் இரு மருங்கிலும் வரிசையாகக் கட்டப்பட்ட வீடுகளையுடைய நாலு தெருக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. குளிக்கும் அறை, பூமிக்கடியில் செல்லும் குழாய்ச் சாக்கடை அமைப்பு ஆகியவையும் தெரிந்தன.

சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட துறைமுகப் பகுதியானது பன்னெடுங்காலத்திற்கு முன்பே மேற்குக் கரையில் மக்கள் கடல் போக்கு வரத்து மேற்கொண்டிருந்த சாதனையைக் காட்டுகிறது.

### அக்கினி வணக்கம்

செங்கல் சுவர் அமைப்பு, மரத்தைக் குடைந்து அமைத்த வாய்க்கால் ஆகியவையும் காணப்படுகின்றன. இங்கு வாழ்ந்த மக்கள் நெருப்பை வணங்கி வந்ததாகவும் தெரிகிறதாம். இறந்த உடல்களைப் புதைக்கும் வழக்கமே இருந்து வந்திருக்கிறது. ஜோடியாக உடல்கள் புதைக்கப்பட்டிருப்பதைக் கண்ணுறும் போது 'சதி' என்று கூறப்படும் உடன் கட்டை ஏறும் பழக்கம் இருந்திருக்குமோ என்று தோன்றுகிறது. இதன்படி கணவன் இறந்தால் மனைவியும் உடன் புதைக்கப் பட்டிருக்க வேண்டும்.

### முத்திரைகள்

மாக்கல், ஓடு ஆகியவற்றினுல் செய்யப்பட்ட வேலைப்பாடமைந்த சுமார் 200 முத்திரைகளும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இவை ஹாரப்பா மொகஞ்சதாரோவில் காணப் பட்டவை போன்றே தோன்றுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1960 ஏப்ரல் மாதம் 3-ந் தேதி

194ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.
தொலை பேசி எண்: 3411. த பெ 1183

# யாரோடு ஒத்துழைப்பது?

"இலங்கை ஒரு சர்வ சிங்கள நாடு. தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் இடமேது? தமிழ் பேசும் மக்களோ, அவர் தம் பிரதிநிதிகளோ நமக்கு எதற்கு? அவர்கள் இல்லாமலே நாம் அரசாங்கத்தை அமைக்கலாம், ஆட்சியை நடத்தலாம், அதிகாரத்தைச் செலுத்தலாம்—"

மேற்கண்டவாறு எண்ணி இறுமாந்து, தமிழ் பேசும் மக்களை ஒரு புறமாக ஒதுக்கி விட்டிருந்த வகுப்பு வாத சிங்கள அரசியல் தலைவர்களுக்கு இப்போதுதான் ஒரு பெரிய தலையிடி உருவாகியிருக்கிறது. தமிழ் பேசும் மக்களுடைய பிரதிநிதிகளைச் சேராமல் அரசாங்கம் அமைக்க முடியாத ஒரு பொறித் தட்டான நிலையில் சிக்கி அவர்கள் தவியாய்த் தவிக்கிறார்கள்.

இப்படியான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி அகம்பாவம் கொண்டிருந்த சிங்கள அரசியல் வாதிகளுக்குப் புத்தி புகட்டிய தமிழ் பேசும் மக்களைப் பாராட்டுகிறோம். ஒரே இலட்சியத்தோடு ஒன்றாக நிற்கக் கூடியவர்களான தமிழரசுக் கட்சி அபேட்சகர்களையே ஒற்றுமையாகத் தேர்ந்தனுப்பியமையினாலேயே இத்தகைய ஒரு மதிப்பு வாய்ந்த நிலை தமிழ்ப் பேசும் மக்களுக்கு ஏற்பட்டது.

தமிழ் பேசும் மக்கள் மேலுந் தொடர்ந்து ஒரே கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகளைத் தேர்ந்து அனுப்புவார்களானால் நிச்சயமாக நாம் இழந்த உரிமைகள் அனைத்தையும் இன்றில்லா விட்டாலும் எதிர்காலத்தில் என்றாவது ஒரு நாள் தலை நிமிர்ந்து நின்று வாதாடிப் பெற முடியும் என்பது திண்ணம்.

இன்று உருவாகியுள்ள அரசியல் சூழ் நிலையில் தமிழரசுக் கட்சி எப்படி நடந்து கொள்வது என்பது ஒரு சிக்கலான பிரச்னையாகும். கிடைத்திருக்கும் அரிய சந்தர்ப்பத்தைத் தமிழரசுக் கட்சியினர் எப்படிப் பயன் படுத்தப் போகிறார்கள் என்பதில் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் பெரிதும் தங்கியிருக்கிறது என்று சொல்வது தவறாகாது.

எனவே தமிழரசுக் கட்சியினர் மிகவும் நிதானமாக, மிகவும் ஜாக்கிரதையாக, அரசியல் மதியூகத்துடன் அனுபவ சாத்தியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் எப்போதும் எதிர்க் கட்சியில் இருந்து என்ன பயன்? தமிழ் மக்களின் உரிமைகளைத் தரக் கூடிய ஏதாவது ஒரு கட்சிக்கு ஆதரவளித்து அரசாங்கம் அமைக்க உதவுவது நன்றல்லவா? உள்ள கட்சிகளில் பெரிய கட்சி யொன்றை ஆதரித்தால் என்ன?- இப்படியாகச் சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள்.

இந்த அபிப்பிராயத்தை நிராகரித்து விட முடியாது. ஆனால் எந்தக் கட்சியை ஆதரிப்பது என்பதுதான் ஏற்பட்டுள்ள சிக்கலின் மூலவேராகும்.

ஐக்கிய தேசியக் கட்சி, சிறீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரு கட்சிகள் அரசாங்கம் நடத்தக் கூடிய பெரிய கட்சிகளாக விளங்குகின்றன. ஆதரிப்பதானால் இவற்றில் எதைத் தமிழரசுக் கட்சி ஆதரிப்பது?

தமிழ்ப் பேசும் மக்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு இரண்டு கட்சிகளும் ஒன்றுதான். அடிப்படைக் கொள்கையளவில் ஒன்றை விட மற்றொன்று சிறந்தது என்று கொள்வதற்கான பெரும் வித்தியாசம் எதுவும் இருப்பதாகச் சொல்ல முடியாது. எனவே எதை ஆதரிப்பது?

மேற்படி கேள்விக்கு நேரடியான பதில்: எந்தக் கட்சி தமிழ் பேசும் மக்களின் ஜீவாதாரக் கோரிக்கைகளில் அதிகப்படியானவற்றைத் தாராள சிந்தையுடன் வழங்க முன் வருகின்றதோ அந்தக் கட்சியையே தமிழரசுக்கட்சி ஆதரிப்பதானால், ஆதரிக்க வேண்டும் என்பதாகும்.

இதுவரை நடந்த பேச்சு வார்த்தைகளில் இரண்டு கட்சியினரும் தமிழரசுக் கட்சியினருக்கு முழு மந்திரி அரை மந்திரிப் பதவிகளைத் தாராளமாக வழங்கத் தயாராயிருப்பதாகத் தரகர்கள் மூலம் தெரிவித்துள்ளனர் என்று தெரிகிறது.

ஆனால் தமிழரசுக் கட்சியினர் தங்களுக்கு சொந்தப் பெருமையும் அந்தஸ்தும் தேடிக் கொள்வதற்காக மந்திரிப் பதவிகளை ஏற்கப் பாராளுமன்றத்தின் படிக்கட்டுகளில் ஏறியவர்கள் அல்லர் என்பதையும், தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகப் போராடுவோம் என்று சூளுரைத்தே பிரதிநிதியானவர்கள் அவர்கள் என்பதையும், ஆசை காட்டும் தரகர்களைத் தூது விடும் பிரமுகர்கள் மறந்து விட்டது வருந்தத்தக்கதாகும்.

இலங்கைக்கு சமஷ்டி அரசமைப்பு, தமிழ் மொழிக்கு உரிமை, தமிழ்ப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றத் தடுப்பு, மலை நாட்டுத் தமிழர் தம் உரிமைகள் ஆகிய நான்கு கோரிக்கைகளை முன்னிறுத்தித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி கண்டவர்கள் தமிழரசுக் கட்சியார்.

இவற்றுள் முழுமையையும் வழங்காவிட்டாலும் குறைந்த பட்சம் தரக் கூடியவற்றையாவது தர முன்வராத எந்தக் கட்சியுடனாவது தமிழரசுக் கட்சியார் எப்படி ஒத்துழைக்க முடியும்? ஐக்கிய தேசியக் கட்சியினர் "எங்களை நம்புங்கள். உங்களைக் கைவிட மாட்டோம்" என்று போலி வாக்குறுதிகளை வழங்குவதை விடத் தமிழ் பேசும் மக்களின் கோரிக்கைகளில் உருப்படியான எதையும் தருவதற்கு இதுவரை இணக்கம் தெரிவிக்கவில்லை. நம்பி நம்பிக் கெட்ட சரித்திரத்தைத் தலைமுறை தலைமுறையாகக் கொண்ட தமிழ்ச் சமூகம் இன்னும் ஒரு முறை நம்பிக் கெட வேண்டும் என்று யாரும் புத்தி கூறுவார்களா?

இதற்கு மாறாக மறுபுறத்தில் ஒரு வித உடன் பாட்டுக்கு வரக் கூடிய சாத்தியக் கூறுகள் புலப்படுவதாகத் தமிழரசுக் கட்சியினர் கருதுகின்றனர். அப்படி உடன் பாட்டுக்கு வரக் கூடிய ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமானால் அதைத் தவற விடக் கூடாது என்றே தமிழரசு கட்சியினருக்கு சுதந்திரனும் எடுத்துரைக்க விரும்புகிறது.

அடிப்படைக் கொள்கைகளைப் பலியிடாமல், அதே சமயத்தில் கிடைக்கக் கூடிய உரிமைகளைக் கெட்டியாகப் பெற்றுக் கொண்டு, மேலும் பெற வேண்டியவற்றுக்காகத் தொடர்ந்து போராடுவதே சிறந்த அரசியல் சாகஸமாகும்.

அறிவும், ஆற்றலும், அனுபவமும், அமைதியும், நேர்மையும், அரசியல ஞானமும், திண்மையும், தீர்க்கதரிசனமும் வாய்ந்த மா பெருந் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் கரங்களில் தமிழ் பேசும் மக்கள் தங்கள் எதிர்காலத்தை நம்பிக்கையோடு கையளித்திருக்கிறார்கள்.

சரியான சமயத்தில் சரியான காரியத்தையே அவர் குறையும் கறையுமற்ற நேர் முறையில் செய்து முடிப்பார் என்று தமிழ் பேசும் மக்கள் பொறுமையோடும் உறுதியோடும் காத்திருக்கலாம்.

# டட்லிக்கு வயிற்றுவலி வந்து ஆள் ஓட்டம் பிடிக்கலாம்!

## அப்போது எதிர்க்கட்சி ஆட்சியை கையேற்றால் முக்கூட்டு அரசாங்கமா?

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் குறைந்த பட்சக் கோரிக்கைகளைக் கூட ஏற்றுக் கொள்வதற்கு யு. என். பி. கட்சிக்கு சம்மதமில்லாமல் இருக்கும் நிலையில் அக் கட்சியுடன் தமிழரசுக் கட்சி ஒத்துழைக்கும் என்ற நம்பிக்கை யாவர் மனதிலும் படிப்படியாகக் குறைந்து வருகிறது.

யு. என். பி. கட்சியுடன் எம். ஈ. பி கட்சியோ, சமசமாஜக் கட்சியோ அன்றிக் கொம்யூனிஸ்டுக் கட்சியோ கூட்டுச் சேர முடியாது. எனவே யு. என். பி. அரசாங்கம் நீடிக்க வேண்டுமானால் அது தமிழரசுக்கட்சியையும் சேர்த்துக்கொண்டு, சிறீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ஒருசிலரைப் பிடுங்கியும் எடுத்தால்தான் நீடிப்பது சாத்தியமாகும்.

தமிழரசுக் கட்சி யு. என். பி. யுடன் சேர்ந்துவிட்டது என்று தெரிந்தாலே வேறு கட்சியிலுள்ள சிலரும், சில உதிரிகளும் யு. என். பி யின் பக்கம் சாய்வார்கள். தமிழரசுக் கட்சி எட்ட நிற்கிறது என்றால் அவர்களும் ஒட்ட வரத் தயங்குவார்கள். இது தான் இன்றைய அரசியல் நிலை.

இந்த நிலையில் யு. என். பி. எந்தக் காரணம்கொண்டும் ஆளுங் கட்சியாக நீடித்து உயிர் வாழ முடியாது. எந்தச் சமயத்திலும் திரு டட்லிக்குத் திரும்பவும் வயிற்று வலி யேற்படலாம். அவர் தமது பிரதமர் பதவியைத் துறந்துவிட்டு ஓட்டம் பிடிக்கலாம் என்றே நாம் துணிந்து ஆருடம் கூறக்கூடியவர்களாக இருக்கிறோம்.

அப்படி திரு டட்லி ஓட்டம் பிடிக்கும்போது பாராளுமன்றத்தையும் கலைத்து விட்டு ஓடுவாரா அல்லது எதிர்க்கட்சியிடம் கையளிக்கும்படி விட்டுவிட்டு ஓடுவாரா என்பதுதான் கேள்வி.

'பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டுத்தான் ஓடுவேன்' என்று அவர் பயமுறுத்தியிருக்கிறார். இந்தப் பயமுறுத்தல் அவருடைய கட்சிக்குள்ளேயே பெரிய அதிருப்தியைக் கிளப்பிவிட்டிருக்கிறது.

அது ஒருபுறமிருக்க, பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி திரு டட்லி சிபார்சு செய்தாலும் அதன்படி கவர்னர் ஜெனரல் நடக்க வேண்டுமா? அப்படி நடப்பாரா?- இது ஒரு பிரச்னையாகிவிட்டது இப்போது.

எதிர்க்கட்சிகள் எல்லாம் சேர்ந்து கொடுத்திருக்கும் ஒரு மகஜரை அடிப்படையாகக்கொண்டு கவர்னர் ஜெனரல் எதிர்க்கட்சிகளில் பெரிய கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அழைத்து அரசாங்கம் அமைக்கும்படி ஆக்ஞாபிப்பார் என்றே அரசியல் அவதானிகள் இப்போது கருதுகின்றனர்.

அப்படி சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் அமைக்கும்படி அழைக்கப் பட்டால், அக்கட்சி தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளை ஓரளவுக்கு ஏற்றுத் தமிழரசுக் கட்சியின் ஆதரவை நிச்சயமாகப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகைய ஒரு நிலையேற்படும்பட்சத்தில் சமசமாஜக் கட்சியும் தமிழரசுக் கட்சியுடன் ஒத்துழைத்து சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஒரு அரசாங்கத்தை நடத்துவதற்கு வேண்டிய உதவிபுரியும் என்று டாக்டர் என். எம். பெரேரா திரு எஸ். ஜே. வி செல்வநாயகத்திடம்கூறியிருப்பதாக நம்பிக்கை வாய்ந்த வட்டாரங்களிலிருந்து அறியக்கிடக்கிறது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் திரு பிலிப் குணவர்த்தனவின் எம். ஈ. பி. கட்சி கூட்டுச் சேருவதை திருமதி சிறீமாவோ பண்டாரநாயகா அறவே விரும்பவில்லையாம். அதே போலவே திரு பிலிப்புடன் கைகோர்த்துக்கொள்ள திரு சி. பி. டி. சில்வாவும், செனட்டர் ஏ. பி. ஜயசூரியாவும் தயாராக இல்லை என்று தெரிகிறது.

எனவே சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் ஏற்பட்டால் அது (1) சிறீலங்கா சுதந்திரக் கட்சி (2) இலங்கைத் தமிழரசுக் கட்சி (3) லங்கா சமசமாஜக் கட்சி ஆகிய மூன்று பெரிய அரசியல் கட்சிகளின் கூட்டு அரசாங்கமாகவே மிளிரும் என்று எதிர்பார்க்கலாம்.

அரசாங்கம் பெயரளவில் ஒரு கூட்டு அரசாங்கமாக அமைந்தாலும் தமிழரசுக் கட்சியினரும், சமசமாஜக் கட்சியினரும் இந்த அரசாங்கத்தில் எந்த விதமான பதவிகளையும் ஏற்க மாட்டார்கள், வகிக்க மாட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. ஒரு அரசாங்கம் இயங்குவதற்கு வேண்டிய வாக்குப் பலத்தை மட்டும் தமிழரசுக் குழுவும் சமசமாஜக் கட்சி

(9-ம் பக்கம் பார்க்க)

# கலைக்க வேண்டாம்.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் தாம் திரும்பவும் தேர்தலுக்கு நின்று வெற்றி பெற முடியுமா என்ற சந்தேகத்திலேயே இருக்கிறார். இப்போது கிடைத்த அதிர்ஷ்டத்தை கை நழுவ விட எதிர்ப்புக் கோஷ்டியினர் விரும்பவில்லை.

பாராளுமன்றம் கலைக்கப் படக்கூடாது என்பதற்கு அவர்கள் இன்னொரு காரணமும் சொல்லிக்கொள்கிறார்கள். அதாவது கடந்த தேர்தலுக்கு யு என். பி. தனது அபேட்சகர்களில் பெரும்பாலானோருக்கு ரூபா 5,000 வீதம் கொடுத்து உதவியது. ஆனால் அபேட்சகர்கள் ரூபா 50,000 வரை செலவு செய்துதான் வெற்றியீட்ட முடிந்ததாம். இன்னொரு தேர்தல் நடப்பதானால் அதற்கு யு. என். பி. ஆளுக்கு ரூபா 55,000 தரச் சம்மதமா? அப்படியானால் நடக்கட்டும் என்கிறார்கள்.

நாளுக்கு நாள் எதிர்ப்புக் கோஷ்டியின் குரல் ஓங்கி வருகிறது. இதனால் எந்தச் சமயத்திலும் யு. என். பி. கட்சியில் கடிபிடியும் குத்து வெட்டும் அளவு கடந்து போகலாம் என்றும் இது காரணமாகவே அரசாங்கம் கவிழலாம் என்றும் விஷய மறிந்த வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தல் நடத்துவதைவிட சிறீலங்கா சுதந்திரக் கட்சியிடம் அரசாங்கப் பொறுப்பைக் கண்ணியமாக ஒப்படைப்பதையே யு. என் பி.க்குள் முளைத்துள்ள எதிர்ப்புக் கோஷ்டியினர் விரும்புகின்றனர்.

## மண்டூர் துறையில் இயந்திரப் படகு தொடர்ந்து ஓடும்

பட்டிருப்புத் தொகுதியில், மண்டூருக்கும் குருமண் வெளிக்கும் இடையில் ஓடுகின்ற இயந்திரப் படகு சேவையைத் தொடர்ந்து நடத்துவதற்கான ஏற்பாடுகளை பட்டிருப்புத் தொகுதிப் பிரதிநிதி திரு. எஸ். எம். இராசமாணிக்கம் செய்திருக்கிறார்.

1953-ம் ஆண்டில் திரு. இராசமாணிக்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இச் சேவையை கடந்த வருடக் கடைசியோடு நிறுத்தி விடுவதெனக் கல்லோயா அபிவிருத்திச் சபையினர் முடிவு செய்தனர். ஆனால் திரு. இராசமாணிக்கத்தின் தலையீட்டினால் சேவை நிறுத்தப்படும் தேதி 31-3-60 வரை மேலும் நீடிக்கப்பட்டது.

திரும்பவும் திரு. இராசமாணிக்கம் இவ்விஷயத்தில் தலையிட்டு, மட்டக்களப்பு அதிபர் திரு. பி. ஆர். தேவராசனின் உதவியோடு சேவை மேலும் தொடர்ந்து நடைபெற ஏற்பாடு செய்துள்ளார்.

இந்த அத்தியாவசிய சேவையின் எதிர் காலத்தை நிர்ணயிப்பதற்காக கல்லோயா அபிவிருத்திச் சபைத் தலைவர், மாகாண அதிபர் பட்டிருப்புப் பிரதிநிதி ஆகிய மூவரும் ஏப்ரல் பிற்பகுதியில் ஒரு மாநாடு கூடவிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்து தி. மு. கழகப் பொதுச் செயலாளர்

## இரா. நெடுஞ்செழியன் கூறுகிறார்:

# தமிழரசுக் கட்சி தேர்தலில் வென்றது மகிழ்ச்சிக்குரியது-அதன் கோரிக்கைகள்

## நியாயமானவை-நிறைவேற்றப்பட வேண்டியவை

## தமிழ்த்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"அது சரி, டட்லியும் அவருடைய யு. என். பி. கட்சியும் தமிழ் மக்களுக்கு என்ன தர முடியும்? அதைக் கேட்டு வந்தீர்களா? என்று நாம் திருப்பிக் கேட்டால் திருதிருவென்று விழித்துப் 'பெப்பே' என்கிறார்கள் இந்தத் தரகர்கள்.

### வெள்ளைக் காகிதத்தில் கையொப்பம்

"எதுவித உடன்படிக்கையும் இல்லாமல் வெள்ளைக் காகிதத்தில் கையொப்பம் போட்டுக் கொடுங்கள் என்று ஆலோசனை கூறும் இந்த டட்லியின் நண்பர்கள் டட்லியிடமே சென்று, 'சரி, தமிழரசுக் கட்சியாரை உங்களுடன் ஒத்துழைக்கும்படி தூண்டுகிறோம். நீங்கள் தமிழ் மக்களுக்கு என்ன கொடுக்கத் தயாராயிருக்கிறீர்கள்' என்று கேட்கலாம் அல்லவா? கேட்டுவிட்டு நம்மிடம் தூது வரலாம் அல்லவா? 'அரிய சந்தர்ப்பம் ஒன்று வந்திருக்கிறது. தமிழினத்துக்கு நீங்கள் செய்த கொடுமைகளுக்கெல்லாம் பிராயச்சித்தமாக ஏதாவது சலுகைகளைச் செய்து உங்கள் நல்லெண்ணத்தைக் காட்டலாமே' என்று யு. என். பி யிடமும், டட்லியிடமும் ஆலோசனை கூறலாம் அல்லவா?

"இப்படியெல்லாம் அந்தப் பக்கத்தில் நிமிர்ந்து நின்று கேட்கவோ, பேசவோ, ஆலோசனை கூறவோ துணிவும், திராணியும், நெஞ்சழுத்தமும் அற்றவர்கள்தாம் எம்மிடம் வந்து ஒத்துழைப்புப் பல்லவி பாடுகிறார்கள்.

"சமரஸம் என்றபெயரால் தமிழினத்தை மீண்டும் யு. என். பி. யிடம் அடைவு வைத்து அடிமைப்படுத்துவதே இந்தத் தரகர்களின் முயற்சி அளிக்கக்கூடிய பலாபலன் என்பதை இவர்கள் உணராமல் இருப்பது துரதிர்ஷ்டமாகும்" என்றுபிரஸ்தாப பிரமுகர் தொடர்ந்து கூறி முடித்தார்.

இலங்கை வாழ் தமிழர்கள், சென்ற சில பல ஆண்டுகளாகச் சொல்லொணுத் தொல்லைகளுக்கும், துயரங்களுக்கும், ஆளாகி, அவதியுற்று, அல்லற்பட்டு வரும் துன்பச் செய்திகளைக் கேட்டு, நாமெல்லாம் ஆற்றொணுத் துக்கத்தில் ஆழ்ந்து கிடக்கிறோம்."

புதியதொரு பொதுத் தேர்தல் நடைபெற்றுப், புதியதொரு அமைச்சரவை ஏற்பட்டிருக்கிற இப்பொழுது இலங்கை வாழ் தமிழர்களுக்கு நல்வாழ்வு ஏற்படுமா என்று அவர்களும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், நாமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

### தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம்

இன்றுள்ள நிலையில் இலங்கைக்கே உரிய தமிழர்கள் 'தமிழரசுக் கட்சி' என்ற ஓர் அமைப்பினை ஏற்படுத்திக் கொண்டு, அதன் மூலம் இலங்கைக்கே உரிய தமிழர்களின் நல் வாழ்வுக்கு வழி வகுக்கவும், குடியேறிய தமிழர்க்கு வாழும் உரிமை வாங்கியளிக்கவும் முயன்று வருவது பெரிதும் பாராட்டுவதற்குரியதாகும். அந்தக் கட்சியின் தலைவராகச், சிறந்த தமிழ்ப் பண்பாடு கொண்டவரும், பெருந்தகைமையாளரும், பல்லோர் போற்றும் நற்பண்பினரும், சிறந்த வழக்கறிஞரும் தமிழர்களின் நல்வாழ்வுக்காகத் தம் உடல், பொருள், ஆவி மூன்றினையும் ஈய முனைந்திருப்பவரும் ஆன தோழர் எஸ். ஜே வி. செல்வநாயகம் அவர்கள் அமைந்து, அரும்பாடுபட்டு வருவது மிகவும் மகிழ்ச்சி தரத்தக்க ஒன்றாகும்.

### தமிழரசுக் கட்சிக் கொள்கை

இலங்கைவாழ் தமிழர்கள் அனைவரும் உரிமையோடும், உயர்வோடும், வாழ வேண்டும் என்பதற்காக அந்தக் கட்சி மிகவும் பாடுபட்டு வருகிறது அது முன்னிறுத்திப் போராடி வரும் கருத்துக்கள் நீதியின் பாற்பட்டவை; நேர்மை வழி வந்தவை; தமிழரின் நலிவு போக்குபவை ஆகும்.

### நியாயமான கோரிக்கை

தமிழ் பேசும் மக்கள் இருபத்தைந்து இலட்சத்திற்கு மேல் இருந்தும், அவர்கள் பேசும் தமிழ் மொழிக்கு ஆட்சியிலும், கல்விப் பயிற்சியிலும், பொது வாழ்விலும் உரிய இடம் அளிக்காமல், பெரும்பான்மையோரான சிங்களவர்கள் தங்கள் சிங்கள மொழி ஆதிக்கத்தை நிலைநாட்ட எல்லா முயற்சிகளும் எடுத்து வருவது வருந்தத் தக்கதாகும். தமிழ் மொழி பேசப்படும் பகுதிகள் எல்லாம் தமிழ் மாநிலமாக ஆக்கப்பட்டு, அந்த மாநில ஆட்சி மொழி தமிழ் மொழியாக இருக்கவும், சிங்கள மொழி பேசப்படும் பகுதிகள் சிங்கள மாநிலமாக ஆக்கப்பட்டு, அந்த மாநிலத்தின் ஆட்சிமொழி சிங்கள மொழியாக இருக்கவும், இரண்டு மாநிலங்களும் ஒன்றுசேர்ந்த இலங்கையின் ஆட்சி மொழிகளாகச் சிங்களமும், தமிழும் வழங்கவும் ஆனநிலை நிலவ வேண்டும் என்று கோருவது நியாயமான வாதமாகும். இலங்கையின் அரசியல்—பொருளியல்—சமூகவியல் வாழ்வில் அமைதியும், ஆக்கமும் ஏற்பட வேண்டுமாயின், இந்தக் கோரிக்கை இனிது நிறைவேற்றப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

### தேர்தலில் தமிழரசு வெற்றி

இலங்கைவாழ் தமிழர்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டு வரும் தமிழரசுக் கட்சியினர், அணிமையில் நடந்தேறிய பொதுத் தேர்தலில், பதினைந்து இடங்களில் வெற்றி பெற்றிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

தோழர் டட்லி சேனநாயகா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளார். இலங்கையில் அமைதியும் ஆக்கமும் நிலவ, வளமும், நலமும் பெருக தோழர் டட்லி சேனநாயகாவின் அமைச்சரவை தமிழரசுக் கட்சியினரின் கோரிக்கைகளை இனிது நிறைவேற்றி வைக்கும் என்று எதிர்பார்ப்போமாக.

—'மன்றம்'

# முதல் தடவையாக எதிர்க்கட்சி சபாநாயகர்

## டி. பி. சுபசிங்கா தெரிவு

பாராளுமன்றம் கடந்த புதன்கிழமை முதல் முறையாகக் கூடிய போது எதிர்க் கட்சியைச் சேர்ந்த திரு. டி. பி. சுபசிங்கா சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார். இலங்கைப் பாராளுமன்றத்தின் சரித்திரத்தில் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர் ஒருவர் சபாநாயக ராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பது இது முதல் தடவையாகும்.

அரசாங்கக் கட்சியான யு. என். பி. முன்னர் சபாநாயகராக இருந்த திரு. அல்பேட் பீரிஸின் பெயரை சபாநாயகர் பதவிக்கு பிரேரித்தது. எதிர்க்கட்சித் தலைவர் திரு. சி. பி. டி சில்வா திரு சுபசிங்காவின் பெயரைப் பிரேரித்தார். டாக்டர் என். எம். பெரேரா அதை ஆமோதினூர்.

திரு. சுபசிங்காவுக்கு 93 வாக்குகளும் திரு. அல்பேட் பீரிஸுக்கு 60 வாக்குகளும் கிடைத்தன அதனுல் திரு. அல்பேட் பீரிஸ் தோற்ருர்; திரு சுபசிங்கா தெரிவு செய்யப்பட்டார்.

நியமன அங்கத்தவர்கள் 6 பேரையும் சேர்த்து பிரதிநிதிகள் சபையில் மொத்தமுள்ள 157 எம். பிக்களில் 154 பேர் வாக்கெடுப்பின் போது சமூகமளித்தனர். ஒருவர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

புதன்கிழமைக் கூட்டத்தில் உபசபா நாயகர், கமிட்டிகளின் தலைவர் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். இத் தெரிவுகள் ஒருமுகமாக நடைபெற்றன.

உப சபாநாயகர்: திரு. ஆர். எஸ். பெல்பொல; கமிட்டிகளின் தலைவர்: திரு. ஹியூ பெர்னான்டோ.

# கம்பன் திருநாள்

காரைக்குடி கம்பன் கழகத்தினரால் வருடா வருடம் நடத்தப்படும் கம்பன் திருநாள் ஏப்ரல் 8, 9, 10, 11-ந் தேதிகளில் நடைபெற விருப்பதாக கழகச் செயலாளர் திரு. சா. கணேசன் தெரிவிக்கிறார்.

வழக்கம் போல் தமிழ் பெரும் அறிஞர்கள் பலர் இத் திருநாள் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்கின்றனர். எல்லா நிகழ்ச்சிகளையும் [illegible] நிலையங்கள் ஒலிபரப்புகின்றன.

# முதலிக்குளத் திட்டத்தில் காணி நிலம் கேட்டவர்கள்

# முதற்படி விசாரணைக்கு

## தவருது ஆஜராக வேண்டும்

திருகோணமலைப் பிரிவைச் சேர்ந்த முதலிக்குளக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் காணி நிலம் பெற விண்ணப்பம் அனுப்பிய விண்ணப்பதாரர்கள் ஒரு பூர்வாங்க விசாரணைக்கு ஆஜராக வேண்டியது அவசியமாகும்.

இந்த முதற்படி விசாரணைக்கான அரசாங்க அட்டவணை வெளியிடப்பட்டிருக்கிறது. இதன்பிரகாரம் விசாரணைக்குச் சமூகமளிக்காத விண்ணப்பதாரர்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்படுமாகையால், சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் விசாரணை தினத்தன்று தவருது ஆஜராகும்படி திருகோணமலைத் தமிழரசுக் கட்சிக் கிளையினர் ஆலோசனை கூறியுள்ளனர்.

அட்டவணைப்படி பின்வரும் தேதிகளில் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் இடங்களில் அடியில் தரப்பட்டிருக்கும் பகுதிகளைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கான முதற்படி விசாரணை நடைபெறும்.

**7-4-60**

டி. ஆர். ஓ. காரியாலயம் (திருகோணமலை)

திருகோணமலை நகரத் தலைமைக்காரர் பகுதி விண்ணப்பதாரர்கள்.

**9-4-60**

கிராமச் சங்க அலுவலகம் (உப்புவெளி)

சீனன்வாடி வெள்ளமணல் உப்புவெளி சாம்பல் தீவு கிராமத் தலைவர்கள் பகுதி.

**11-4-60**

திரன்பன கிராமக்கோடு அலுவலகம்

பனிக்கட்டிமுறிப்பு கோமரன்கடவெல மதவாச்சியா கல்கடவெல கிராமத் தலைவர்கள் பகுதி.

**5-4-60**

டி. ஆர். ஓ. உப காரியாலயம் (கிண்ணியா)

சின்னக்கிண்ணியா (மேற்கு) சின்னக்கிண்ணியா (கிழக்கு) பெரிய கிண்ணியா குறிஸ்சாகேணி கிராமத்தலைவர்கள் பகுதி.

**7-4-60**

டி. ஆர். ஓ. உப காரியாலயம் (தம்பலகாமம்)

தம்பலகாமம் (வடக்கு) தம்பலகாமம் (தெற்கு) கந்தளாய் கிராமத் தலைவர்கள் பகுதி.

**6-4-60**

கிளிவெட்டி வாசிகசாலை ஈச்சிலாம்பத்தை, கிளிவெட்டி மீன்காமம், பள்ளிக்குடியிருப்பு, சம்பூர், கூனித்தீவு, கட்டபறிச்சான் கிராமத் தலைவர்கள் பகுதி.

**7-4-60**

டி. ஆர். ஓ. காரியாலயம் (மூதூர்)

பாலத்தடிச்சேனை, தோப்பூர் மூதூர் (முஸ்லிம்) மூதூர் (தமிழ்) கிராமத் தலைவர்கள் பகுதி.

**7-4-60**

டி. ஆர். ஓ. காரியாலயம் (குச்சவெளி)

தென்னமரவாடி, பரனமதவாச்சி, குச்சவெளி புல்மோட்டை கிராமத் தலைவர்கள் பகுதி.

**8-4-60**

பலநோக்கு கூட்டுறவுச் சங்கக்கட்டடம் (நிலாவெளி)

கும்புறுபிட்டி நிலாவெளி கிராமத் தலைவர்கள் பகுதி.

## டட்லிக்கு வயிற்று...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் சேர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கும். பிரஸ்தாப அரசாங்கம் இந்த இரண்டு கட்சிகளின் அடிப்படைக் கொள்கைகளுக்குமாருக எந்தக்காரியத்தையும் செய்ய முயலுமானுல் மறுநாளே அரசாங்கம் முறிந்து விட வேண்டிய நிலைமை ஏற்படுத்தக் கூடிய வல்லமையும் அதிகாரமும் தமிழரசுக் கட்சியிடமும் சமசமாஜக் கட்சியிடமும் கூட்டாகவும், தனித்தனியாகவும் தங்கியிருக்கும் என்பது குறிப்பிடத் தக்க அம்சமாகும்.

இப்படியான ஒரு அரசாங்கம் அமையுமானுல் நிச்சயமாக அது தமிழ்ப் பேசும் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்றே தமிழரசுக் கட்சியின் மேலிடத்துத் தலைவர்கள் தற்போது கருதுகின்றனர்.

சி. சி. சி. நெற்பயிர்

உரக்

கலவைகள்

உலகிலேயே மிகச்சிறந்தவை

கொழும்பு கொமேர்ஷல் கொம்பனி லிமிடெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

தபால் பெட்டி 33, கொழும்பு.

CCC 629



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தக் கம்பனி வேலை!

சிறுகதை — எழுதியவர்: "தேவான்"

'ஆ'வென்று அவள் வீரிட்டாள்.

பால் சுரக்காத முலைக்காம்பைப் பசியின் கொடுமையால், முன் வாயில் முளைத்திருந்த தன்னிரு கன்னிப் பற்களால் நறும்பி விட்டு அந்தக் குழந்தையும் வீரிட்டழுதது.

அவள் என்ன செய்வாள்? பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும்? உடலில் நல்லிரத்தம் இல்லாத போது பால் எங்கே சுரக்கப் போகிறது, பாவம்! தொடர்ந்து மூன்று மாதங்களாக அரைப்பட்டினியும் முழுப்பட்டினியுமாக அவளது வாழ்க்கை வண்டி நகரும் போது, அவளது உடம்பில் நல்லிரத்தத்தின் ஓட்டத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்?

விழிகளை வளைத்திருந்த கருவளையங்கள், இதழ்களின் ஏறியிருந்த 'பொருபொரு'வென்ற வரட்சி, கன்னங்களைத் தழுவ நின்ற சோர்வடையாளங்கள் எல்லாம் அந்த முகத்திலே பட்டினியின் சின்னங்களாக வறுமையின் வடுக்களாக ஒட்டிக் கிடந்தன.

இத்தனைக்கும் அவள்—?

கணவனை இழந்த விதவையல்ல; கண்ணிறைந்த கணவன் அவளுக்கும் இருக்கத்தான் செய்தான். ஏன், அவள் கூட காதல் திருமணந்தானே புரிந்து கொண்டாள்!

அப்போது பிரபல கம்பனியொன்றில் அவள் டைப்பிஸ்டாக வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். அதே இடத்தில் தான் அவள் கணவன் கண்ணனும் வேலைக்கமர்ந்திருந்தான். அதன் பயனாக அவர்களிடையே ஏற்பட்ட இளமையின் மோதல், விழிகளின் உரசல், கடையிதழ் முறுவல்......எல்லாமாக காதல் என்ற குழியில் தள்ளிவிட்டு கடிமணம் என்னும் வழியில் அவர்களை இழுத்து விட்டது.

மணம் முடித்ததும் அவள் வேலைக்குப் போவதை நிறுத்திக் கொண்டாள். கணவன் பெறும் ஊதியமே வாழ்க்கையை வளமாகக் கழிப்பதற்கு அவளுக்குப் போதுமானப்பட்டது. உண்மைதான். ஆனால் என்ன கேடு காலமோ, அவன் மணம் முடிப்பதையே பார்த்திருந்தது போல் கண்ணன் வேலை பார்த்து வந்த கம்பனி, போட்ட முதலையும் விழுங்கி விட்டு ஆட்டங் கொடுத்தது. முதலுக்கு நேர்த்த அடுத்தடுத்த தோல்விகளின் காரணமாய் திடீரென்று ஒரு நாள் கம்பனியை மூடி விட்டார்கள்!

விளைவு?

'வேலையற்றவன்' என்ற 'பட்டம்' பெற்று வெளியேறிய சிப்பந்திகளில் ஒருவனுய் கண்ணனும் வெளியே வந்தான்.

'கெட்டும் பட்டணம் போ' என்பது போல என்ன பாடு பட்டாவது 'சொர்ணமேந்து' உத்தியோகத்தில் மட்டையடிப்பது மேல்' என்று அறியாமலா நமது ஊர்ப் பெருந்தகைகள் சொல்லி வைத்தார்கள்? இந்த இழவுக் கம்பனிகள் மாதிரி அந்த உத்தியோகம் திடீர் திடீரென்று காலை வாரிவிடாதே!

இந்த 'ஆயிரத்தில் ஒரு வார்த்தை'யை எண்ணி கண்ணன் வியந்த போது தான் கமலமும் குழந்தையொன்றை ஈன்றெடுத்தாள்— ஆமாம், அவன் மனைவி தான்!

அடிவயிற்றிலே யாரோ தீக்குச்சியைக் கிழித்தது போலிருந்தது அவனுக்கு. குழந்தை பிறந்து விட்டதே என்று மகிழ்வதற்குப் பதில் நெருப்பைக் கொட்டிக் கொண்டது போல் அவன் உள்ளந் துடித்தது. துடிக்காமல் என்ன செய்வது? இன்னும் ஒரு, மூட்டை சுமையை அவன் தலையில் இறங்கி விட்டதே! கையிலே காசில்லாத போது அதை எப்படித் தாங்கப் போகிறான்?

'ஐயா, கையிலே காசில்லையா? பயப்படாதீர், கடன் வாங்கி விட்டால் போகிறது!, என்றொரு தமிழ் அறிஞன் சொல்லி வைத்தானே, அந்தக் 'கலை'யைத்தான் கண்ணனும் கையாண்டான். 'அப்படி இப்படி' யென்று வாழ்க்கை பட்டினியோடு படுத்தும் படுக்காமலும் கடந்தது. ஆனால் எந்த நாளும் அந்தக் கலை சரிப் பட்டு வருமா? உயிருக்கே உலை வைப்பது போலாகி விட்டால்?

இந்தக் காலத்தில் கடன் பட்டவர்கள் தான் இலங்கை வேந்தனைப் போல கலங்கா விட்டாலும் கடன் கொடுத்தவர்கள் கலங்குகிறார்களே! அதுக்கு என்ன செய்வது? அந்தக் கண்ணராவியைப் பார்த்துப் பயந்து போன கண்ணன் ஒரு விடிவும் வீட்டிலே தங்கவில்லை—வேலை தேடி அலைந்தான்!

வீட்டிலே குழந்தைதாயின் முகத்தைப் பார்க்க தாய் கண்ணனை நோக்க கண்ணன் பிரபல கம்பனி முதலாளிகளைப் பார்த்து பல்லை இளித்துக் கொண்டிருந்தான்.

பயன்?

பலர் நாயைப்போல் 'சள்'ளென்று விழுந்தனர். சிலர் சிறிது நேரம் வைத்து பூர்வ கதை விசாரித்தனர். இன்னுஞ் சிலர்-வரண்ட கம்பனிக் காரர்கள்-ஐநூறு ஆயிரம் என்று பிணைக் கூலி கேட்டு அந்தப் பணத்தைக் கொண்டே ஒடிந்து போன தம் வியாபாரத்தை உசுப்பத் திட்டமிட்டிருந்தனர்!

இன்றுகூட கண்ணன் எத்தனையோ கம்பனிகளின், படிகளில் ஏறி இறங்கிவிட்டான். இல்லை, சில இடங்களில் அவனுக்கு இறங்கக் கூட வாய்ப்பு அளிக்கப்படவில்லை. ஒரே தூக்காகத் தூக்கி 'கேட்டு'க்கு வெளியே கொணர்ந்து விடும் கைங்கரியத்தைச் செய்து விட ஆட்கள் இருந்தனர் அங்கு! ஒரு பண மூட்டையின் மனமாவது அவன் நிலை கண்டு இரங்கியதா?

"சுத்தச் சொரங்குப் பயல்களய்யா, இந்தப் பய படைச்ச முதலாளிகளெல்லாம். ஏதோ கப்பல் தாண்டவன் போல் முகத்தை 'உர்' என்று வைச்சப்பிட்டு இருக்கிறுங்க" என்று யாரோ ஒரு பாரதத்தமிழ்த் தொழிலாளி தன் சக தொழிலாளிக்கு கூறிக்கொண்டு போவது கண்ணனின் காதிலும் விழத்தான் செய்தது.

கண்ணன் களைத்துப் போனான் பல படிகள் ஏறி இறங்கியதால் அவன் கால்கள் அலுத்துப் போய் விட்டிருந்தன. சட்டைச் சாக்கிலே கிடந்த ஐந்துசதத்தைவைத்துக்கொண்டு, ஒரு பிளேனின் குடிப்போமா?' என்று எதிரேயிருந்த டீக் கடையருகே அவன் தயங்கிய போது தான், "ஏய், கண்ணன்! நடுரோட்டிலே என்னப்பா செய்துகொண்டு நிற்கிறாய்?' என்றகேள்வியும் குரலுமாய் அவன் தோளைத் தட்டித் திருப்பினன் அவன் நண்பனொருவன்-அதாவது மூடுவிழா நடத்தப்பட்ட பழைய கம்பனியில்தான் இருவரும் முன்பு ஒன்றாக வேலை பார்த்தார்கள். இப்போது அந்த நண்பன் எங்கோ ஒரு வேலையில் மாட்டிக்கொண்டான் போலிருக்க வேண்டும். ஏன், வேலையற்றவர்களுக்கே உரித்தான பரிதாபக்களை மறைந்து அவன் குரலில் கொட்டமடிக்கும் குதூகலமே சொல்லவில்லையா, அவனுக்கொரு வேலை கிடைத்துவிட்டதென்பதை!

"என்னப்பா இன்னும் பழைய நிலைதானா?" தோளைத் தொட்டவனே தொடர்ந்து கேட்டான்.

"பழைய நிலைதான். என்ன செய்வது; எனது கெட்ட காலம் எங்கு போனாலும் கையை விரிக்கத்தான் காத்திருக்கிறார்கள்!" கண்ணனின் பேச்சு பரிதாபமாக வெளிப்பட்டது.

"கவலைப்படாதே, கண்ணு, உனக்கொரு நல்ல செய்தி. தர்மராஜன் கம்பனியில் இடம் ஒன்று காலியாக இருப்பதாகக் கேள்வி. உடனே போய் அந்த முதலாளியைச்சந்தித்துப்பார்" என்று அந்த நண்பன் கூறி முடித்தானே இல்லையோ, கண்ணன், தர்மராஜன் கம்பனியின் ஏகபோக உரிமையாளரான திருவாளர் தர்மராஜன் எதிரே போய் நிற்கும் வரைக்கும் அவன் வேறெங்கும் தங்கவில்லை.

திருவாளர் தர்மராஜனைப் பார்த்தபோது, ஒரு வேளை இயமதர்மராஜன் தான் நாகரிக உடையில் வந்திருக்கிறானோ, பாவிப்பயல்! என்று எண்ணிய கண்ணனுக்கு ஒரு விஷயம் பளிச்சென்று பட்டது.

மனிதர் தன்னை வேலைக்கமர்த்துவது மறுபிறப்பில் தான் என்பது!

இருந்தாலும் குழைந்து நைந்து தான் வந்த நோக்கத்தை விளக்கினன்.

எல்லாவற்றையும்—அவனது புருவத்தின் மயிரை எண்ணுவது போல்—கவனமாகக் கேட்டிருந்த தர்மராஜன், "நாளைக்கே உமது நற்சாட்சிப் பத்திரங்களுடன் வந்து என்னைச் சந்திக்கவும்" என்று முடித்தால் அது வேறு விஷயம். மாறாக அவர், "எங்களுக்கு அப்படி ஒரு

(15-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்ச் சிறுகதை இலக்கியம்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கவி (Ballad) ஒத்தது என்பர்.

## சிறுகதை எழுதுவது அரிது

நாட்டுப் பாடல் எல்லையில் அளவில் சிறுகதையைப் போல் சுருங்கியது ஆனால் அஃது உரைநடையன்று; அஃது சொன்னயம்பொருள் நயமில்லா விரப்பாடல். (A ballad is a short story in verse) இரண்டுக்கும் கதை என்பதில் ஒற்றுமையுண்டு. சிறுகதைக்கும் புதினத்திற்கும் உள்ள வேற்றுமை இசைப் பாடலுக்கு ((Lyric) நாடகத்திற்குமுள்ள (Drama) வேற்றுமை போன்றது என்று கூறுவர் புலனழுக் கற்ற பெரும் புலவர்கள்.

நாடகம் எழுதுவது எளிது; சிறுகதை எழுதுவது அரிது; நாடகம் அளவில் நீண்டது; பல பாத்திரங்களைக் கொண்டது; வாழ்க்கையின் பல துறை நிகழ்ச்சிகளையும் சிக்கல்களையும் எடுத்துக் காட்டுவது. அதற்கு சதி அல்லது சூழ்ச்சி (Plot) இன்றியமையாதது. அஃது உபதலைவனைக் கொண்டது; பலதுணைப் பாத்திரங்களையுங் கொண்டது. அதில் உரையாடல் ஓர் சிறந்த உறுப்பு; பாத்திரங்களின் செயல்களுக்காக இடம், பொருள், காலம் (Time Scene and Action) வேண்டற்பாற்று. மேற் கூறிய இவை நாடகத்தின் இன்றியமையா உறுப்புக்கள். சிறுகதை இவைகளின்றும் கதை அமைப்பில் [illegible] வேறுபாடு பிற்பகுதியில் கூறப்படும்.

## எது சிறுகதை?

சிறுகதை அரியதோர் இலக்கியக் கலை. அதனை எழுதுவோன் கலையில் தெளிவும் கட்டுரை வன்மையும் உடையவனாதல் வேண்டும். சிறுகதை அரசாய எட்கார் அலன்போ (Edgar Allan Poe) அதன் இலக்கணத்தை ஐந்து பிரிவின்கண் அடக்குவர். சிறுகதை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் இயல்பினையுடையதாக அமைதல் நன்று. (It must be concise and short) அஃது ஒரு முறை அமர்ந்து ஒரு தடவையில் அரைமணி அல்லது ஒரு மணி அளவில் படித்து முடிக்கக் கூடியதாக 2000 அல்லது 3000 சொற்களுக்குள் அடங்குதல் நலம் பயப்பதாகும். (Capable of being read at one sitting) சொல் எல்லையுடையதாய் ஒல்லையில் படித்தற்குரிய தாய் எழுதப்படுதல் பேரின்பம் தருவதாகும். சொற் சுருக்கத்தில் பதினுன்கு அடிகளைக் கொண்ட 'சானெட்' (Sonnet) என்னும் ஆங்கிலச் செய்யுள் இனத்தைப் போன்றது. ஆனால் சிறுகதைஉரை நடையாப்பு.

## கூற வேண்டியது

இரண்டாவது சிறுகதை ஒரு நிகழ்ச்சியைப் பற்றியதல், ஒருகாட்சியைப் பற்றியதல, வாழ்க்கையின் ஒரு இயல்பைப் பற்றியதல் ஒரு அனுபோகதை ஒட்டியதல மக்கள் பண்புகளில் ஒன்றைப் பற்றியதல் கூறுதல் வேண்டும். அன்றியும் படிப்பார் உள்ளத்தே அஃது ஒரு விழுப்பயனை ஒரு நல்ல விளைவை உண்டு பண்ணுதல் வேண்டும்.

## சொற்சுருக்கம் வேண்டும்

மூன்றாவது சிறுகதை கதைச் சுருக்கம் போன்று சொற் சுருக்கமுடையதாக அமைதல் வேண்டுமென்பர். (There should be Compression of expression) புதினம் அகன்று செல்லும் தன்மைத்து பல நிகழ்ச்சிகள் அதில் இடம் பெறும். கதாபாத்திரங்களின் குணவியல்புகளைச் சொல்லோவியப்படுத்தப் பல அமைவிடங்கள் உண்டு பாத்திரங்களின் நிலைக்கேற்ப ஆசிரியரின் சொல் நடை உயர்ந்து செல்வதற்கும் தாழ்ந்து வருவதற்கும் அதில் இடம் உண்டு. தீக்குணன் (Villain) படைக்கப்பெறுவான். சூழ்ச்சி உருப்பெறும்; வளரும். ஆனால் சிறுகதையில் எல்லாவற்றிற்கும் ஒருவாறு இடமுண்டெனினும் ஒவ்வொன்றிற்கும் எல்லையுண்டு; அளவும் உண்டு. அஃது உப்பின் திறத்தைப் போன்றது. உப்பு மிகினும் குறையினும் உண் பொருள் சுவைகுன்றும்; அஃதேபோல் ஒவ்வொன்றும் குறித்த அளவிற்குமேல் செல்லுமேல் சிறுகதை ஊறுபெறும். நயங் குன்றும்.

## நான்கு ஒற்றுமைகள்

சிறுகதைக்கு இயக்காற்றல் ஒருமை, (Unity of Motive) நோக்கப் பண்பில் ஒருமை (Unity of Purpose) செயலாற்றல் ஒருமை (Unity of Action) உளப்பதிவில் ஒருமை (Unity of Impression) என்ற நான்கு

(15-ம் பக்கம் பார்க்க)

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது.

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுன், பாவாடை, கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலும் முன்னணி புடைவை வியாபாரிகளிடம்

கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ்

26, கெய்ஸர் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கடைசி நேரக் கரணங்களுக்கெல்லாம் தமிழரசு கட்சி தயாராயில்லை

## எவராயினும் சரி எதையும் முன்கூட்டி திர அலசி ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும்'

## அர்த்த ராத்திரியில் டட்லியின் டெலிபோன் பேச்சுக்கு எஸ். ஜே. வி. யின் நிதானமான பதில்

(சுதந்திரன் நிருபர்)

சபாநாயகர் தெரிவில் தமிழரசுக் கட்சி தம்மோடு ஒத்துழைக்க வேண்டும் என்றும் அதற்கான ஒழுங்குகளைச் செய்து கொள்ளலாம் என்றும் யு. என். பி. தலைவரும் புதிய பிரதமருமான திரு டட்லி சேனநாயகா கடந்த செவ்வாய்க்கிழமை அர்த்த ராத்திரியில் தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு அவசர அவசரமாக டெலிபோன் செய்தார்.

அதற்கு தமிழரசுத் தந்தை மறுத்து விட்டார். "கடைசி நேரத்தில்" கரணமடிக்க தமிழரசுக் கட்சி தயாராயில்லை. யாராலும் சரி எதையும் முன் கூட்டியே திர அலசி ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும். சபாநாயகர் தெரிவில் எதிர்க் கட்சியோடு சேர்ந்து வாக்களிப்பது என்று தமிழரசுக் கட்சி தீர்மானித்து விட்டது. இன்று பிற்பகல் எதிர்க் கட்சிக் கூட்டத்தில் இதை அறிவித்து விட்டோம். இனி இது விஷயத்தில் நாம் மாறுபாடாக நடந்து கொள்ளத் தயாராயில்லை. நீங்கள் பிந்தி விட்டீர்கள். மன்னிக்க வேண்டும்." இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு டட்லிக்கு நிதானமாகவும் ஆணித்தரமாகவும் பதஷ்டமெதுவும் இல்லாமல் பதிலிறுத்திருப்பதாகத் தெரிகிறது.

யு. என் பி திரு. அல்பேட் பீரிஸை சபாநாயகர் பதவியில் அமர்த்துவது என்று முடிவு செய்தது. மற்றும் உபசபாநாயகர் பதவி, கமிட்டித் தலைவர் பதவி ஆகியவற்றிற்கும் இன்ன இன்ன நபர்களை அமர்த்துவது என்று யு என் பி. பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இதன் பின்னர் திரு டட்லியும் அவரது அரசாங்க அமைச்சர்களும் கண்டி தலதா மாளிகைக்கு வழமைப் பிரகாரம் விஜயம் செய்தார்கள்.

### எதிர்க்கட்சித் தீர்மானம்

அதே வேளையில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி, தமிழரசுக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, எம். ஈ. பி. கொம்யூனிஸ்டு கட்சி, ஜாதிக விமுக்தி பெரமுன ஆகிய கட்சிகள், அதாவது புதிய பாராளுமன்றத்தின் எதிர்க் கட்சிகள் சபாநாயகர் பதவியில் தாம் ஒரு ஆளை நிறுத்துவது என்று முடிவு செய்தன. திரு டி. பி சுபசிங்காவை சபாநாயகராக்குவது என்று கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த எதிர்க் கட்சிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட எதிர்க் கட்சிகள் அனைத்தும் இதை ஆதரித்து வாக்களிக்க உறுதி பூண்டிருக்கின்றன.

### எதிர்க் கட்சியே வெல்லும்

தற்போது பாராளுமன்றத்தில் அரசாங்கக் கட்சியான யு என். பி. யைக் காட்டிலும் எதிர்க் கட்சிக்கே வாக்குப் பலம் அதிகம். அதாவது யு. என். பிக்கு அசலாக 51 பேர் மட்டும் இருக்கிறார்கள். பாராளுமன்றத்தில் மொத்த முள்ள 151 மக்கள் பிரதிநிதிகளில் மிகுதி 100 பேரும் அனேகமாக எதிர்க் கட்சியுடன் சேர்ந்து வாக்களிப்பார்கள். சில வேளைகளில் மூன்று நான்கு சுயேச்சைகள் மட்டும் யு. என். பி. பக்கம் சாரலாம். இந்த நிலையில் எதிர்க் கட்சி நிறுத்தும் நபரே சபாநாயகராகத் தெரிவு செய்யப்படுவார். யு. என். பி. நிறுத்தும் நபர் தோற்கடிக்கப்படுவார்.

### அர்த்த ராத்திரியில் அவசரப் பேச்சு

சபாநாயகர் தெரிவு சம்பந்தமாக எதிர்க் கட்சி செய்த முடிவைக் கேள்விப்பட்டதும் திரு டட்லி சேனநாயகா கண்டியிலிருந்து கொழும்புக்கு ஓடோடி வந்தார். அர்த்த ராத்திரி 12 மணியளவில் அதாவது செவ்வாய்க்கிழமை இரவு தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு டெலிபோன் செய்தார். தமிழரசுக் கட்சி மட்டும் தம்மை ஆதரிப்பதானால் எப்படியாவது தாம் நினைத்தபடி தமது ஆளை சபாநாயகராக்கி விடலாம் என்ற நம்பிக்கையில் விழுந்தடித்துத் தமிழரசுத் தந்தையிடம் பேசினார்.

### தந்தையிடம் வேண்டுகோள்

"நாம் நல்ல தோர் முடிவுக்கு வரலாம். தயவு செய்து சபாநாயகர் தெரிவில் எங்களோடு சேர்ந்து வாக்களியுங்கள்" என்று திரு டட்லி தமிழரசுத் தந்தையை வேண்டிக் கொண்டார்.

### தமிழரசுக் கட்சி எடுப்பார் கைப்பிள்ளை அல்ல

அதற்கு தமிழரசுத் தந்தை ஆரம்பத்தில் குறித்தபடி அமைதியாகப் பதிலளித்தார். 'தமிழரசுக் கட்சி எடுப்பார் கைப்பிள்ளை அல்ல. எந்த நேரமும் எந்த விதத்துக்கும் அதைத் திருப்பிக் கொள்ளலாம் என்று யாராவது நம்பிக் கொண்டிருந்தால் அவர்களுக்காகப் பரிதாபப்பட வேண்டும் திட்டவட்டமான கொள்கையுடையது தமிழரசுக் கட்சி. எது நேரினும் அது நிலை தளராது. உறுதி குலையாது நின்று தமிழ் பேசும் இனத்தின் நலனுக்கான நடவடிக்கைகளையே மேற்கொள்ளும் என்ற கருத்தை சொல்லாமல் சொல்லி வைத்தார் தமிழரசுத் தந்தை.

### இது வேறு விஷயம் அது வேறு விஷயம்

"நீங்கள் பிந்தி விட்டீர்கள். சபாநாயகர் தெரிவில் எதிர்க் கட்சியோடு சேர்ந்து வாக்களிப்பது என்று நாம் உறுதி கூறி விட்டோம். இனி இது விஷயத்தில் மாற முடியாது ஆயினும் சபாநாயகர் தெரிவில் நாம் எதிர்க் கட்சியோடு சேர்ந்து வாக்களிப்பதானது சிம்மாசனப் பிரசங்க வாக்கெடுப்பிலும் நாம் அப்படியே நடந்து கொள்ள வேண்டும் என்று எம்மைக் கட்டுப் படுத்தாது. இது வேறு விஷயம்; அது வேறு விஷயம்.

### ஆதரிக்க நிபந்தனை

"சிம்மாசனப் பிரசங்கத்தின் போது தமிழரசுக் கட்சியின் ஆதரவு தங்கள் யு. என். பி. கட்சிக்கு தேவையானால் கடைசி நேரம் வரை காத்திருக்காமல் முன் கூட்டியே ஏற்பாடு செய்து கொள்வது தான் நலம். ஆனால் அப்படித் தமிழரசுக் கட்சி தங்கள் கட்சிக்கு சிம்மாசனப் பிரசங்க வாக்கெடுப்பின் போது ஆதரவு அளிப்பதானால் தமிழ் பேசும் மக்களுக்கு உங்கள் கட்சி என்ன நன்மைகளைத் தான் செய்ய முடியும் என்பதைத் தெளிவு படுத்த வேண்டும். உருப்படியான நன்மைகள் தமிழ் பேசும் மக்களுக்கு உண்மையில் கிடைக்குமாயின் தமிழரசுக் கட்சியின் ஆதரவு தங்களுக்கு கிடைக்கும்.

### பிந்தி விட்டீர்கள் வணக்கம்

"சிம்மாசனப்பிரசங்கவிஷயமாக நிலைமை இது தான். சபாநாயகர் தெரிவு சம்பந்தமாக நீங்கள் பிந்தி விட்டீர்கள். நாங்கள் எதிர்க் கட்சியோடு சேர்ந்து வாக்களிப்பது என்று தீர்மானித்து உறுதியும் அளித்து விட்டோம். மன்னிக்கவும். வணக்கம்." இப்படி வெகு நிதானமாகவும் திட்டவட்டமாகவும் கூறிவிட்டு டெலிபோனை வைத்தார் தமிழரசுத் தந்தை.

---

# 'சொந்த..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அரிது என்ற கருத்தை மறுக்கவே இந்நூல்கள் எழுதப்பட்டன.

### தமிழின் மேம்பாடு

ஏறக்குறைய 5400 சொற்களை எடுத்துக் கொண்டு வட சொற்கள் போலத் தமிழில் வழங்கப்படும் சொற்களையும், வட சொற்களுள் பல அருஞ் சொற்களையும் அகர முதலாகக் கொண்டு பாகுபடுத்திப் பிரித்துக் காட்டிய சிறப்பு பாம்பன் சுவாமிகளைச் சாரும். அவருடைய ஆழ்ந்த தமிழ்ப் பற்றைக் காட்டும் ஒரு பகுதி பின் வருமாறு:—

"......நிகண்டுகளானும், அகராதிகளானும், இவற்றிற்கு வேறொரு பன்னூல்களானும், இது தென் மொழி, இது வட மொழி, இது வடமொழிக் கலப்பெனத் தேர்ந்து கொளப்படாதனவற்றை யெளிதாகவே தேர்ந்து கோடலும், தமிழுரை நடையில் வரையப்படும் வட மொழிகளை இருதிற நூற்கும் பொருந்த எழுதுதலும், பொருளறிதலும், அச்சொற்கள் தமிழ் வழக்கில் இனிது பொருந்தத் தீஞ்சுவைச் செய்யுள்களைச் செய்தலும், தமிழின் மேம்பாடுணர்தலும், கடவுள் வழிபாடு பேணியுய்தலும் இந்நூலாற் பெரும் பயனும்.

### வளர்ச்சிக்கு வழி

தமிழ் அன்னைக்குத் தொண்டு செய்த இத்தகைய பெரியார்களெல்லாம், தூய்மையைப் பாதுகாக்கும் நோக்கத்தை முன்னணியில் வைத்திருந்தது சிறப்பாக நினைவு கூர் தற்குரியது. பிற மொழிச் சொற்களில்லாமல் தனித்தியங்கும் ஆற்றல் தமிழுக்கு உரியதென்பதை அவர்கள் மெய்ப்பித்திருக்கிறார்கள். இயன்ற வரையிலாவது தமிழுலகம் அவர்களைப் பின்பற்றுமானால், தாய்மொழி சீர்திருந்தி, மாசுகள் நீங்கி, தூய்மை பெற்று வளர்ச்சியுறு மென்று திட்டமாகக் கூறலாம்.

—'அன்னை'

---

மருத்துவம்:

# மாரடைப்பு உடனே கொல்லும் ஓர் வியாதியா?

## இல்லை என்கிறார் அமெரிக்க இருதய நோய் டாக்டர் வைட்

உடல்நலம்பேணும்முறைகள் உலகெங்கும் பரவி வருகின்றன. மக்கள் வாழ்நாளும் பெருகி வருகின்றது. அவ்வாறிருக்க, மாரடைப்பால் மக்கள் உயிர் துறப்பது பற்றி அதிகமாகக் கேள்விப்படுகின்றோம். மாரடைப்பு ஏற்பட்டால் மக்கள் மாள்வது திண்ணம் என்னும் எண்ணமும் இருந்து வருகின்றது. மாரடைப்பு என்பது உடனே கொல்லும் நோய் தானா?

### எப்படி உண்டாகிறது?

மாரடைப்பு என்பது என்ன? இருதயத்துக்கு இரத்தத்தைக் கொண்டு வரும் இரத்தக் குழாய்களில் ஒன்றில் இரத்தம் உறைந்தாலும், வேறு விதமாக இரத்த ஓட்டம் தடைப்பட்டாலும் மாரடைப்பு ஏற்படுகின்றது. இரத்தக் குழாய் அடைபட்டால், இரத்தம் இருதயத் தசைகளுக்குச் செல்ல முடியாது. சத்தூட்டும் இரத்தமே அவற்றிற்கு உணவு. அது இல்லாமல் போவதால் மாரடைப்பு உண்டாகிறது.

அமெரிக்க இருதய நோய் டாக்டர் பால். டி. வைட் மாரடைப்புப் பற்றிய உண்மைகளைப் பொது மக்களுக்குத் தெரிவிக்கப் பெருமுயற்சி செய்துள்ளார். மாரடைப்பு ஏற்பட்டவர்கள் விரைவில் இறந்து போவார்கள் என்று எண்ணுவது முற்றும் தவறு என்பது அவரது கருத்து.

### நோயாளியின் அ...

அதற்கு ஓர் உதாரணமாக அவரிடம் சிகிச்சை பெற்ற ஒரு நோயாளியைப் பற்றி அவர் சொல்கிறார். பிரின்ஸ் எட்வர்ட் தீவில் ஒருவர் ஒரு பண்ணை முதலாளியாக இருந்தார். ஒரு நாள் காலை அவருக்கு மார்பில் வலி உண்டாயிற்று. அரை நிமிஷத்தில் வலி நின்று விட்டது. சில வாரங்களுக்கு பின் அவ்வாறு வலி வந்தது அவர் தம் டாக்டரிடம் சென்றார். டாக்டர் அது இரத்தக் குழாய் அடைப்பால் ஏற்பட்ட வலி என்று கண்டு நோயாளியை டாக்டர் வைட்டிடம் அனுப்பினர். நோயாளி தாம் இரண்டொரு ஆண்டுகளே உயிர் வாழ முடியும் என்று கருதினர்.

### அற்புதம்

இவ்வாறிருக்க ஒரு அற்புதம் நிகழ்ந்துவிட்டது. அது நோய் தீர்க்க இயற்கை நிகழ்த்தும் அற்புதம். நோயாளி பாஸ்டனிலுள்ள ஒரு மருத்துவ இல்லத்தில் படுக்கையில் இருந்தார். அக்காலத்தில் இருதயம் தானே தன்னைப் பழுது பார்த்து, நோய் தீர்த்துக் கொண்டது. மற்ற இரத்தக் குழாய்கள் வழியாக அடைபட்ட குழாயில் செல்ல வேண்டிய இரத்தம் சென்றது. இரண்டு வாரத்துக்குள் இருதயத்தில் நோய் கண்ட பகுதிக்கு இரத்தம் வேறு வழியாய்ச் சென்று, நோய் தீர்ந்துவிட்டது.

அப்போது அவருடைய வயது 59. அதன் பின் 24 ஆண்டுகள் அவர் வாழ்ந்தார்.

### மாரடைப்பால் மரணம் நிச்சயமில்லை

மாரடைப்பு வந்துவிட்டாலே மரணம் ஏற்பட்டு விடாது என்பதற்கு இது ஒரு உதாரணம். ஐம்பதுக்குப் பின்னும், அறுபதுக்கும் எழுபதுக்கும் இடையிலும் மாரடைப்பு நோய் பெரும்பாலும் வருவதுண்டு. அந்நோய் வந்தவர்கள் 70 முதல் 90 வரையும் உயிர் வாழ்ந்திருக்கிறார்கள்.

இருதய நோயாளிகள் 100 பேர் பற்றி ஆராய்ச்சி நடத்தப்பட்டது. அவர்கள் படுத்து ஓய்ந்திருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. இரத்தம் உறைவதைத் தடுக்கும் மருந்துகளும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. அவர்களில் 85 பேர் சொன்னபடி நடந்தார்கள். அவர்களில் 9 பேர் மட்டும் ஒன்பது ஆண்டுக்குப் பின் இறந்தார்கள். சொன்னபடி செய்யாத 15 நோயாளிகளில் 11 பேர் இறந்து போனார்கள்.

மாரடைப்பு நோயாளிகளுக்கு ஓய்வும் சரியான மருந்துகளும் வேண்டும். நோய் தீர்ந்த பின் வழக்கமாகச் செய்யும் வேலைகளை அவர்கள் செய்யலாம்; உடற்பயிற்சிகளும் செய்யலாம்; இன்பப் பொழுது போக்குகளிலும் ஈடுபடலாம். நோய் தீர்ந்தபின் ஓய்ந்து கிடப்பவர்களை விட உழைப்பவர்களே நெடுங்காலம் உயிர் வாழ்கிறார்கள். இருதய நோயாளிகள் உழைக்காமல் ஓய்ந்திருத்தல் வேண்டும் என்பது சிறிதும் ஆதாரமில்லாத தவறான கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகெங்கைச் சீமை பிரான்ஸ் போகிறது


## சினிமா விழாவுக்கு

கவிஞர் கண்ணதாசன் தயாரித்த "சிவகெங்கைச் சீமை" என்ற படம் பிரான்ஸ் நாட்டில் நடைபெற விருக்கும் ஒரு சினிமா விழாவுக்கு அனுப்பப்பட விருக்கிறது.

வெளி நாடுகளில் நடக்கும் சினிமா விழாக்களுக்கு இந்தியாவில் தயாரிக்கப்படும் படங்களை இந்திய மத்திய அரசாங்கமே அனுப்பி வருகிறது.

அணிமையில் எகிப்து நாட்டின் தலை நகரான கெய்ரோவில் நடந்த சினிமா விழாவுக்கு பத்மினி பிக்ஷர்ஸாரின் "கட்டபொம்மன்" படம் அனுப்பப்பட்டது தெரிந்ததே. இதே விழாவுக்கு "சிவகெங்கைச் சீமை" படத்தையே அனுப்புவது என்று ஏற்பாடு செய்யப்பட்டபோதிலும் கடைசி நேரத்தில் "கட்டபொம்மன்" படம் தான் அனுப்பி வைக்கப்பட்டது. இது பற்றி பலரும் பல விதமாகப் பேசிக்கொண்டார்கள். சூது, சூழ்ச்சி எல்லாம் நடந்ததாகவும் சிலர் கருதி வருகிறார்கள்.

எது எப்படி இருந்த போதிலும் கெய்ரோவில் நடந்தது போன்ற பிறிதொரு சினிமா விழாவுக்கு "சிவகெங்கைச் சீமை" படம் அனுப்பப்படுவது குறித்து பலருக்கும் மகிழ்ச்சி. இந்தப் படத்தோடு சுதர்சனம் பிக்ஷர்ஸாரின் "அவள் யார்?" என்ற படத்தையும் அனுப்ப வேண்டும் என்று மத்திய அரசாங்கத்துக்கு சினிமா அதிபர்கள் சங்கம் சிபார்சு செய்திருக்கிறது. மத்திய அரசாங்கம் சங்கத்தின் சிபார்சை ஏற்று இரு படங்களையும் அல்லது சிவகெங்கைச் சீமையைத் தானும் விழாவுக்கு அனுப்பி வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



ஜாஹினி புரொடக்ஷன்ஸ் 'ராஜமகுடம்' படத்தில் ராமராவ்-ராஜசுலோசனா.

# அன்புத் தங்கைக்கு

## அருமை அண்ணா கடிதம்

அன்புத் தங்கை மாலாவிற்கு,......

வணக்கம்; உனது வாழ்க்கை ஒப்பந்தம் நடந்தேறி ஒரு வருடம் சென்ற பின்னும் நான் உனக்குக் கடிதம் எழுதாததற்கு மன்னித்துக்கொள் உனது கணவர் வீட்டில் நீ நல்ல பெயரோடு வாழ வேண்டும்; உன் மாமியாரோடு நல்ல முறையில் நடந்து மாமியார் மெச்சிய மருமகள் என்ற பட்டத்தையும் எடுத்து, "மாலா ஒரு மங்கல விளக்கு" என்று ஊரார் போற்றும் படியும் செய்ய வேண்டும். இது தான் என் நெடு நாள் ஆசை! தெய்வமே துணை எனக்கொண்டு, நீ அதன்படி நடந்தால், எங்கள் குலதேவியின் அருளால் உனக்குத் தெய்வ பலம் என்றென்றும் கிடைக்கும்.

உனது திருமணத்திற்கு முன் நான் உன்னைப் பற்றித் தப்பான அபிப்பிராயம் வைத்திருந்ததற்குப், அதன் காரணமாக நான் உனது திருமணத்தின் போது சமூகம் தராததற்கும் என்னைப் பார்த்து, உலகம் சிரிக்கிறது. நீ ஓர் பத்தரை மாத்துத் தங்கம் என நான் இப்போது தான் உணர்ந்தேன். என் கண் திறந்தது. உனக்கு என்ன கல்யாணப்பரிசு கொடுக்கலாம் என்று நான் சதா யோசித்துக்கொண்டே இருக்கிறேன்.

சகோதரி,......


பெண் குலத்தின் பொன் விளக்காகத் திகழ்ந்த உனக்குக் கண் நிறைந்த கணவன் கிடைத்து விட்டான் அவன் உன் மனசுக்கேத்த மாப்பிள்ளை என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் கிடையாது. அவனுடன் நீ சுமங்கலியாய் வாழ்வாயம்மா!......

புதுமைப் பெண்ணே,......

இத்துடன் நான் ஓர் ரகசியத்தையும் உனக்குக் கூறி வைக்க விரும்புகிறேன் நான் சொல்லும் ரகசியம் என்ன என்பதை அறிய நீ துடியாய்த் துடிப்பாய் "சொல்லு தம்பி சொல்லு;! என அந்த ரகசியத்தை உன் தங்கையிடம் சொல்லு!......" என ஊரார் என்னைத் தூண்டியதன் பேரிலும், முக்கியமாக உன் சினேகிதி காவேரியின் கணவன் என்னை வற்புறுத்தியதன் பேரிலும், அதை நான் உனக்குக் கூறுகிறேன்......

......இன்று உன் கணவனாக இருக்கும் ராமு ஆமாம்; என் [illegible]

(15 ம் பக்கம் பார்க்க)



படவிமர்சனம்

# இரும்புத் திரை

ஜெமினி படங்கள் அதிகம் வெளி வருவதில்லை. அத்தி பூத்தாற் போல வரும்; வருவது எதுவும் இலேசில் சோடை போய் விடுவதில்லை; யாரும் நம்பிப் போய் அதைப் பார்க்கலாம். இரும்புத்திரையைப் பொறுத்த வரையிலும் நிலைமை அப்படித்தான்.

முதலாளிக்கும் தொழிலாளிக்குமிடையே உருவாகிவிடும் எதிர்ப்பு மனப்பான்மையும் கசப்புத் தன்மையுமே இரும்புத்திரை. இதை இரு பாலாரும் விட்டுக் கொடுப்பதன் மூலமும் அஹிம்சை முறையில் பிரச்னையை அணுகுவதன் மூலமுமே விலக்கி வெற்றி காணலாம் என்பதை நல்ல படியாக இரும்புத்திரை என்ற படத்தில் சொல்லி வைத்திருக்கிறார்கள். இது இன்று தேவையான கருத்து. நல்ல கதையும் அத்தோடு அருமையான நடிப்பையும் சேர்த்து சுவை படத் தந்திருக்கிறார்கள்.

சிவாஜியா, சிவாஜி......பற்பல பாத்திரங்களில் வந்து சக்கை போடு போடுகிறார். வைஜயந்தியோடு காதல் பண்ணும் கட்டங்கள்... அடடா... அவர் நடிகர் தான் வைஜயந்தியும் நடிகை தான் வைஜயந்தி தமது அம்மா வசுந்தராவுடனும் தோன்றுகிறார். நடனமும் ஆடுகிறார்.

குணசித்திர நடிகர்கள் இருவர்—ரங்கராவும் சுப்பையாவும் வருகிறார்கள். முன்னவர் முதலாளி; பின்னவர் தொழிலாளி. அப்புறம் நடிப்புக்கு கேட்கவா வேண்டும்?

சரோஜாதேவியும் வந்து போகிறார். தங்கவேலு வந்து சும்மா போகவில்லை. படம் பார்ப்பவர்களுக்கு நிறைய நிறையச் சிரிப்பு விருந்து தந்து போகிறார். 'கலைவாணருக்குப் பின்னர் அவரை விட்டால் ஹாஸ்யத்துக்கு வேறு யார்?'—இந்த நிலைமையை ருசுப்படுத்துகிறார்.

காலஞ் சென்ற பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடல்கள் படத்துக்கு பொருளும் சுவையும் ஊட்டுகின்றன. டைரக்ஷன் ஜெமினியின் திறமைக்கு ஊறு செய்யாத வகையில் அமைந்திருக்கிறது. படப்பிடிப்பு நன்றாகவே இருக்கிறது.

கொழும்பு எல்பின்ஸ்டனிலும் சிலோன் தியேட்டர்ஸாரின் பிற முக்கிய தியேட்டர்களிலும் இரும்புத் திரை இப்பொழுது காண்பிக்கப் படுகிறது.

படவிமர்சனம்

# குறவஞ்சி

"என் மகளை மணப்பான் என நம்பித்தானே கதிரவனை தளபதியாக்கினேன். ஏமாற்றி விட்டானே" என்று பேரரசர் (ஆர். பாலசுப்பிரமணியம்) பெருமூச்சுவிடுகிறார்.

"அவருக்காகவே பிறந்தவள் நான் என்று பெருமைப் பட்டுக்கொண்டேனே, என் ஆசை எல்லாம் பாழ்தானா?" என்று குமரி (சாவித்திரி) குமுறுகிறார்.

"தாயகத்தை வாழ்விக்க நாடோடியாகத் திரிந்தேன். நாடு காக்கும் தளபதியானேன். எனக்குப் பட்டம் வேண்டாம்; பதவி வேண்டாம்; ஆணவத்தை எதிர்க்கும் ஆற்றலை என் நாட்டு மக்கள் பெற்றுவிட்டால் அதுவே போதும்" என்று முழங்குகிறான் கதிரவன் (சிவாஜி கணேசன்).

"என்போன்ற ஏழைகளுக்குக் காதல் எட்டாத நிலவு தானா? கையில் கிட்டாத கனிதானா?" என்று புலம்புகிறாள் பொன்னி (மைனாவதி)

இத்தனைக்கும் இடையில் பொல்லாத இமயனின் (ஓ. ஏ. கே தேவர்) வலையில் சிக்கிய முகாரியின் (வகாப் காஷ்மீரி) ஆட்சியை ஒழிக்க அறிவுப் பிரசாரம் நடைபெறுகிறது. மக்கள் அணிவகுப்பு புறப்படுகிறது.

அத்தோடு கொடுங்கோலாட்சியினர் அடங்கினர். நாடு தன்னைக் காப்பாற்றிக் கொண்டது. ஆயினும் பொன்னி போய்விடுகிறாள். அவளைப் புதைக்க தூக்கிச் செல்கிறான் கதிரவன். படம் பார்த்துக்கொண்டு இருப்பவர்களுக்கும் வெளியேறிவிட வேண்டும் என்ற துடிப்பு தலையெடுக்கிறது

கலைஞர் கருணாநிதியின் அடுக்கு வசனம் இருக்கிறது நடிகர்களின் மிடுக்கான நடிப்பு இருக்கிறது. சாவித்திரி படை நடத்தும் புதுமையும் இருக்கிறது. இன்னும் ராஜகோபாலின் சிறுவர் ஹாஸ்யமும் பத்மினி பிரியதர்சினி, விஜயலட்சுமி ஆகியோரின் நடனமும் சிதம்பரம் ஜெயராமனின் குரலிசையும்கூட இருக்கின்றன.

எல்லாம் இருந்தும் ரஸிகர்களுக்கு பொறுமை மட்டும் இல்லையானால் போச்சு.

கொழும்பு சென்ட்ரல் தியேட்டரிலும் சிலோன் என்டர்டெயின்மென்ட்ஸ் லிமிட்டட் ஸ்தாபனத்தாரின் வெளியூர் தியேட்டர்கள் சிலவற்றிலும் இப்பொழுது காண்பிக்கப் படுகிறது.

# உழவும்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வாத்து வளர்ப்பில் அதிக இலாபம் கிடைக்கும். முட்டை விற்பனை என்றாலும் சரி, வாத்துப் பறவை விற்பனை என்றாலும் சரி கோழிப் பண்ணையிற் போலன்றி வாத்துப் பண்ணையில் நிச்சயமாக இலாபம் கிடைக்கும் என்பது உறுதி. வாத்து வளர்ப்புக்கு அதிகச் செலவு ஏற்படாது; அநுபவமும் அப்படியொன்றும் அதிகம் வேண்டுவதில்லை.

### நல்ல இடம்

நாட்டுப்புறங்களில் குளம் குட்டை காணப்படும் தோட்டங்களே வாத்துப் பண்ணை நிறுவுவதற்கு ஏற்ற இடங்களாகும். நீர் நிலைகளை வாத்துக்கள் அதிகம் விரும்புகின்றன. தண்ணீரைக் கண்டால் அவைகளுக்கு அலாதி விருப்பம் நீரில் இறங்கி விளையாடுவதும் நீரைக் குடித்துக் குடித்து இரை எடுப்பதும் அவைகளின் இயல்பு. நன்செய் நிலங்களைவிட தோட்டப் பரப்பிலுள்ள களி மண்ணை வாத்துக்கள் விரும்புவதால், அப்பூமியிற்றான் அவை செழிப்பாக வளருகின்றன

### கூடிய இலாபம்கிடைக்கும்

வாத்துப் பண்ணை வைக்க விரும்பும் கிராமத்தவர் பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்வது தகும். நீர் நிலையுள்ள இடங்களிலும் தோட்டப் பூமியிலும் வாத்துக்களை ஏராளமாக வளர்க்கலாம். அவ்விடங்களிற்றான் அவை பல்கிப் பெருக நல்ல வாய்ப்புண்டு. வாத்து முட்டைக்கும், கோழி முட்டைக்கும் விலையில் சிறிதளவே வித்தியாசமிருப்பதாலும், வாத்து முட்டைகளுக்கு நகரங்களிலுள்ள உணவு விடுதிகளிலும் போசனசாலைகளிலும் நிறைய கிராக்கி இருப்பதாலும், சில வாத்து இனங்களின் இறைச்சியைப் பலர் விரும்பி உண்பதாலும் வாத்து இனங்களை விருத்தி செய்வது கூடிய இலாபத்தையும் நிச்சயமான ஊதியத்தையும் தரும். ஒரு கோழி ஓராண்டில் இடக்கூடிய முட்டைகளைக் காட்டிலும் அதிகமாக ஒரு வாத்து முட்டையிடும்.

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

### அடைகாப்புப் பொறி வைத்திருக்கலாம்

கிராமத்தில் சிறிது பண வசதியுள்ளோர் வாத்து முட்டைகளை அடை வைத்து நிறையக் குஞ்சுகளைப் பெறுவதற்காக, செயற்கை அடைகாப்புப் பொறியொன்றை வைத்துக் கொள்ளலாம். வாத்துக்கள் பெரும்பாலும் காலையிலோ மாலையிலோ முட்டையிடுமே தவிர, பகற்பொழுதில் முட்டையிடா. எனவே அவைகளை மேய்ச்சலுக்கு கொண்டு செல்பவர் நேரங்காலத்தைக் கவனித்து பண்ணையிலிருந்து அவைகளை ஓட்டிச் சென்றும் பண்ணைக்கு மீண்டும் அவைகளை உரியகாலத்தில் கூட்டிக் கொணர்ந்தும் கருமமாற்ற வேண்டும்.

### பேணிப் பாதுகாப்பது எப்படி?

இன்னும் வாத்து வளர்ப்பவர் கவனத்திற்கான மற்றொரு விஷயம் என்னவென்றல், சாதாரணமாக வாத்துக்களை கயிறுகளால் பிணைக்கப்பட்ட படல்களைக் கொண்ட அடைப்பினுள் விட்டு வைத்தல் போதுமானது ஆனல் மழைக்காலத்திலும் இராக்காலத்திலும் நரி, மரநாய் முதலியவற்றின் தொந்தரவிருக்குங்காலும் அவைகளைக் குடிலுக்குள் அடைப்பது நல்லது.

மேலும் வாத்துப் பண்ணை நிறுவ விரும்புவோர் கவனிக்க வேண்டியதொன்றுண்டு. அது யாதெனில் வாத்துக்களுடன் பழகுவதற்கு ஒருவரிடம் நிதானமும் பொறுமையும் இருப்பதவசியம் ஏனென்றல் அப்பறவைகள் இயல்பாகவே மிகவும் சாந்த குணம் பொருந்தியவை. அவைகளை பயமுறுத்தி வளர்க்காது பரிவுடனேயே வளர்க்க வேண்டும். பயமுறுத்தினுல் வளர்ச்சி குன்றிவிடும்; முட்டையிடும் சக்தியும் தற்காலிகமாகக் குறைந்துபோகும்; பரிவு இன்றேல் பயன் கெட்டுவிடும். வாத்துப் பண்ணை வைப்பவர் இதனை மறந்துவிடலாகாது.

### சுலபமான தொழில்

இறுதியாக, வாத்துக்களைப் போஷிப்பதிலும் வளர்ப்பதிலும் அதிகச்செலவும் சிரமமுமில்லையாதலால் கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளியவர்க்கு இது ஏற்றதொரு தொழிலாகும். எவ்வாறெனில் வாத்துக்கள் புழு பூச்சி, புற்பூண்டு, தவளை நத்தை, மற்றும் தானியங்கள் ஆகியவற்றைத் தாமே தேடி இரையாக உண்கின்றன. கோழிகளுக்குக் கொடுப்பது போன்ற விலையுயர்ந்த உணவு இவைகளுக்குத் தேவையில்லை. அன்றியும் வாத்துக்கள் எப்போதுமே ஒன்றை விட்டு ஒன்று பிரியாது கூட்டமாக வாழும் இயல்பினதாகும். ஒருவர் 100, 150 பறவைகளைக் கூட மேய்ச்சலுக்குக் கூட்டி சென்று வரலாம்.

# உழவும் தொழிலும்...

### அநுகூலங்கள் ஏராளம்

மேலும் வாத்துக்கள் நோய்களுக்கு உட்படாத அதிசயப் பிறவிகள் என்று கூறப் படுகிறது. கோழிகளுக்கு நோய் வரும்; வந்தால் கோழிப் பண்ணையிலுள்ள எல்லாக் கோழிகளையும் நோய் பிடித்து பண்ணையையே அழித்து விடுவதை நாம் பார்க்கிறேம். ஆனல் வாத்துக்கள் விஷயத்தில் அப்படியான அவல நிலை இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. வாத்து வளர்ப்பிலுள்ள இவ்வளவு அநுகூலங்களையெல்லாம் எண்ணிப் பார்க்கும் போது நம் நாட்டுக் கிராம மக்கள் தம் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு வாத்துப் பண்ணை நிறுவுவது எவ்வளவு பொருத்தமானது என்பது சொல்லாமலே விளங்கும்.

### ஆடும் வாத்தும்

வேளாண்மை செய்யும் நிலச் சொந்தக்காரர் வாத்துப் பண்ணை வைப்பதை ஓர் உப தொழிலாகக் கொண்டால் அப்பண்ணையிலிருந்து அவருக்கு முட்டை, இறைச்சி என்பன கிடைப்பதுடன், வேறு வழியிலும் நன்மை கிட்டுகிறது ஒருவர் தம் விளை நிலத்தில் வாத்துக்களை வளர்ப்பதால் அவைகளின் எருக்கள் நிலத்தின் பூசாரத்தை வளப்படுத்துகின்றன. இன்னும், ஆடுகள் செழித்து வளர்வதற்கும் வாத்துக்கள் உறுதுணையாகின்றன. எவ்வாறெனில் வாத்துக்கள் புழு பூச்சி, நத்தை ஆகியவற்றைக் கொத்தித் தின்று விடுவதால் வாத்துப் பண்ணையிருக்குமிடத்திலுள்ள ஆடுகளை, நத்தையின் வழியாக அவற்றின் குடலில் பூச்சி உற்பத்தியாவதைத் தடுத்து, நோயினின்றும் காப்பாற்றுகின்றன. இவ்வாறுக ஆடு வளர்ப்போரும் வாத்துப் பண்ணையின் வாயிலாகப் பயனடைகிறர்கள்.

### பலவகைப் பயன் கிடைக்கும்

கிராமப் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கான பண்ணைத் தொழில்களுள், மேலே கூறப்பட்ட ஆட்டுப் பண்ணையையும் வாத்துப் பண்ணையையும் கிராம வாசிகள் தத்தம் வசதிக்கும் விருப்பத்திற்கும் ஏற்றுப் போல் தனித் தொழிலாக—அதாவது முழு ஜீவனத் தொழிலாகவும் அல்லது ஓய்வு நேரத்தில் கவனிக்கக்கூடிய துணைத் தொழிலாகவும் கொண்டு நடத்தலாம். அல்லது தேனி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ஆகியவற்றுடன் ஆடு வளர்ப்பு, வாத்து வளர்ப்பு என்பனவற்றையும் சேர்த்து ஒரு கூட்டுப் பண்ணையாகவும் நடத்தலாம்.

தனித் தொழிலாகவோ, துணைத் தொழிலாகவோ அன்றி கூட்டுத் தொழிலாகவோ எந்த வகையிலாவது பண்ணை நிறுவுவோர் தம் கவனத்தைத் தக்கபடி பண்ணையிற் செலுத்தி, வளர்ப்பு முறைகளைச் செம்மையாக்கிக் கொள்வார்களானுல் வருவாய் ஒழுங்காக வந்து கொண்டிருக்கும். அத்துடன் ஆடு வளர்ப்பிலும் வாத்து வளர்ப்பிலுமிருந்து கிடைக்கும் பொருள்களை—அதாவது இறைச்சி, பால் முட்டை ஆகியவற்றை அவ்வப்போது சந்தைகளுக்குச் சொற்பச் செலவில் எடுத்துச் செல்ல வசதிகளையும் அமைத்துக் கொண்டால், அப்பொருள்களை இலாப முறையில் விற்று ஊதியந் தேட முடியும்.

### விற்பனை வசதி வேண்டும்

கிராமங்களில் பல்வேறு பண்ணைத் தொழில்களை ஆங்காங்கே தம் சீவனேபாயத்திற்காக மேற்கொண்டிருக்கும் மக்கள், அத்தொழில்களில் இலாபம் பெறுவதற்குச் சிறந்த முறையில் உற்பத்தியைப் பெருக்கினுல் மட்டும் போதாது. உற்பத்தியாகும் பொருள்களை நல்ல விலைக்கு விற்பனையாக்க வேண்டும். எந்த முறையில் பொருள்களை விற்ருல் இலாபம் அதிகம் கிடைக்குமோ, அந்த முறையில் அவைகளை விற்க வேண்டும். இத்துறையில் கூட்டுறவுச் சங்கங்கள் அருந் துணை புரியும். கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனையை மேற் கொள்ளுமானுல் கிராம மக்களின் தனிப்பட்ட உழைப்பும், கால விரயமும், விற்பனைச் செலவும் குறைந்து, ஊதியம் உயர்ந்து, பொருளாதாரம் பெருகும்.

(உபயம்: இலங்கை வானெலி)

### நெடுங்கடல் நீர்மை

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

கடலும் தன் இயல்பு குன்றும். அதனகத்தே, இருநண்டு மீன் முதலிய உயிரினங்களும், சங்கு முத்து பவழம் முதலிய திரவியங்களும், பிறவும் பிறவா. அதனுலே அஃது, உலகத்தார்க்குப் பயன்படாத உவர்ப் பரப்பாகி விடும்.

"உலகத்தைச் சூழ்ந்து, அதற்குக் காப்பாகவும் அணியாகவும் விளங்குகின்ற, ஆழ்ந்தகன்ற பெரிய கடலும், தன் நீர்மை குன்றுது பயன்படுப் பெருமை அடைவதறகும் மழையே வேண்டும்" என்கின்றர், பொய்யடிமையிலாத புலவர் பெருந்தகை.

—பா ஆறுமுகம்.





இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
கூனன் நிமிர வேண்டும்!
குருடன் பார்வை பெறவேண்டும்!
கோழை வீரனுக வேண்டும்!
இந்தக் கொள்கை முழங்க
சென்ட்ரல் (மருதானை) ஓடியன் (கல்கிசை)
நடிப்புக்கோர் திலகமெனத் திகழ்கின்ற செம்மல் நாடெங்கும் கலைத்திறத்தால் புகழ் மணக்கும் பொற் பாவையுடனே பேராற்றல் காட்டுகின்ற பெரு நடிகர் குழுவும் பாராட்டு பெறுகின்ற பான்மையிலே நடித்து.........தமிழ் கொழிக்கும் எழுத்தாலே தன் மானம் செழிக்கின்ற கருத்தாலே படஅமைப்பு முறை— படைப்புமுறை தனிசிறக்க மேன்மைமிகு மேகலா தருகின்ற திரை விருந்து.
குறவஞ்சி
கதை வசனம்: மு. கருணைநிதி
டைரக்ஷன் : காசிலிங்கம்

2-வது வாரம்!
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
எல்பின்ஸ்டன் (மருதானை) ரெக்ஸி (வெள்ளவத்தை) வின்ஸர் (யாழ்ப்பாணம்) ரீகல் (யாழ்ப்பாணம்) வேல்ஸ் (கண்டி)
நெல்ஸன் (திருகோணமலை) கிங்ஸ் (பதுளை) இம்பீரியல் (மட்டக்களப்பு)
ஆகிய திரைகளில்
சிவாஜி கணேசன்-வைஜயந்திமாலா-வசுந்தராதேவி
வனஜா-எஸ். வி. சுப்பையா-சரோஜாதேவி-கே. ஏ. தங்கவேலு நடிக்கும்
இரும்புத் திரை

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
கெயிட்டி ரேயல் (பண்டாரவளை) அசோக்கமாலா (நீர்கொழும்பு) தாஜ்மஹால் (மாத்தளை) இம்பீரியல் (இரத்தினபுரி) சந்திரலோக (கம்பளை) மிட்லண்ட் (நாவலப்பிட்டி)
ஆகிய தியேட்டர்களில்
கல்யாணிக்குக் கல்யாணம்
ராஜேந்திரன்-ராஜம்-தங்கவேலு-மைனுவதி-பாலையா நடித்தது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஔவை அமுதம் : 25

## அரவமாட்டேல்

குறவனின் பெட்டிப் பாம்பு படம் விரித்தாடும்போது அழகாக இருக்கிறது. அதைப் பார்க்க நாமும் ஆசைப்படுகிறோம். பாம்பு என்றதும் பயம் ஏற்பட்டாலும் அது ஆடும் அழகிலே மெய்மறந்து ஆட்டத்தைப் பார்க்கிறோம். எங்களை மகிழ்வித்துப் பணம் பறிக்க குறவனும் குழலை ஊதிப் பாம்பை ஆட்டுவிக்கிறான்.

பெட்டிப் பாம்புக்கு விஷப் பற்கள் இரா குறவன் அவைகளைப் பிடுங்கி விட்டிருப்பான். அதனால்தான் நாமும் பயமெதுவுமில்லாமல் ஆட்டத்தைப் பார்க்க முனைகிறோம். பற்கள் பிடுங்கப்பட்டாலும் பாம்பின் விஷப் பையில் விஷம் ஊறிக்கொண்டேயிருக்கும். அதனால் பாம்பாட்டி எப்பொழுதும் ஜாக்கிரதையாக இருந்துகொள்வான். சிலசமயம் தன் பாம்பே அவனைத் தீண்டிவிடுவதுமுண்டு.

காமம், கொலை, களவு, பொய் முதலிய துர்க்குணங்களும் பாம்பைப்போன்றவைதான். பல்லில்லாத பாம்பைப்போல் முதலில் அவை தீங்கில்லாதனவாய்க் காணப்பட்டாலும் முடிவில் அவையே எமக்கு இயமனாக வந்து சேரும். படம் விரித்தாடும் பாம்பு அழகாயிருப்பதுபோல் துஷ்ட எண்ணங்கள், குணங்கள் யாவும் இனிப்பாகவே இருக்கும். அதனால், பாம்பை ஆட்டுவிக்கும் குறவன் குழலை ஊதுவதுபோல் துர்க்குணங்களைப் பழகிக்கொள்ள நாம் பணத்தை விரயம் செய்கிறோம்.

பாம்பு எப்படியோ அப்படித்தான் துஷ்ட நண்பர்களும், அவர்கள் சகவாசமே அபாயம்தான்! பட்டினி கிடந்த பெட்டிப் பாம்பு பெட்டியைத் திறந்ததும் வெட்டச் சீறும். தீய நண்பர்கள் தமக்கு உதவி செய்யாதபோது எம்மைச் சீறுவார்கள். பாலூட்டி வளர்த்த பாம்பு பாலூட்டியவனையே கடிக்க முனைவதுபோல் தீயவர்களும் தமது நண்பரையே அழிக்க முனைவார்கள்.

'அரவமாட்டேல்' என்று பாட்டி சொல்லும்போது காட்டுப் பாம்பை மாத்திரம் ஆட்டாதே என்று சொல்லவில்லை. துர்க்குணங்களாகிய பாம்பை உன் மனமாகிய பெட்டிக்குள்ளே வைத்து ஆட்டாதே என்றும் சொல்கிறாள்.

—ஏ. ஜீ. ஆனந்தன்

## என் தோழன்

எனக்கு ஒரு தோழன் இருக்கிறான். அவனுக்குப் பதின்மூன்று வயது கடந்துவிட்டது. எனக்குப் பிறகு தான் அவன் பிறந்தவனாயினும் என்னைவிட அவன் மூத்தவன். ஏனெனில் எனக்கு வேண்டிய புத்திமதிகளைப் புகட்டி என் வாழ்வினைச் செப்பனிட்டு வருவதால் என்னிலும் அவன் பெரியோன்தானே? இந்நண்பன் ஒவ்வொரு ஞாயிறிலும் என்னைச்சந்திப்பான். சிலசமயம் ஞாயிற்றுக்கு முன்னும் பின்னும் சந்திப்பதுமுண்டு. எத்தனையோ இனிய கவிதைத்தேன்களையும், கதைக் கற்கண்டுகளையும், செய்திக் கருப்பட்டிகளையும் சேர்த்துச் செந் தமிழ்ச்சேலையாற் சுற்றி எடுத்துக் கொண்டே என்னிடம் வருவான்.

வாரா வாரம் நல்ல உபயோகமான புதுப்புது உணவுகளையே இவன் எடுத்து வருவது வழக்கம். யானும் கண் என்ற கரண்டியை வாய் என்ற கரத்தாற் பற்றி அவன் தரும் உணவுகளைஎடுத்து காது என்றவாய் மூலம் நெஞ்சு என்ற வயிற்றுள் இட்டுஅறிவுப் பசியைத் தீர்த்துக்கொள்வேன். என் தோழன் சாதி சமய பேத மற்ற நடு நிலைமையாளன். தோழனுக்குரிய இலட்சணங்கள் வாய்ந்தவன். இவனுக்குப் பல எதிரிகள் இருந்தும் இவன் புகழ் வளர் பிறை போன்றே இருக்கின்றது.

சில சமயம் என் தோழன் என்னைச் சந்திக்கத் தவறுவதுமுன்டு அச்சமயம் யான் படும் பாடு? அப்பாடா, சொல்லவே முடியாது! இத்தகைய தோழனுக்கு யான் செய்யுங் கைமாறு யாது என்பதே இப்போது என் யோசனை? இனி, என் தோழனின் பெயரைச் சொல்லவுமா வேண்டும்? அவனே சுதந்திரன். நல்லவன் தானே? சுதந்திரத் தோழனே நீ. நீடூழி வாழ்வாயாக!

— சோ. இராசேந்திரன்.

## நல்ல தீர்ப்பு

முன்னொரு காலம், பாரதத்தின் அதி தென்பாலுள்ள ஓர் கிராமத்திலே கந்தன், செல்வன், வேலன், இராமன் என்று நான்கு பஞ்சு வியாபாரிகள் ஒன்றுகச் சீவித்து வந்தார்கள். நான்கு பேரினதும் பஞ்சு ஒரு அறையினுள்ளேயே குவித்திருந்தது. எலிகள் பஞ்சை நாசமாக்கி வந்ததால் நான்கு பேரும் சேர்ந்து ஓர் பூனையை வளர்த்தார்கள். முறையே ஒவ்வொருவரும் பூனையின் ஒவ்வொரு காலையும் தத்தமக்கென்று சொல்லி வைத்திருந்தனர். ஓர் சமயம் கந்தனுக்கான பூனையின் காலில் புண்ணுண்டாகியது. கந்தன் அதற்கு மருந்து போட்டு சீலையைச் சுற்றி விட்டான். அது அடுப்பங்கரையில் துயிலச் சென்றது.

புண்ணைச் சுற்றியிருந்த சீலையில் தீ பற்றிக்கொண்டது. தீ புண்ணை நெருங்கியதும் பூனைதான் வழக்கமாகப் படுத்துறங்கும் பஞ்சு குவியலை நாடியது. கணப்பொழுதில் பஞ்சு சாம்பலாகியது. "உன் காலினால் தானே எங்களது பஞ்சும் அழிந்தது" என்று மற்றைய மூவரும் கந்தன் மீது வழக்குத் தொடர்ந்தனர். திடீரென யூகிக்கக் கூடிய நீதிபதி தனது சமயோசித புத்தியை உபயோகித்துப் பின் வருமாறு தீர்ப்பளித்தார்:— "இக்குற்றம் கந்தனைச் சார்ந்ததல்ல. உங்கள் மூவருக்குமுரிய பூனையின் மூன்று கால்களும் இல்லாவிட்டால் அது அடுப்பங்கரையிலிருந்து பஞ்சு இருந்த அறைக்குப் போயிருக்க முடியாது. எனவே நீங்கள் மூவரும் கந்தனுக்கு ரூபாய் இருபத்தைந்து அபராதம் செலுத்த வேண்டும்".

—ச. தவராசா, ஊச்சந்திவு



கொழும்பு கப்பித்தாவத்தையிலுள்ள தொண்டர் வித்தியாலய மாணவ மாணவிகள் வித்தியாலயத் தலைமையாசிரியர் திரு. ஆர். சரவணமுத்து தலைமையில் அணிமையில் புராதன திருக்கேதீஸ்வர தரிசனத்துக்காக சென்றிருந்தனர். மன்னார் கோட்டையைப் பார்வையிட்டுவிட்டு அவர்கள் வெளியே வந்த போது எடுக்கப்பட்ட படம் மேலே தரப்பட்டிருக்கிறது.

வள்ளுவர் குரல்: 17

## நெடுங்கடல் நீர்மை

ஞாயிற்றின் வெப்பத்தினாலே கடல் நீர் ஆவியாகி, வானத்துக்குச் சென்று மேகமாகத் திரளுகின்றது; காற்றின் உதவியினால் உயர்ந்தும் மலைகளிற் படிந்தும் குளிர்ந்து, மழையாகப் பொழிகின்றது. இவ்வாறு திரும்பத் திரும்ப நிகழுகின்றது.

இங்ஙனம் நிகழ்வதனாலே தான், நிலம் பயனுடையதாக நிலைத்திருக்கின்றது; கடலும் தன் நீர்மையோடு—இயல்போடு—நெடுங் கடலென்று பெருமையாகப் பேசப்படுகின்றது. மழை இன்றேல் நிலம் பயனற்றுப் பாழ்படுவது போலவே, கடலும் வளமற்று வறண்டு விடும்; நீர்மை குன்றி விடும்.

"நெடுங்கடலும் தன்நீர்மை
குன்றும தடித்தெழிலி
தான் நல்காதாகி விடின்"

எழிலி என்னும் அழகிய மேகம், கடல் நீராவியைத் [illegible] வற்ற நீர்ப் பரப்பையுடைய

(13-ம் பக்கம் பார்க்க)

பாரதியின் பாட்டொலி 1

## 'சுதந்திரப்பள்ளு'

நாம் என்று எம்மினத்தின் விடுதலைக் கீதம்—"சுதந்திரப் பள்ளு" பாடுவோமோ? எனத் துடித்தார் பாரதி அன்று. இன்று நாம் ஈழத்தில் துடிக்கின்றோம். எம் போன்ற பல இலட்சம் மக்களின் இதயங்கள் துடிக்கின்றன.

எல்லா விடங்களிலும் "சுதந்திரம்" என்ற பேச்சாகவே யிருக்கிறது ஆனால் நாம் அடிமைகள். அனாதைகள். ஒடுக்கப் பட்டவர்கள். சிறுபான்மையினர். எல்லோரும் சமம் என்று சங்கநாதஞ் செய்த நாம்; எல்லோரும் ஒடுக்கப்பட்டுக் கிடக்கிறோம்.

கெட்ட நய வஞ்சகரை விரட்டியடிக்க முற்பட்ட நாம் இன்று ஈழத்திலிருந்தே விரட்டியடிக்கப் போகிறோம். உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்த நாம்—வீணில் உண்டு களித்திருப்பவர்களால் நிந்தனை செய்யப்படுகிறோம்.

நாமிருக்கும் நாடு நம்முடையது என்று சுதந்திரப் போரில் போரிட்டோம். போராடிப் பெற்ற ஈழகத்தில் எமக்கும் உரிமையுண்டென அறிந்தோம். பூமியில் இனி நாம் எவர்க்கும் அடிமையில்லை — இறைவனுக்கே அடிமை என்று எண்ணியிருந்தோம். ஆனால்—

இன்று எமது சகோதரர்கள் அவர்கட்கு நாம் அடிமைகள் என்றும்; நாம் குடியேறிவர்கள்—கள்ளத் தோணிகள் என்றும் இழிவாகக் கூறக் கேட்கிறோம். இப்படிப்பட்ட தாழ்ந்த நிலையில் தானா நாம சுதந்திரப்பள்ளுப் பாடுவது? இல்லை போராட வேண்டும். இழந்தவைகளைப் பெற வேண்டும். இதுவே எமது பள்ளாகப் பாட்டொலியாக மிளிர வேண்டும்.

—சித்தாண்டிச்சபம.

## வளர்மதி புதிய மருமக்கள்

2788 மு. சி. சிறி இராகுலன், கொக்குவில்.

2789 ஏ. குணநாதன், கொக்குவில்.

2790 செ. மகாதேவா, புன்னாலைக்கட்டுவன்.

2791 கு. குமாரதாஸ், மட்டக்களப்பு.

2792 எஸ். அப்துல் கபூர், கொழும்பு—11

2793 அ. தவநாயகி, சோலையாவளவு.

2794 ஏர்சுலா பெனடிக்ட் யாழ்ப்பாணம்.

2795 செல்வி ஆ நீலம்மா நுவரெலி

2796 செல்வி சி. சரஸ்வதி, சாவகச்சேரி

2797 ஏ. பி. சுப்ரமணியம், பசறை.

2798 இரா. கறுப்பையா, பூண்டுலோயா.

2799 வ. நாகலிங்கம், கட்டுவன்.

2800 க. ஐயாத்துரை, மிருசுவில்.

2801 செல்வி மு. பழனியம்மாள், நுவரெலி.

2802 நா. முருகையா அச்சுவேலி.

2803 வை எம். அஸ்ஹார் கொழும்பு—12

2804 ந. குணசேகரன், கிளிநொச்சி.

2805 எம். எஸ். எல். எம். பாயிஸ், வறக்காப்பொல.

2806 சி. நவரத்தினம், நாவற்குடா.

2807 எம் ஜே. எம். லரீஸம், அனுத்காமம்.

2808 செல்வி ஐ. கனகம்மா, நெடுந்தீவு மேற்கு.

2809 செல்வி ஞானசௌந்தரி தேவப்பிரகாசம், கொழும்பு—12

2810 எம். முகமது லாபிர், சிலாபம்.

2811 நா. இரத்தின குமார், சுதுமலை வடக்கு.

2812 இ. சண்முகநாதன், ஊர்காவற்றுறை.

2813 வீ செ. கந்தசாமி, அச்சுவேலி.

2814 எஸ். சுந்தர இராசா, அனுராதபுரம்.

2815 த பத்மராஜா, மட்டக்களப்பு.

2816 மா. இந்திராணி, ஆனைக்கோட்டை.

2817 செல்வி எஸ். தவமலர், கிரான்.

2818 தம்பிமுத்து சோமசுந்தரம், மானிப்பாய்

2819 எம். கிருஷ்ண பிள்ளை, வாழைச்சேனை

2820 இரா. அறிவழகு, மாச்சம்பாளையம், சுந்தராபுரம் அஞ்சல், கோயம்புத்தூர்.

2821 எஸ். வள்ளியம்மை, மொறக்கட்டான்சேனை.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல 6.

பெயர்..............................................................

பாடசாலை.......................................................

விலாசம்...........................................................

..........................................

..........................................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம்

..........................................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தக் கம்பனி...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆள் இப்போது அவசியமில்லை. வெரி சொறி மிஸ்டர், கண்ணன்'' என்றார் பெரிய தோர் செயலைச் செய்து விட்டவர் போல்.

"அப்படிச் சொல்லாதீர்கள், எனக்கு மிகவும் கஷ்டமான நிலை, சேர். எப்படியாவது நீங்கள் தான்..."

"என்ன மிஸ்டர் நான் சொல்லுவது உமக்குவிளங்கவில்லையா? இங்குஇடம் காலியில்லை நீங்கள் போய் வரலாம்"

"தாங் யூ சேர்!"

முகத்திலே அடித்தாற் போல் கூறிவிட்டு கண்ணன் கிடு கிடுவென வெளியேறினான்.

'தர்மராஜாவாம் தர்மராஜா!'

***

"கமலம்" என்று அழைத்த வண்ணம் உள்ளே நுழைந்தான் கண்ணன்.

"அத்தான், இன்றைக்காவது......?" என்ற கேள்வியைப் பார்வையிலே பாய்ச்சியவளாய் கமலம் அவன் எதிரே வந்தாள்.

"அப்பாடா என்றைக்குத் தான் எமக்கு விடியுமோ! எங்கு போனாலும் எங்கள் கெட்ட காலமும் கூடவே வந்து விடுகிறது" என்ற கண்ணனின் பேச்சிலே வெறுப்பும் விரக்தியும் வழிந்தன.

"வீணாய் மனதை அலட்டிக் கொள்ளாதீர்கள், அத்தான் இதோ பாருங்கள், பிரபல பெண்கள் தையற்கடையொன்றில் திறமையான ஒரு தையற்காரி தேவை என்று விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள். இப்போதே நான் அங்கு போகப் போகிறேன்'—அடுத்த வீட்டிலிருந்து எடுத்து வந்த அன்றைய மாலைப் பத்திரிகையைக் கொடுத்து அந்தவிளம்பரத்தைக் கண்ணனிடம் காட்டியபடியே உற்சாகமாகத் துள்ளினாள் கமலம். தனக்குத் தையல் வேலை தெரிந்திருந்தது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று என்று அவள் உள்ளம் ஒரு பக்கத்தில் எண்ணி மகிழ்ந்தது.

"வேண்டாம் கமலம் நீ குழந்தைக்காரி, ஆடவன் ஒருவன் வீட்டில் மலைபோல இருக்கும் போது நீ வேலைக்குப்போவது அழகல்ல" என்று கூறி அவளைத் தடுக்கும் நிலையில் இப்போது கண்ணன் இல்லை. அவன் எண்ணமெல்லாம் அந்த ஒரு பொருளைச் சுற்றித் தான் சுழன்றன.

பணம்!

அவனும் அவன் மனைவியும் எந்தப் பஞ்சத்தோடும் பட்டினியோடும் வெஞ்சமராடத் தயாராயிருந்தார்கள். ஆனால் அவர்கள் நடுவே கிடக்கும் அந்தப் பச்சிளங் குழந்தை......

கண்ணனின் மௌன நிலை சம்மதத்திற்கு அறிகுறியென்பதை அறிந்து கொண்ட கமலம், அடுத்த கணமே உடையை மாற்றிக் கொண்டு தையற்கடை முதலாளியைச் சந்திக்கப் புறப்பட்டு விட்டாள்.

கமலம் எவ்வளவு உற்சாகத்தோடு வீட்டை விட்டு வெளியேறினாளோ அதே உற்சாகத்தோடு அரை மணித்தியாலங் கழிந்து திரும்பி வந்தாள். போதாதற்கு, "அத்தான்!" என்று குரல் கொடுத்து கண்ணனருகே ஓடிவந்தாள் தன் உற்சாகத்தை இன்னும் பிரபல்யப் படுத்துவது போல்.

"என்ன கமலம், காரியம் காயா பழமா?"—கண்ணனிடமிருந்த ஆவலான கேள்வி

"பழந்தான்! வெற்றி, வெற்றி, வெற்றி!"!

' கொன்கிறஜுலேஷன்ஸ் கமலம். அந்த தையல் கடை முதலாளி மிகவும் நல்லவராயிருக்க வேண்டும்''

"இல்லை அத்தான் தையல் கடையில் எனக்கு வேலை கிடைக்கவில்லை. எனக்கு முன்பே யாரோ ஒருத்தி போய்விட்டாள்."

"அப்படியானால்......?"

"ஆனால் நல்ல காலமாக அதற்கு அருகில் இருந்த பிரபல கம்பனியான தர்மராஜன் கம்பனியில் வேலை காலியாக இருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கு போனேன் முதலாளி தர்மராஜன் மிகவும் தங்கமானவர். நாளைக்கே என்னை வந்து வேலையை ஏற்றுக்கொள்ளும்படி சொல்லிவிட்டார்" என்று கூறிய பிறகுதான் கண்ணனின் முகம் கோரமாய் மாறுவதைக் கண்டாள்.

"என்ன தர்மராஜன் கம்பனியிலா?" அவன் வெறுப்பு வழியச் சிரித்தான். "அந்தக் கேடு கெட்டவனிடந்தான் நீ போவதற்கு முன் இதே வேலை கேட்டு நான் போயிருந்தேன். 'ஓடு' என்று கழுத்திலே பிடித்துத் தள்ளாக் குறையாகத் துரத்தி விட்டான். ஆனால் இப்போது பெண்ணொருத்தியைக் கண்டதும் அவன் உள்ளம் இரங்கி விட்டது. அவன் தர்மராஜன் அல்ல, கட்டாயம் காமராஜனாகத்தான் இருக்க வேண்டும்!"

அவள் பதில் பேசவில்லை

குழந்தை பாலுக்காக வீரிட்டது.

---

## சித்திரைத் திங்களில் முத்தமிழ் விழா

புங்குடுதீவு இளைஞர் சழகத்தின் ஆதரவில் எதிர் வரும் ஏப்ரல் 15, 16, 17-ந் தேதிகளில் முத்தமிழ் விழாவொன்றினை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெற இருக்கும் மேற்படி விழாவுக்கு வட மாகாண அரசாங்க அதிபர், தீவுப்பகுதியின் பாராளுமன்றப் பிரதிநிதி, யாழ்ப்பாண நகர மேயர், ஈழத்தின் தலை சிறந்த பத்திராதிபர்கள் சமூகமளிப்பார்களென எதிர் பார்க்கப்படுகிறது.

பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் திரு. சி. இ. சதாசிவப்பிள்ளை, நயினைப் புலவர் திரு. ஆ. இராமுப்பிள்ளை ஆகியோர் தமிழ் விழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார்கள் எனத் தெரிகிறது

---

## மாணவர் தேர்ச்சிச் சங்கம்

தலவாக்கொல்லை பகுதியைச் சேர்ந்த சின்ன வம்பரக் கொல்லை தோட்டத்தின் தினமதி இராப் பாடசாலையில் கடந்த 23-3-60 நடைபெற்ற மாணவர் தேர்ச்சிச் சங்க பொதுத் தேர்தல் விபரம் பின் வருமாறு:-

தலைவர்: ஆர். செல்லையா, உபதலைவர் கா. சிவலிங்கம், காரியதரிசி: எஸ். ஜெபமாலை, உபகாரியதரிசி: ஆர். பெருமாள், பொருளாளர்: பி. சின்னையா.

பாரதி இல்லத்திற்கு எஸ். ஜெபமாலை தலைவராகவும் ஆர். சுப்பிரமணியம் உபதலைவராகவும், வள்ளுவர் இல்லத்திற்கு பி சின்னையா தலைவராகவும் எம். வேலு உபதலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

---

# தமிழ்ச் சிறுகதை இலக்கியம்.........

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றுமைகளும் (Unities) இன்றியமையாதவை சொற் செட்டுத் தேவை. ஒவ்வொரு சொல்லும் கதை முன்னேற்றத்திற்குத் துணைபுரிய வேண்டும்; பாத்திரங்களின் குண நலங்களைப் புலப்படுத்துவதற்கு உதவியாய் நிற்றல் வேண்டும். சூழ்ச்சியை வெளிப்படுத்த ஏற்ற கருவியாக அமைதல் வேண்டும்.

### அடுக்குச் சொற்கள் ஆகாது

மனம்போன போக்கிற் செல்லாம் ஆண்டிடமில்லை. கதை தொடர்ந்து செல்லும் நெறியில் சொல் கருத்தாழம் தோன்ற பயிலப்படுதல் வேண்டும். கதையில் பிறிதொன்று உணர்த்துதற்கும் கூறியது கூறுதற்கும் (Repetitions) மிகைப்படக் கூறுதற்கும் (Exaggrations) இடங்கொடுத்தல் கூடாது. நிகழ்ச்சியை சொல்லோவியப்படுத்தல் விரும்பத்தக்கதன்று. அஃது வருணனையின் பாற்படும். நிகழ்ச்சிகளைச் சொற்கள் சுட்டிச் சொல்வதே நேரிய முறையாகும். விரித்துரைத்தல் யாண்டும் வேண்டப்படுவதன்று. ஆய்ந்தெடுத்த சில சொற்களால் பொருக்கி எடுத்த செவ்விய கருத்துக்களைக் குறிப்பினுணர்த்துதலே சிறுகதையின் சிரிய பண்பாகும். பொருட்குவியலும் அடுக்குச் சொற்களும் கதைப் போக்கிற்குப் பெருந்தடையாய் முடியும்.

### பாத்திரங்களின் பண்பு

நான்காவது, சிறுகதை இயற்கைக்குப் பொருந்திய தாயும் அறிவிற்குகந்ததாயும் அமைதல் வேண்டும். பாத்திரங்கள் மக்கள் பண்புகளையுடையனவாய்த் திகழ்தல் போற்றற்குரியது. கடவுட்டன்மை வாய்ந்தனவாய் அவை படைக்கப்பெறின் அஃது கிணறு வெட்டப் பூதம் வந்த கதையாய் முடியும். கதை மானுட இயலுக்கு அப்பாற்பட்டதாய் நம்புதற்கு இயலாததாய்த் தள்ளத்தக்கதாய் அமையும். கதை மனித ஆற்றலுக்கு உட்பட்டதாய் கொள்ளத்தக்கதாய் அமைதலே சாலவும் பொருத்தமுடைத்து. கேளாதன கேட்பனபோலவும் பேசாதன பேசுவன போன்றும் அமைத்தல் கதைக்கு இழுக்கு கதையில் சூழ்ச்சி மானிட இயற்கைக்கு ஒத்ததாய் அமைதல் வேண்டும். உரையாடல்கள் (Dialogues) பாத்திரங்களின் நிலைக்கேற்ப நிகழ்த்தப் பெறுதல் வேண்டும். ஆசிரியரது நடையும் திட்பநுட்பத்தோடும் இனிமையோடும் நடத்தல் வேண்டும்.

### கதை முடிவு

ஐந்தாவது, கதை நல்ல முடிவினையுடையதாய் அமைதல் பெரிதும் வேண்டற்பாலது. எழுத்தாளனின் திறமை அவன கதையைத் தொடங்குதலிலும் முடித்தலிலுமே அமைந்து கிடப்பது. அஃதே அவன் ஆற்றலை உரைத்து நிர்ணயம் செய்யும் உரைகல். கதைத் தொடக்கம் உடல்; கதை முடிவு உயிர். உடலும் உயிரும் ஒத்து இயங்குவது போலத் தொடக்கமும் முடிவும் ஒத்துச் செல்லுதல் வேண்டும் இறுதியில் கதை முழுமையை எய்தியதென்ற உணர்ச்சியைத் தாண்டக் கூடியதாய்ச் சிறுகதையின் முடிவு அமைதல் வேண்டும். பல்லியம் ஒத்திசைத்து இனிதே முடிவடைவது போலச் சிறுகதையில் பல நிகழ்ச்சிகள், பல இன் சொற்கள் ஒத்துச் சென்று நல் முடிவை அடைதல் வேண்டும்.

### ஷெல்லி வகுத்த இலக்கணம்

சிறு கதையைப் போற்றி வளர்த்த பிற நாட்டு எழுத்தாளர்கள் பலர். சிறுகதைக்கு இலக்கணம் வகுத்தோரும் பலராவர். ஆனால் ஷெல்லி (Shelley) சிறுகதையின் இலக்கணத்தை ஒரு வாக்கியத்தில் அமைத்துக் கூறிப் பெருமை பெற்றார். அது பின்வருவது:—

"The outstanding quality of a short story is that it should deal with a single them highly dignified, emotion being sustained throughout the story"

மேலே கூறிய இலக்கணங்களை நன்கறிந்து சிறு கதை எழுதப்படுமாயின் அஃது மேலாந்தரத்தினை உடையதாக மிளிரும் என்பதற்கு ஒரு சிறிதும் ஐயமில்லை இவ்விலக்கணங்களெல்லாம ஒருங்கே அமைந்து காணப்படும் சிறுகதைகளையே ஆங்கார் ஒயில்டு போன்ற அறிஞர்கள் தூய விலை மதித்தற்கியலாத நன் மணிகள் என்பர். (Short stories are sacred gems) தமிழ் எழுத்தாளர்கள் இவ்விலக்கணங்களை மனத்தகத்தே இருத்தி, சிறு கதைகளை எழுதி சிறு கதை மணிகளாக விளங்குவார்களாக.

---

# அன்புத்...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

யார் தெரியுமா?...... என்னை இன்று வாழ வைத்ததெய்வம், எனது இன்றைய செல்வ நிலைக்கு மூலகாரணமாய் இருந்த பெண் தெய்வத்தின் மகன் தான் அவன்!...... அவன் யார்?...... என அறிய நீ ஆவலாய் இருப்பாய்...... அவன் தான் மாதவி! அந்த நாட்டுக்கொரு நல்லவரின் மகனை, அந்த அல்லி பெற்ற பிள்ளையை நீ கணவனாக அடைந்ததை யிட்டு என்னுள்ளம் புளகாங்கிதம் அடைகிறது!......

உனது திருமணத்திற்கு முன்பு, உனது தூய்மையான சகோதர வாஞ்சையை உணராமல் உதறித் தள்ளி, நாலு வேலி நிலம் பெரிதெனக் கருதி உன்மேல் பாகப் பிரிவினை வழக்குத் தொடர்ந்து நல்ல தீர்ப்பு வழங்கும்படி கோர்ட்டிற்கு உன்னை இழுத்த நான் "படுபாவி!'... நான் செய்த குற்றத்திற்குப் பிராயசித்தம் தேட ஒரே வழிதானுண்டு!... கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்றபடி நானும் நீயும் முன் போல ஒற்றுமையாக இருப்பது தான அந்த வழி!...

வண்ணக்கிளியே,...என் அன்புத் தங்கையான நீ ஆசை அண்ணனின் வேண்டுகோளை நிறைவேற்றுவாய் என நம்புகிறேன் எனது மருமகளை, அதாதவது உனது அருமை மகள் அபிராமியை காண நான் ஆசைப்படுகிறேன்!... அவளைவரையுப காண, விநாயக சதுர்த்தி தினமான நாளைக்கு நான் உனது வீட்டிற்கு வருவேன்!...

உன் அன்புள்ள அண்ணன்

விமலநாதன்

குறிப்பு:

மேற்படி கடிதத்தில் 1959-ல் வெளிவந்த தமிழ்ப்படங்கள் பல ... எழுத்துக்களில் ... வேண்டுமானால் கடிதத்தை இன்னொரு தடவை படிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

# மனைவி நடத்தை..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வுகளால் குழந்தைகளின் உண்மையான பெற்றோரை அறிந்துகொள்ள முடிகிறது.

இது தவிர மருத்துவ மனைகளில் பிறக்கும் குழந்தைகள் சில சமயங்களில் எதிர்பாராத விதமாக மாறுபட்டு ... இந்தச் சோதனையால் எளிதில்கண்டுபிடித்து விடலாம்.

---


சுதந்திரன் இல்லையேல் சுபிட்சமில்லை

# மௌலானா

அச்சடி சீத்தைகள்



ரமணீகரமாக காட்சியளிக்க இன்றே தெரிவு செய்யுங்கள்

★ கண்ணைக் கவரும் டிஸைன்கள்.
★ சாயம் மங்காதவை.
★ நீடிய உழைப்பு.
★ தரத்தில் உயர்வானது.

விசேஷமாக வரவழைக்கப்பட்டிருக்கும் புத்தம் புதிய டிசைன்களை, தெரிவு செய்ய இன்றே விஜயம் செய்யுங்கள்.

மௌலானா (சிலோன்) லிமிட்.,
கொழும்பு. மருதானை, கண்டி.

புனிதமான புத்தாண்டை
பூரிப்போடு கொண்டாட
விரைவில் வருகிறது!

# சினிமாஸ் திரைகளில்

ஜெமினி கணேசன், சாவித்திரி, எஸ். வி. ரங்கராவ், ஜமுனு, கே. ஏ. தங்கவேலு, ஈ. வி. சரோஜா, டி. எஸ். பாலையா
ஆகியோர் நடித்த

# கடன் வாங்கி ★
# ★ கல்யாணம்

இன்றே பாருங்கள்!

# இதுவே கடைசி வாரம்!

## கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)




பிரேம் நசீர், எஸ். வி. சுப்பையா, ஜி. முத்து கிருஷ்ணன், ராமராவ், பாலையா, பக்கிரிசாமி சகஸ்ரநாமம்
எம். என். ராஜம், ஸ்ரீரஞ்சனி, என். லலிதா,
நடித்த

# ஒரே வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை,196-ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் ... சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட். ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்கமாவத்த, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 ஏப்ரல் 3-ம்தேதி பிரசுரிக்கப்பட்டது.